வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
# SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்
மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்




புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 புரட்டாதி திங்கள் 31-ம் நாள் (16 10—60) ஞாயிற்றுக்கிழமை ரபி.ஆகிர் 24 | இதழ் 20

அரசாங்க ஊழியர்களின்

# சம்பளப் பட்டியல்கள் சிங்களத்தில் தயாரிக்கப்படுவதற்கு சிறுப்பர்கள் சங்கம் எதிர்ப்பு

## அதோடு 'மாரடிக்கமுடியாது' என நிதிமந்திரியிடம் நேரில் சொல்லத் தயார்

### வற்புறுத்தப்பட்டாலும் ஓய்வுபெற மறுப்பர்

(சுதந்திரன் நிருபர்)

அரசாங்க ஊழியர்களின் சம்பளப் பட்டியல்கள் சிங்களத்தில் தயாரிக்கப்படுமானுல் அதற்குச் சங்கீதியாக எதிர்ப்பு தெரிவிப்பது என்றும், அதோடு தங்களால் 'மாரடிக்க முடியாது' என்று நிதி மந்திரியிடம் நேரில் சென்று சொல்வது என்றும் அகில இலங்கையிலும் அரசாங்க அலுவலகங்களில் தமிழ் பேசும் சிறுப்பர்களாக உள்ளவர்கள் திட்டமிட்டு இருக்கிருர்கள் என்று தெரிகிறது.

சிறுப்பர்கள் சங்கம் பலம் பொருந்திய ஒரு சங்கமாகும். இலங்கை முழுவதிலுமுள்ள சுமார் 350 அரசாங்க சிறுப்பர்கள் இதில் அங்கம் வகிக்கிருர்கள்; கடந்த எட்டு ஒன்பது வருடகாலமாக இந்தச் சங்கம் இயங்கி வருகிறது.

#### சிறுப்பர்கள் கவலை

இந்தச் சங்கத்தில் உள்ள சிறுப்பர்களில் அரைவாசிப் பேர் அளவில் தமிழர்களாய் இருக்கிருர்கள். சிங்களத்தில் சம்பளப் பட்டியல்கள் தயாரிக்கப்படுமாயின் தாம் எப்படி அவற்றிலுள்ள பெயர்களை வாசிப்பது என்பதும் எப்படிச் சரியாகப் பணம் கொடுக்க முடியும் என்பதுந் தான் அவர்கள் கவலை. எத்தனையோ வருடங்களாகச் சேவை செய்து வரும் இவர்கள் இப்போது திடுதிப்பென்று தமக்கு இந்த முட்டுக்கட்டை போடப்படுவது பற்றி ஆத்திரமும் அடைகிருர்கள்.

#### சிங்கள நிபந்தனை இல்லை

"நாம் சிறுப்பர் வேலைக்கு அமர்த்தப்பட்ட போது சிங்களத்தில் வேலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. அப்படி இருக்க இப்போது எப்படி எமமை நிர்ப்பந்திக்க முடியும்?" என்று ஒரு அரசாங்க சிறுப்பர் சுதந்திரன் நிருபரிடம் கேட்டார்.

#### சிங்களப் பட்டியல் வந்து விட்டதே

மராமத்து இலாகாவில் ஊழியருக்கு சம்பள முன்பணம் கொடுப்பதற்கு கடந்த 7-ந்தேதி வாக்கில் தயாரிக்கப்பட்ட சம்பளப் பட்டியல் சிங்களத்தில் வந்து அங்குள்ள சிறுப்பர்களையெல்லாம் திணறடித்தது தெரியுமல்லவா? நாளை எல்லா சிறுப்பர்களுக்கும் இப்படியான நெருக்கடி வருமானுல் என்னதான செய்வீர்கள்?"—இப்படிச் சுதந்திரன் நிருபர் கேட்ட போது பிரஸ்தாப சிறுப்பர் பின்வருமாறு கூறினூர்:—

#### எதிர்ப்போம் மறுப்போம்

"அதுதான் ஐயா இப்பொழுதே திட்டமிட்டு உள்ளோமே. சம்பளப்பட்டியல் சிங்களத்தில் வருமானுல் துணிந்து சங்க ரீதியாக எதிர்ப்போம். அதை வைத்துக்கொண்டு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாது என்று மறுப்போம். நிதிமந்திரியிடம் வேண்டுமானுல் நேரில் சென்று இதைச் சொல்லுவோம்" என்ருர்.

#### ஓய்வு பெறுவதில்லை

"உங்களுக்கு வேலை செய்ய முடியாவிட்டால் பென்ஷன் உரிமைகளோடு ஒய்வு பெறுங்கள் என்று நிதிமந்திரி கூறினுல்.........?"

"கூறினுல் என்ன, வற்புறுத்தினுலும் கூட நாம் அப்படிச் செய்யோம். கட்டாய ஓய்வு பெறும் வயது வரும் வரை ஓய்வு பெறுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. எங்கள் உரிமையை நாங்கள் நிலை நாட்டுவோம்."—இப்படி அந்தச் சிறுப்பர் சுதந்திரன் நிருபர் முன்னுல் முழங்கினூர்.

# பத்து வருட சேவை செய்த ஆசிரியருக்கு ஆரம்ப சம்பளம்

## கல்வி இலாகாவின் கைங்கரியம்: வகுப்பு கலவரத்தால் வந்தவினை

(சுதந்திரன் நிருபர்)

பத்துவருடச் சேவை செய்த பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவருக்கு கல்வி இலாகா இன்னமும் ஆரம்ப அடிப்படைச் சம்பளமே வழங்கிவருகிறது. 1958 வகுப்புக் கலவரம் காரணமாக அவர் கொழும்பில் தாம் கடமையாற்றிய பாடசாலையை விட்டு யாழ்ப்பாணம் சென்று புது நியமனம் பெற்றதை அடுத்து தமது 10 வருடச் சேவையை இழந்தார்.

தற்போது திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் கடமையாற்றும் திரு பொ. கீர்த்திசிங்கம் ஆசிரியர் 1-3-50-ல் ஆசிரியராக நியமனம் பெற்றவர். 1958 வகுப்புக் கலவரத்தின் போது கொழும்பு கொட்டாஞ்சேனை கதீட்ரல் கல்லூரியில் கடமை யாற்றினுர்.

#### குண்டுக்குப் பலி

கலவரத்தின்போது துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகிய தமிழர்களில் இவரும் ஒருவர். இரவோடு இரவாக யாழ்ப்பாணம் சென்று விட்டார். பின்னர் கொழும்பு திரும்ப மனம் இல்லாமல் அங்கிருந்தே தாம் தமது ஆசிரியப் பதவியை ராஜினுமாச் செய்து விட்டதாக உரியவர்களுக்கு அறிவித்தார்.

#### புது நியமனம்

கடந்த ஆண்டு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் நியமனம் பெற்ருர். ஆயினும் அவரது பழைய சேவையை ஒப்புக் கொள்ளக் கல்வி இலாகா மறுக்கிறது; புது ஆசிரியராகக் கணித்து ஆரம்ப அடிப்படைச் சம்பளமே வழங்குகிறது.

இதற்கு கல்வி இலாகா காட்டும் காரணம் பிரஸ்தாப ஆசிரியர் முன்னர் இருந்த பாடசாலையிலிருந்து முறையாக ராஜினுமாச் செய்து விலகவில்லை என்பதேயாகும். கலவரத்தின் போது குண்டுபட்டு யாழ்பாணம் சென்ற போது அவர் லீவு பெற்றுக் கொண்டு முறையாகச் சென்றிருக்க வேண்டுமாம்.

# நாற்பது பேரை இப்படி நடத்துவது நியாயமா?

## நிதி அமைச்சரிடம் தற்காலிக தமிழ் தட்டெழுத்தாளர் சங்கம் கேள்வி

(சுதந்திரன் நிருபர்)

தற்காலிக சேவையில் 1956 தொடக்கம் 1960 வரையுள்ள காலத்தில் அரசாங்க இலாகாக்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட தமிழ்த் தட்டெழுத்தாளர் 40 பேருக்கும் பாரபட்சம் காட்டப் படுவதாகக் கூறி அவர்களை இப்படி நடத்துவது நியாயமா என்று அகில இலங்கை அரசாங்க தற்காலிக தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்கம் நிதி மந்திரியைக் கேட்டிருக்கிறது.

தற்காலிக சேவையிலுள்ள தமிழ்த் தட்டெழுத்தாளர்கள் ஏனைய சிங்கள ஆங்கில தட்டெழுத்தாளர்கள் அனுபவிக்கும் சலுகைகளையோ, உரிமைகளையோ அனுபவிக்க முடியாதவர்களாய் இருக்கிருர் என்பதையும் சமவேலை செய்தும் சமசம்பளம் பெருமல் இருக்கிருர்கள் என்பதையும் சங்கம் நிதி அமைச்சருக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறது.

#### தமிழில் பரீட்சை இல்லை

1955-க்குப் பிறகு தமிழ் தட்டெழுத்தாளர் பரீட்சை வைக்கப்படாததையும்சங்கம் நிதி அமைச்சருக்கு எடுத்துரைத்து. இனிமேல் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் போட்டிப் பரீட்சைகள் வைக்கும் போது தமிழிலும் வைத்தாக வேண்டும என்று கேட்டிருக்கிறது.

#### வேற்றுமையை அகற்றுக

சங்கத்தின் மற்றக் கோரிக்கை தற்காலிக சேவையிலுள்ள ஆங்கில, சிங்கள தட்டெழுத்தாளருக்கு மிடையே உள்ள சகல வேற்றுமைகளையும் நீக்க வேண்டும் என்பதாகும்.

தொய்வு (ASTHMA) சங்காரி
ரிச்லெட்ஸ் பெக்டோரல்

* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர் புர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டை வலி






இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. இளை நோயினுல் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்க் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன் : 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை வாழ வைக்க வழி ஒன்றுதான் உண்டு

## தமிழர் தமிழுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்; எல்லாக் கருமங்களையும் தமிழில் செய்ய வேண்டும்

## ஆங்கிலத்தை நம்பி இருப்போருக்கும் இனி அதோ கதிதான்—காலம் மாறுகிறது

எழுச்சி! எங்கும் எழுச்சி! எதிலும் எழுச்சி! "குட்மோர்ணிங்" என்று சொல்வதில் இன்பம் கண்டவர்கள் இன்று 'ஆயுபோவன்' என்று சொல்வதில் பெருமையடைகின்றனர். ஆங்கிலத்தில் எழுதுவதில் பேசுவதில் பெருமையடைந்தவர்கள், இன்று சிங்களத்தில் எழுதுவதில பேசுவதில் இன்பம் காணுகின்றனர்.

ஆங்கில ஏடுகளிலும் நூல்களிலும் ஆர்வம் காட்டியவர்கள், இன்று சிங்கள ஏடுகளையும் நூல்களையும் தேடி ஓடுகின்றனர். பொதுக்கூட்டங்களில் ஆங்கிலத்தில் பேசி வந்தவர்கள் இன்று சிங்களத்தில் முழக்கமிடுகின்றனர்.

இல்லங்களில், கோவில்களில் சிங்களம். மணச்சடங்கு, பிணச்சடங்கு, பிற சடங்குகளில் சிங்களம். அன்றாட வாழ்க்கை நடத்துபவர்கள் தொடக்கம் அரசாங்க ஊழியர்கள் வரை, ஆங்கிலப் பட்டதாரிகள் தொடக்கம் அரசியல் தலைவர்கள் வரை ஆண்களும் பெண்களும் "நமது மொழி சிங்களம்! நாம் சிங்களவர்!" என்று கூறுவதில் பெருமிதம் கொள்ளுகின்றனர்! பூரிப்படைகின்றனர்!

### ஆங்கிலத்தை விடவில்லை

இத்தனைக்கும் ஆங்கிலத்தை அவர்கள் கைவிட்டு விட்டார்களென்றால் அதுதானில்லை. ஆங்கிலத்தின் அவசியத்தையும் அவர்கள் உணர்ந்துதானிருக்கிறார்கள். "ஆங்கிலம் எவ்வளவு பெருமைவாய்ந்த மொழியாயிருந்தாலும் அது நமக்கு அன்னிய மொழி; நமது தாய்மொழிக்குப் பின்னரே ஆங்கிலம்" என எடுத்துரைக்கின்றனர், தாய்மொழிப்பற்றுக் கொண்ட தன்மானச் சிங்களர். ஆட்சியினரையே ஆட்டிப்படைக்கும் அளவுக்கு எழுச்சி கொண்டுள்ள சிங்கள மக்களுடன் தமிழ் பேசும் மக்களை எண்ணிப் பார்க்கும் போது வேதனையும் வெட்கமும் இதயத்தை வாட்டுகிறது.

### தமிழ்ப் பெயர்க் கொலை

'குட்மோர்ணிங்' என்று சொல்லி வந்த தமிழர்கள் இன்றும் 'குட்மோர்ணிங்' என்றுதான் சொல்கிறார்கள். தமிழிலே சொல்ல விரும்பும் சிலரோ 'நமஸ்காரம்' என்றோ 'நமஸ்தே' என்றோ சொல்கிறார்களே தவிர 'வணக்கம்' என்ற தூய இனிய தமிழ்ச் சொல்லை உபயோகிப்பவர்களைக் காண்பது அரிதாகவிருக்கிறது அவர்கள் பேசுவதோ அரைகுறை ஆங்கிலம், அல்லது ஆங்கிலமும் கலப்புத் தமிழும் கலந்த குதம்பல் மொழி

ஆங்கில ஏடுகளிலும் நூல்களிலும் அவர்கள் காட்டும் ஆர்வத்தில் ஒரு பகுதியையேனும் தமிழ் ஏடுகளிலும் நூல்களிலும் காட்டுகிறார்களில்லை. ஆங்கிலத்தில் எழுதுவதில், பேசுவதில் அவர்களுக்கிருக்கும் மோகம் இன்சுவை சொட்டும் தமிழிலே இருப்பதில்லை. ஆங்கிலம் எழுதத் தெரியாதவர்கள் கூட பிழையாகவேனும் ஆங்கிலத்தில் ஒப்பம் போடுவதில் பெருமை கொள்கிறார்கள். உதாரணத்துக்கு 'கணேசு' என்னும் பெயருடையவர் ஆங்கிலத்தில் ஒப்பமிடப் போய் கனேஸ் (Kanais) என்று தனது பெயரைய கொலை செய்து விடுகிறார்.

### ஆங்கிலக் கொலை

ஆங்கிலத்தில் முகவரிகளை எழுதும் ஒரு சிலர் 'Mr' என்பதற்குப் பதில் 'Sri' என எழுதி தமிழுக்குத் தாங்களும் ஏதோ சேவை செய்துவிட்டதாக எண்ணிப் பூரிப்படைகின்றனர். 'ஸ்ரீ' என்ற சொல் வடசொல் என்றும் 'திரு' என்பதே அதற்குச் சமமான தமிழ்ச் சொல் என்றும் தமிழ் அறிஞர்கள் பலர் எடுத்துரைத்தும் இவர்கள் இதை இன்னும் உணர்வதாயில்லை

ஆங்கிலத்துடன் 'Sri' என்ற வடசொல்லைப் பாவித்து ஆங்கிலத்தையும் கொலை செய்து தமிழுக்கும் இழுக்குத் தேடுகின்றனர். இவை போன்ற உதாரணங்களை எடுத்துரைக்கில் அவற்றுக்கு முடிவே யிராது.

### ஆபத்து

மொழியைப் பற்றிய வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ளாத காரணத்தினால், மொழிப் பற்றும் உணர்ச்சியும் குன்றி, வகுக்கப்பட்ட ஒரு

பொதுச் செயலாளர்
அ. இ. பகுத்தறிவு
இயக்கம்

பாதை இன்றி, தமிழ் மக்கள் பலகோணங்களில் போய்க் கொண்டிருக்கின்றனர்.

வரலாற்றைப் பண்பாட்டைப்பற்றிய பேச்சுக்களைத் தான் இப்போதைக்குஒதுக்கி வைத்தாலும், இன்று தமிழ் மொழியையும் மக்களையும சூழ்ந்துள்ள ஆபத்துக்களைப் பற்றியாவது தமிழ் மக்கள் சிறிது சிந்தித்து செயலாற்ற வேண்டாமா?

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் தனிச் சிங்களச் சட்டம் கட்டாயம் அமுலுக்கு கொண்டு வரப்படுமென ஆட்சியிலுள்ள பொறுப்புள்ளவர்கள் கூறி வாய் மூடு முன்பே அரசாங்க சேவையிலுள்ள தீவிரவாதிகள் செயல்படும் வேகத்தைப் பார்த்தால் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே அரசாங்க அலுவலகங்கள் எங்கும் சிங்களம் திணிக்கப்பட்டுவிடும் போல் தெரிகிறது.

### தமிழர்கள் தமிழைப் புறக்கணிக்கிறார்கள்

தமிழ்மொழி வாழுமா அழிந்து விடுமா எனும் ஏக்கம் குடி கொண்டுள்ள அந்த காரமான வேளையில்கூட தமிழ் மக்கள் அரசாங்க அலுவலகங்களுக்கு எழுதும் கடிதங்களைத் தமிழில் எழுதுகிறார்களில்லை தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்குத் தமிழில் பதில்கள் அனுப்பும் வழக்கம் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. ஆங்கிலத்திலோ, சிங்களத்திலோ எழுதும் கடிதங்களும் கவனிக்கப்பட்டுத்தான் வருகின்றன. தமிழிலே எழுதப்பட்ட காரணத்தினால் அவைகள் புறக்கணிக்கப்படுவதில்லை தமிழர்கள் தமிழைப் புறக்கணிக்கிறார்களேயன்றி, அரசாங்கம் தமிழைப் புறக்கணிக்கவில்லை.

தனிச்சிங்களச் சட்டம் அமுலாக்கப்பட்டாலும், தமிழ் மக்கள் தமிழிலேயே கடிதங்களை எழுதி வருவார்களானால், அரசாங்க அலுவலகங்களில் தமிழுக்கும் இடமிருக்கும். தமிழ் மக்கள் தமிழிலே கடிதங்களை எழுதாது ஆங்கிலத்திலே எழுதிக் கொண்டிருப்பார்களானால், தமிழுக்கு இடமில்லாமல் போவது மாத்திரமன்றி கடிதங்கள் எல்லாம் சிங்களத்திலேயே எழுதப்படவேண்டும் எனும் கட்டாய உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்கக்கூடும்.

### ஆங்கிலத்தை நம்பி இருப்போர் கதி

ஆங்கிலத்தில் கடிதங்களை எழுதிக்கொண்டிருப்பவர்கள் அரசாங்கம் எப்போதும் ஆங்கிலத்திலேயே பதில்கள் எழுதிக் கொண்டிருக்கும் என மனப்பால் குடித்துக் கொண்டிருப்பது பகற்கனவாகவே முடியும் நிச்சயமாக ஆங்கிலம் அரசாங்க அலுவலகங்களிலிருந்து நீக்கப்படப் போகிறது அப்போது ஆங்கிலத்தில் எழுதப்படும் கடிதங்களுக்குச் சிங்களத்திலேயே பதில்கள் அனுப்பப்படுமேயன்றி தமிழில் அனுப்பப்படமாட்டா.

தமிழுக்காகத் தமிழ் மக்கள் அரசாங்கத்துடன்

(13-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

**பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.**

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

**பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.**

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


தமிழரிடம்

## ஓருலகக் கொள்கை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது

### சமரச சன்மார்க்கம் அவர்கள் நெறி

## பழந்தமிழ் நூல்கள் இவற்றைக் கூறுகின்றன

(பண்டிதர் கா. பொ. இரத்தினம்)

(மாஸ்கோவில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் நிகழ்த்திய சொற்பொழிவின் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது.)

தமிழ்ச் சங்கங்களின் காலத்திலே தோன்றியன வெனக் கூறப்படும் நூல்களில் இப்பொழுது தொல்காப்பியமும், மேற்கணக்குக் கீழ்க்கணக்கு நூல்களுமே கிடைக்கின்றன. ஏனைய வெல்லாம் கடலாலும், நெருப்பாலும் கறையானாலும் அழிக்கப்பட்டன. இரண்டாஞ்சங்க காலத்தில் நிகழ்ந்த கடல் கோளினால் அழிக்கப்பட்ட நூல்களைப் பற்றித் திருவிளையாடற் புராணங் குறிப்படுகிறது.

### தொல்காப்பியம

தொல்காப்பியமேஇப்பொழுதுள்ள தமிழ் நூல்களில் மிகப் பழையதெனக் கொள்ளப்படுகிறது. தொல்காப்பியம் தோன்றிய காலம் பற்றிக் கருத்து வேற்றுமைகள் உண்டு. தொல்காப்பியப் பாயிரத்திலே ஐந்திரம் எனும் வடமொழி இலக்கண நூலைப்பற்றிக் கூறப்படுவதால், தொல்காப்பியம் கி. மு. ஏழாம் நூற்றாண்டிலே தோன்றியதெனக் [illegible] வர்.

### இலக்கிய நூல்களும் இருந்தன

கடைச்சங்க நூல்கள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முந்தியவை என்பது எல்லோரும் ஏற்றுக்கொண்ட முடிவாகும். தொல்காப்பியமே இக்கடைச்சங்க நூல்களுக்கு இலக்கணமாக விருந்ததென்பர். தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாதலின் அதற்குமுன் பல இலக்கிய நூல்களிருந்திருத்தல் வேண்டும் தொல்காப்பியத்திலேயே இதற்குப் பல சான்றுகள் உண்டு ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்த காலத்திலேயே சிறந்த இலக்கியத்தை உடையவர்களாயிருந்த தமிழர்கள் பல நூல்களை ஆக்கியிருப்பார்கள் என்பதும, அந்நூல்கள் யாவும் அழிந்துவிட்டன என்பதும், அந்நூல்களிலே தொல்காப்பியமே எஞ்சியது என்பதும் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க முடிபுகளாகும்.

### ஆரியர்பற்றித்தான் நூல்கள்

தொல்காப்பியத்தையும் கடைச் சங்க நூல்களையும் பற்றிப் பிற நாட்டினர் இன்னும் நன்கு அறிந்துகொள்ளவில்லை. சமஸ்கிருத நூல்கள் பல ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டமையால சமஸ்கிருதத்தை மேனாட்டு அறிஞர்கள் நன்கு கற்றற்கு வாய்ப்பு உண்டாயிற்று இதனால் இந்திய ஆரியருடைய பண்பாடு நாகரிகம் முதலியனபற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டன. இந்தியாவின் பழமையையும் பெருமையையும் பற்றிப் பேசும் பிற நாட்டறிஞர்கள் ஆரிய நாகரிகத்தையும் சமஸ்கிருத மொழியையும் பற்றியே பேசத் தொடங்கினர்.

### பேராசிரியர் கருத்து

பேராசிரியர் சூல்கபெளாக்குக் கூறுவதைப் போல் தனியியல்புடைய பழம்பெரும் பண்பாட்டையும், உலகிலேயே பழமைமிக்க நாகரிகத்தையும், இந்தியாவின் மிகப் பழைய மொழியினையும் உரிய தமிழரைப்பற்றிப் பிற நாட்டார் நன்கு அறிதற்குப் போதிய வாய்ப்புக்கள் உண்டாகவில்லை. அவர்களுடைய நூல்கள் ஐரோப்பிய மொழிகளிலே மொழி பெயர்க்கப்படவில்லை, இப்பொழுது தமிழரையும் தமிழையும் பற்றிப் பிற நாட்டினர் சிறிது அறியத் தொடங்கியதற்கு ஐரோப்பிய அறிஞர்கள் சிலருடைய அருந்தொண்டே காரணமாகும். இந்த அறிஞர்களுக்கும் கடைச் சங்க நூல்கள் முழுவதும் முன்னர்க்கிடைக்கவில்லை.

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

குயுக்தி



ராஜா ஆனந்தம், மண்டூர்.

கே: 'விவாகரத்து' என்பதன் பொருள் என்ன?

ப: விவாகரத்து என்றால் சம்பந்தப்பட்ட இருவரும் இனித் தனி வழி போகலாம் என்பதற்கு அனுமதியாகும்.

கே: பெண்கள் எத்தனை வகைப்படுவர்?

ப: பெரும்பாலும் இரண்டு வகைப்படுவர். ஒரு சாரார் தங்கள் வாழ்க்கையை சிறு கதையாக அமைத்து ஒரு இதழோடு முடித்துக் கொண்டவர்கள். இன்னொரு சாரார் வாழ்க்கையைத் தொடர்கதையாக அமைத்து நீட்டி முழக்கிக் கொண்டு போபவர்கள்.

கே: தங்கள் வாழ்வின் இலட்சியம் என்ன?

ப: என் வாழ்வின் இலட்சியம் இரண்டு தான் ஒன்று வாழும் காலத்தில் நன்றாக வாழ்ந்து விடவேண்டும் என்பது. இரண்டு, சாகும் காலத்தில் நன்றாகச் செத்து விட வேண்டும் என்பது. அதற்குப் பின் என்ன என்பது பற்றி எனக்குக் கவலையே இல்லை. அந்தக் கவலையைப் பிறவிப் பெருங் கடலை நீந்துவதற்காக வாழ்நாள் முழுவதும் கவலைப் பட்டழியும் கனவான்களுக்கு விட்டு விடுகிறேன்.

ஃ

எஸ். கருப்பையா, பதுளை.

கே: இலங்கையில் எத்தனையோ பத்திரிகைகளில் எத்தனையோ பேர் கேள்வி பதில் சொல்கிறார்கள். ஒன்று கூடக் குயுக்தியாரின் பதில்கள் போல் சுவைப்பதாக இல்லையே? உங்கள் அபிப்பிராயம் என்ன??

ப: இது பற்றி ரஸிகர்கள் தான் அபிப்பிராயம் கூற முடியுமே தவிர நான் அபிப்பிராயம் கூற முடியுமா? பலர் என்னைப்போல் பதில் சொல்ல முயறசிக்கிறார்கள். அது வரவேற்கக் கூடியதே. அனேகர் தோல்வி கண்டு விட்டார்கள் அது வருந்தக் கூடியதே. ஒரு சிலருடைய பதில்கள் பெருமளவில் நன்றாயிருக்கின்றன. பாராட்டுகின்றேன்.

ஃ

எஸ். பாலகிருஷ்ணன்,
கொழும்பு.

கே: அக்காலத்தைவிட இக்காலத்தில் ஆண் பெண்களிடையே சிறு வயதிலேயே காதல் முளைக்கிறது. காரணம் என்ன?

ப: காரணம் பல; சினிமாப்படங்கள், பாடசாலைகள், பாடசாலைப் பாடப் புத்தகங்கள், அவற்றில் வரும் இலக்கியப் பகுதிகள், வானொலி நிகழ்ச்சிகள், கால்பேஸ் கடற்கரை, பத்திரிகைப் படையெடுப்பு இவையெல்லாம் சேர்ந்து பிள்ளைகளைப் பிஞ்சிலேயே பழுக்க வைத்து விடுகின்றன. கைவிட்ட பால்ய விவாக முறையை வெகு விரைவில் திரும்பவும் உலகம் கையேற்க வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஃ

திருமதி மு. பரமசிவம், கம்பளை.

கே: கர்ப்பத் தடையைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: உலகில் கர்ப்பந் தடுக்கப்பட வேண்டிய அளவிற்கு வந்து விட்டது என்பதில் எனக்கு மாறுபட்ட அபிப்பிராயம் கிடையாது. ஆனால் கர்ப்பத்தை எப்படித் தடுப்பது என்பதில் தான் பலரும் மாறுபட்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்து மண்டையுடைத்துக் கொள்ளுகிறார்கள். கர்ப்பத்துக்கு கதவு போடுவதை விடக் காமத்துக்கு கதவு போடுவதுதான் உயர்ந்த வழி. அதற்காக வேண்டிக் காமத்துக்குக் கதவு போட முடியாதவர்கள் கர்ப்பத்துக்கும் கதவைத் திறந்து விட வேண்டும் என்பது அவசியமில்லை. இலங்கைவாழ் தமிழரைப் பொறுத்த வரையில் அவர்கள் கர்ப்பத்தடை அனுஷ்டிப்பது புத்தியல்ல. தமிழர் மேலும் மேலும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகப் போதல் ஆபத்தானது. தமிழர் தொகை பெருக வேண்டும் என்ற ஆவல் உள்ளவன் நான். ஜனத்தொகையில் தானே இன்றைய அரசியலே தங்கியிருக்கிறது.

ஃ

மெ. கருப்பையா,
உடப்புஸல்லாவை.

கே: தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுள்ளே சாந்தமானவர் யார்? கோபக்காரர் யார்?

ப: சாந்தமானவர் என்று சொல்லக் கூடியவர் தந்தை செல்வநாயகம் தான். இன்பமும் துன்பமும் அவர் முகத்தில் ஒன்றாகவே தெரியும். நீங்கள் அவரிடம் ஏதையாவது சொல்லிக் கொண்டேயிருந்தால் அவர் பொறுமையோடு கேட்டுக் கொண்டேயிருப்பார். பதிலே சொல்ல மாட்டார். ஆனால் முகத்தில் சாந்தம் தவழும். அவருக்கு அடுத்த படியாக எதைச் சொன்னாலும் கேட்டுக் கொதிக்காமல் ஒரு சிரிப்பின் மூலம் சமாளித்து விடுபவர் மட்டக்களப்பு எம். பி இராசதுரை. திருமலைப் பிரதிநிதி இராசவரோதயத்தின் முகத்தில் சாந்தமும் உறக்கமும் கலந்து உறைந்திருப்பதைக் காணலாம். டாக்டர் நாகநாதனுக்கு கோபமும், மலர்ச்சியும் சணம் வாதம், சணம் பித்தம் என்றபடி வருவதும் போவதுமாயிருக்கும். வயது வந்தவர்களுள் கோபப்பாய்ப் பிரதிநிதி பாலசுந்தரமும், வாலிபர்களுள் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி அமிர்தலிங்கமும் கொஞ்சம் முன்கோபக்காரர்கள் என்று பெயர் எடுத்து வருகிறார்கள்.

ஃ

நா. இராமசாமி, அனலைதிவு.

கே: தமிழரசுக் கட்சிக்குள்ளே பிளவு ஏற்பட்டிருக்கிறது என்று சில பத்திரிகைகள் கூறுகின்றன. உண்மையா?

ப; பிளவுகளும், கருத்துப் பரிமாற்றத்துக்கும் வித்தியாசம் தெரியாத பத்திரிகைகள் அப்படிக் கூறக் கூடும் அக்கூற்றில் உண்மையில்லை. தமிழ் காங்கிரஸைப் போல் ஒரேயொரு ஆயுட்டலைவரின் கீழ் கொஞ்சம் அடிமைகளைக் கொண்ட கட்சியல்ல தமிழரசுக் கட்சி. பல்வேறு கருத்துக்களையும், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலையும் கொண்ட உறுப்பினர்களையுடைய கட்சி தமிழரசுக் கட்சி. கட்சிக் கூட்டங்களில் பலரும் பலவிதமான கருத்துக்களைச் சுயாதீனமாக வெளியிடுவார்கள். வாதப்பிரதிவாதங்கள் நிகழும் ஆராய்ச்சி இடம் பெறும். சில சமயம் சூடும் கொதிப்பும் கூட ஏற்படுவதுண்டு. ஆனால் முடிவில் எல்லாம் அடங்கி, ஒரு குடும்பத்துக் குழந்தைகளும், உறவினரும குடும்பத் தலைவரான தந்தையின் முடிவினை அனுசரித்துச் செயல்படுவது போல் கட்டுப்படுவார்கள். அதே போலவே குடும்பத்தினர் பெரும்பான்மையினரின் கருத்துக்குத் தந்தையும் தலைசாய்ப்பார். இதையறியாதவர்கள் சிலர் ஏதோ கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு விட்டதாகக் கயிறு திரிப்பார்கள். அப்படித் திரிப்பவர்கள் 'கட்சி பிளக்காதா' என்று விஷமத்தனமான அங்கலாய்ப்பு உடையவர்களாவர்.

ஃ

ம. மிக்கேல், மூதூர்.

கே: நம் தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் பாராளுமன்றத்தில் தமிழிலேயே பேசினால் என்ன?

ப: வாய்முத்து உதிர்ந்து விடாதா?

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

## பெரிய தொல்லை!

—கா. சி. ஆனந்தன் —

வஞ்சியாள் பஞ்சணையில் இருந்தாள்! கையில்
வண்ணமாங் கனியொன்றை வைத்துக்கொண்டு
மஞ்சள் தோல் உரிக்கின்ற வடிவைப் பார்த்தும்
மாங்கனியை நான் பார்த்தும் வாய்நீர் ஊறிக்
'கொஞ்சம் தா எனக்' கென்று கேட்டேன்! மங்கை
கொஞ்சத்தின் பொருள்மாற்றிக் குழைந்தாள்! வந்தாள்!
அஞ்சாது ஓடிப்போய்த் தழுவிக் கொண்டேன்!
அடடாவோ! பெண்நெஞ்சம் பெரிய நெஞ்சம்!

வாய்த்தாய் நீ எனக்கென்று சொன்னேன்! பெண்ணாள்
வாய்த்தேன் நான் உங்களுக்கு 'வாய்த்தேன்' என்றாள்!
பார்த்தாயே! பார்வையினால் கொன்றாய் என்றேன்!
பார்த்தாய்க்கு மகவுண்டு எனக்கேதென்றாள்!
போர்த்தாயே என்னுடலை ஏன்? ஏன்? என்றேன்!
போர்வைக்கு வாயில்லைப் போங்கள் என்றாள்!
காய்த்தாடும் மார்புக்கு மேலே கன்னக்
கனியாடும் இவள் தொல்லை பெரிய தொல்லை!

கார் தோன்றும் சடையாளே! களைத்துப் போனேன்;
கண்ணல்ல மணியல்ல உடனே போவாய்...
நீர் வேண்டும் நீர் வேண்டும் தாகமென்றேன்!
யார் வேண்டும் நான்தானே பெறுவீர் என்றாள்!
'ஊராண்ட மன்னர்க்கும் புலவர்கட்கும்
உன்வாய் போல் வாயில்லை அதனால் நங்காய்
நூறாண்டு நீ வாழ்க! என்றேன்! வஞ்சி
'நும்மைப் போல்!' எனச்சொல்லி நொடியிற்போனாள்!

க. சபாரத்தினம்,
வட்டுக்கோட்டை

கே: நான் ஒரு சிறுபான்மைத் தமிழன். அதனால் சமசமாஜ—கொம்யூனிஸக் கொள்கைகளை வரவேற்கிறேன். ஏனென்றால் இந்தத் தலைவர்களிடம் தீண்டாமை உணர்ச்சி கிடையாது இதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா குயுக்தியாரே?

ப: சாதாரணமாக உங்கள் கருத்தை நான் ஒப்புக் கொண்டிருப்பேன். ஆனால் இதற்கு மாறாக இன்று, சுன்னாகத்திலிருந்து எனக்கு வந்த ஒரு கடிதம் சாட்சி பகர்கிறதே. இதோ அக்கடிதத்தை அப்படியே தருகிறேன்: "சென்ற 26-9-60-ல், ஈழம்இழந்த முப்பெருந்தலைவர்களான பண்டாரநாயகா, வன்னியசிங்கம், கந்தையா ஆகியோரைப் பாராட்டுமுகமாக சுன்னாகம் சந்தை மைதானத்தில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. கூட்டத் தலைவர் உட்பட சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. சுந்தரசிவம், திரு. கனகரத்தினம், கொம்யுனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. கந்தசாமி ஆசிரியர் ஆகியோர் மேற்படி கூட்டத்தில் சோடா குடிக்க மறுத்து விட்டார்கள். காரணம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு பையன் சோடா வழங்கியதே. பின்பு தலைவர் ஓர் உயர்ஜாதி வாலிபனை அழைத்து, தனக்கும் மற்றவர்களுக்கும் சோடாவும், தேனீர்க் கடைக் கிளாசும் தருவித்தார். பின்பு எல்லாரும் குடித்தார்கள். இதே நேரத்தில் உடுவில் பிரதிநிதி திரு. வி. தருமலிங்கம் தாழ்த்தப்பட்ட பையனிடமிருந்தே சோடா வாங்கிக் குடித்தார். இந்த இடதுசாரிகள் தானா ஹரிஜன விடுதலைக்காகப் பாடுபடுபவர்கள்? — இங்ஙனம் ஈ. ஆர். லிங்கம்"

ஃ

செ. தியாகராசா, நவிண்டில்.

கே: போலந்துப் பிரதமருக்கு ஆங்கிலம் பேசத் தெரியாது என்பது உண்மையா?

ப: பேசத் தெரியும். ஆங்கிலத்தில் எழுதவும் தெரியும். ஆனால் அவர் ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையாம். எல்லாமே தமது தாய் மொழியான போலிஷ் மொழியிலேயே பேசினார் என்று தெரிகிறது. அவர் பேசியதை, ஒரு போலிஷ்காரர் அழகான ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தமிழில் பேசத் தயங்கும் நமது தலைவர்கள் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஃ

மு சுப்பிரமணியம்,
மாவிட்டபுரம்.

கே: தாங்கள் யாருக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறீர்கள்?

ப: நான் தமிழ்த்தாய்க்குத்தான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். அவள் தானே இன்று வரை எனக்கு சோறு போட்டு வாழ்வளித்து வருகிறாள்.

கே: தமிழ்ப் படங்களிலே தங்களுக்குப் பிடித்த படம் எது? பிடிக்காத படம் எது?

ப: பிடித்த படம் பப்படம்! பிடிக்காத படம் நாகபடம்!

கே: இல்லத்தின் இருளகற்றும் கை விளக்கு எது?

ப: புருஷன் மனைவி ஒற்றுமைதான் அந்தக் கை விளக்கு.

ஃ

ஆர். மனோகரன், வாழைச்சேனை.

கே: பேச்சுக் கலையில் மட்டக்களப்பின் ஸ்தானம் என்ன?

ப: பேச்சுக்கலையில் மட்டுமல்ல ஏச்சுக் கலையிலும் மட்டக்களப்பு ஒரு ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. இரு துறைகளிலும் இரு துரைகள் சிறந்து விளங்குகிறார்கள். பேச்சுக் கலையில் வல்லவர் திரு. இராசதுரை. ஏச்சுக் கலையில் வல்லவர் திரு. பொன்னுத்துரை. ஆனால் பொன்னுத்துரையை ஈன்றெடுத்த பாவத்தை மட்டக்களப்பு செய்யவில்லை! அவர் வடக்கேயிருந்து வந்தேறு குடியினர்.

ஃ

க. நடராசா, புங்குடுதீவு

கே: வெளிமடை எம். பி.—கே. எம். பி. ராஜரத்தின, யாழ்ப்பாணப் புகையிலைக்கு வரி விதிக்குமாறு கூறுகின்றார். காரணம் என்ன?

ப: யாழ்ப்பாணப் புகையிலைக்கு இலங்கையின் தென் பகுதியிலுள்ள சிங்களப் பொது மக்கள் அதிகம் பணம் கொடுத்து அதை வாங்கிச் சுவைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் ராஜரத்தினவுக்கு உண்டு போலும்!


### இலவசம்

உங்களுக்கு நிறைவேற வேண்டிய காரணங்கள் இருக்கின்றதா? என்பதை அறியவேண்டுமானால் இலவச விபரங்களுக்கு எழுதவும்.

பி. எம். திசாநாயக்க,
அருத, எண்ணெய் காரியாலயம்
கண்டி ரோட், கம்பளை.



### ஜீ. சீ. ஈ. தமிழ் பரீட்சை
### டிசம்பர் | ஆகஸ்ட்

அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் ஜீ. சீ. ஈ. பரீட்சையில் சித்தியடைவது மிக எளிதாகி விட்டது.

- ★ பரீட்சையின் புதிய நிபந்தனைகள்
- ★ எமது புதிய பாடங்கள்
- ★ 101 வினா விடைகள்
- ★ கடந்த கால வினா விடைகள்

போன்றவற்றிற்கு இன்றே எழுதுங்கள்.

விபரங்கள் இனும்:-

அற்லஸ் ஹோல்,
த. பெ. 549, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

## தமிழ்ப் பத்திரிகைகள் பற்றி தொண்டர்கள் புகார்

நம் நாட்டில் தமிழ் மொழிக்கு உண்டாகியிருக்கும் நெருக்கடியினைத் தமிழ் மக்கள் இன்னும் போதிய அளவு உணரவில்லையென்று ஒரு தொண்டர் எழுதியிருக்கிறார் உணர்ந்தால் தங்கள் அலுவல்களையெல்லாம் தமிழிலேயே செய்வதற்குத் தமிழ் மக்கள் தயங்குவார்களா என்றும் அவர் கேட்கின்றார். உண்மையைச் சொல்லப் போனால் இன்னும் பத்து வீதத் தமிழ் மக்கள்கூடத் தமிழிலே தங்கள் அலுவல்களைச் செய்யவில்லை என்றுதான் கூற வேண்டும். சிங்கள மக்கள் அரசாங்க அலுவல்கள் முழுவதையுமே சிங்களத்தில் நடத்த முனைந்திருப்பதைக் கண்டும் தமிழ் மக்கள் தங்கள் அலுவல்களைத் தமிழிலே செய்ய எண்ணுகிருப்பதும், செய்யுங்கள் என்று குரலெழுப்பினாலும் அதற்குச் செவிகொடாதிருப்பதும் ஏன்? தமிழிலே செய்யுங்கள் என்று கேட்பவர்களை இன்னும் தமிழ்ப் பித்தர்கள் என்று கூறுகிறவர்களும் நம்மிடையே காட்சியளிப்பதேன்? நம் மக்களிடையே நிரம்பியிருக்கும் தாழ்வு மனப்பான்மை, உயர்வு மனப்பான்மை, அடிமை மனப்பான்மை, சுயநல மனப்பான்மை, அச்ச மனப்பான்மை முதலியவைகளே காரணங்களாகும்.

### ஆங்கிலத்துக்குப் பூசை

ஆங்கிலம் படித்து அதனுல் பிழைக்கும் பெருமக்கள் பலர்—சிறப்பாகக் கொழும்பு-7லும் யாழ்ப்பாண நகரத்திலும் வாழும் பெருமக்கள்—தமிழிலே தம் காரியங்களைச் செய்வது தம் உயர்வுக்குப் பங்கம் விளைக்குமென எண்ணுகின்றனர். தமிழாசிரியர்களும் அரைகுறை ஆங்கிலப் படிப்புக்காரர்களும் தங்கள் தாழ்வு மனப்பான்மை காரணமாகத் தங்களுக்கு ஆங்கிலம் தெரியுமென்று காட்டுதற்கு ஆங்கிலத்துக்குப் பூசை செய்கிறார்கள் கொழும்பில் ஒரு ஆரம்ப சைவப் பாடசாலையிலுள்ள தமிழாசிரியர்கள் நாள்தோறும் நேரம் பதியும் ஏட்டில் தங்கள் கையெழுத்தை ஆங்கிலத்தில் வைத்துத் தமிழ் வளர்க்கும் பணிக்கு முன்மாதிரி காட்டுகிறார்கள்.

### அடிமைப் பழக்கம்

இலங்கை வானொலி நிலையம், தகவற் பகுதி, அரசகரும மொழிப் பகுதி முதலிய அரசாங்க அலுவலகங்களில் தமிழிலே பணிபுரிந்து தம் வயிற்றை வளர்க்கும் தமிழர்களிற் பலர் பயத்தினாலும், சுயநலத்தினாலும் தாங்கள் எழுதும் கடிதங்களிற்கூடத் தமிழிலே முகவரியிடப் பின்நிற்கின்றனர். அரசாங்க லிகிதர்களும் பிறரும் அடிமைப் பழக்கத்திற்கு ஆளாகித் தமிழிலே தம் கருமங்களைச் செய்யக் கூச்சப்படுகிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் தமிழுணர்ச்சியை உண்டாக்குதற்குத் தமிழியக்கத் தொண்டர்கள் பலவழிகளில் உழைத்தல் வேண்டும் இவர்களை நயமாகப் பேசித் திருத்துவதற்கு முயல்வதே முதலிற் செய்யத்தக்கது இவர்களைத் திருத்த முடியாதென்று கண்டால் இவர்களுடைய பெயர்களையும் இவர்கள் தமிழுக்குச் செய்யும் துரோகச் செயல்களையும் பத்திரிகைகளில் வெளியிடலாம். துண்டுப்பிரசுரங்கள் வாயிலாகவும் இவர்களுக்குத் தமிழுணர்ச்சியை உண்டாக்கலாம்.

### யாழ்ப்பாணக் கச்சேரியில்

யாழ்ப்பாணக் கச்சேரிக்குத் தமிழில் எழுதும் கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் மறுமொழி கிடைப்பதாகச் சிலர் குறைகூறுகிறார்கள் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள தொண்டர்கள் இதனை உடனே விசாரித்து ஆவன செய்வார்களாக தமிழில் எழுதப்பட்ட கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் மறுமொழி அனுப்பப்பட்டிருப்பின் அம்மறுமொழிக் கடிதங்களில் ஒன்றினையேனும் தமிழியக்கத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

யாழ்ப்பாணக் கல்வியலுவலகத்திலும தமிழ் பலவழிகளில் ஒதுக்கப்படுகின்றது எனப் பல புகார்கள் கிடைத்துள்ளன இதனையும் தமிழியக்கத் தொண்டர்கள் உடனே விசாரித்து நிலைமையை அறிவித்தால் இப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

### தமிழ்ப் பத்திரிகைகள்

"தமிழியக்கத்துக்கு இப்பொழுது தமிழ் பத்திரிகைகளெல்லாம் நல்ல ஆதரவு அளிக்கின்றன இது மகிழ்ச்சிக்குரியது ஆனால் ஊருக்கு உபதேசம் செய்யும் இப்பத்திரிகைகளின் அலுவலகங்களில் பல வழிகளில் தமிழ் ஒதுக்கப்படுவது மிகுந்த கவலையைக் கொடுக்கிறது" என்று ஒரு தமிழியக்கத் தொண்டர் எழுதி

(12-ம் பக்கம் பார்க்க)

## உரிமை ஏது?

— சோ. பத்மநாதன் —

மாவலி என்றவன் வாழ்ந்ததும்—இந்த
வையகத் தோரையும் மற்றுள—பல
தேவரையும் அவன் வாட்டிட —அவர்
சிந்தை கலங்கியம் மாயவன் —புவிக்
காவலனாமெங்கள் கண்ணனை—கண்டு
'காத்தருள்!' என்றதும் அன்பினால்—ஐயன்
மூவடி கேட்டதும் சுற்றனம்—அவை
முற்றுங் கதையென் றறிந்தனம்!

★

முற்றுங் கதையென்ற போதிலும்—எங்கள்
முன்னவர் சிந்தையில் வந்ததை—நாம்
சற்றுக் கவனிக்கில் உட்பொருள்—காணல்
சாலும்; இவ் வையகந் தி லேதின்னல்—யாவும்
அற்று மிடி,பசி நீங்கியே—அறி
யாமை அகன்றுபல் லாயிரம்—இன்பம்
பெற்றிந்தப் பூமி பொலியுநாள்—அது
பேரொளி நாளென்று பேசினர்

★

'மன்பதை வாழ்ந்திட மாயவன் —இந்த
மண்ணில் புகுந்தெமை மாட்கொண்டு—எங்கள்
துன்பம் துடைத்திருள் நீக்கியே—எம்மைச்
சூழும் இன்னல்களைப் போக்கியே —பெரும்
இன்ப நிலையினில் வைத்தநாள்—தனை
இவ்வுல கென்றும நினைவிலே—கொள்ளல்
நன்றென எண்ணித் தீ பாவளி த—திரு
நாளை வகுத்தனர் நம்மவர்!

★

மொழியை மதத்தை இனத்தினை— நாங்கள்
முன்வைத்து மோதி மடிகையில்—நல்ல
வழியை விடுத்திந்த மாநிலம் முற்றும்
மாயும் வழிவகைக் கொள்கையில்—இரு
விழியிருந் தும்குரு டாகினர் —சாதி
வேற்றுமை வேண்டுமென் றேசொலும்—இந்த
இழிநிலை ஓங்கி இருக்கையில்—உரிமை
ஏதுதீ பாவளிப் பேர்சொல?

## நாட்டுப் பாடல்களுக்காக தங்கப் பதக்கம்

## மு. இராமலிங்கத்துக்கு

நாட்டுப் பாடல் துறையில் நாட்டங் கொண்டு, பாடல்களைச் சேகரித்து தொகுத்து நூலாக வெளியிடும் பிற வகைகளிலும் தமிழுக்குத் தொண்டாற்றிவரும் வெள்ளவத்தை மு. இராமலிங்கம் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

யாழ் பிரதேச கலை மன்றம் திரு மு. இராமலிங்கத்துக்கு இந்தக் கௌரவத்தை அளிக்க இருக்கிறது. இம் மாதம் 20-ந் தேதி தொடக்கம் 22-ந் தேதி வரை பிரஸ்தாப மன்றத்தின் கலை விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறும் போது கடைசி நாளில் வெள்ளவத்தை மு. இராமலிங்கத்துக்கு தங்கப் பதக்கம் வழங்கி அவரைக் கௌரவிப்பது என்று முடிவு செய்யப்பட்டு உள்ளது.



திரு. மு. இராமலிங்கம்

கலைவிழாவை யொட்டி மன்றம் வெளியிட இருக்கும் மலரில் திரு இராமலிங்கத்தின் புகைப்படத்தை வெளியிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. மன்றத்தின் தலைவர் யாழ் அரசாங்க அதிபர் திரு ஸ்ரீ காந்தா ஆவர்.

வெள்ளவத்தை மு. இராமலிங்கம் நாட்டுப் பாடல் துறையில் ஆற்றி வரும் சேவைக்காக கண்டிப்பாகக் கௌரவிக்கப்பட வேண்டியவர் என்பதைச் சுதந்திரன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே கூறியது அதாவது 1958-ல் வெளியிடப்பட்ட சுதந்திரன் பத்தாவது ஆண்டு மலரில் இக்கருத்து வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சிருப்பர்கள் சங்கம்

### உத்தியோகத்தர்கள்

அரசாங்க சிருப்பர்கள் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 2-ம் தேதி நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு ஏ. சின்னையா (விவசாய இலாகா தலைமைச் சிருப்பர்); உப தலைவர்கள்: திரு வி குமாரசாமி (ரயில்வே தலைமைச் சிருப்பர்), திரு கே. சபாரத்தினம் (ரயில்வே உதவித் தலைமைச் சிருப்பர்), திரு எஸ். நடேசரத்தினம் (மன்னார் கச்சேரி தலைமைச் சிருப்பர்); செயலாளர்: திரு டி ஏக்கநாயக்க (மோட்டார் போக்குவரத்து இலாகா தலைமைச் சிருப்பர்); உதவிச் செயலாளர்: திரு எல் பே சில்வா (கல்வி இலாகா தலைமைச் சிருப்பர்); பொருளாளர்: திரு ஏ. பி. இராசதுரை (ரயில்வே சிருப்பர்.)


எல்லோருடைய
பொருளாதார நிலைக்கும்
ஏற்றது நாஷனல்!!
மாடல் T. 22.

National

இது,
எட்டு ரான் சிஸ்டர்களும், இரண்டு
அலை வரிசையும் கொண்டது
மிகச் சிறந்த போட்டாபிள் ரேடியோ

ஏனெனில்;
பாட்டரி நிலை காட்டும் புதிய மீட்டர்;
சிறந்த உட்புற ஏரியல்;
தொலை நிலையங்களையும் திறம்படக் கிரகிக்கும்
தன்மை முதலியன இதன் நல்ல அம்சங்கள்.

ஒரு வருட உத்தரவாதம் உடையது.



அழகிய தோல் உறையுடன்
விலை ரூ. 360-00.

எலெட் ரேடியோ & என்ஜினியரிங் கம்பனி,
போன்: 79788 26, செய்னர் வீதி, கொழும்பு. —MvUEREC—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பறந்தோடி விட்ட பறவை-அதைத் தண்டித்து பயனில்லை; குற்றவாளியே தூக்கிலிடப்பட வேண்டியவர்'

## ஜெயசிங்கா பேச்சு; இடையே தகநாயகாவின் 'சுயநிலை விளக்கம்'

## அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பும் அமைச்சர்கள் ராஜினமாவும்

பாராளுமன்ற விவாதத்தின் போது ஒரு பிரேரணையில் ஒரு பிரதிநிதி ஒருமுறை மாத்திரமே பேசலாமென்றும், இதற்கு இரண்டு புறநடைகளுண்டு என்றும் கடந்தவாரம் கூறியிருந்தோம். அவற்றில் ஒன்று 'ஒழுங்குப் பிரச்சினையைஒட்டி'யதுஎன்றும் மற்றது தன்னைத் தாக்கிப் பேசும் பிரதிநிதிக்குத் தன்னைப் பாதுகாத்து விளக்கம் கொடுக்கும் "சுய நிலை விளக்கப்" பற்றியது என்றும் தெரிவித்திருந்தோம். இ. போ. ச. நிர்வாகததை யொட்டி 13-9-60-ல் நடந்த விவாதத்தில் "சுய நிலை விளக்கம்" பற்றி ஓர் உதாரணம்:

திரு. ஜெயசிங்கா: இ. போ. ச. நிர்வாகத்தில் அரசியல் தலையீடு எவ்வளவு தூரம் உண்டு என்பதற்கு ஓர் உதாரணம் கூறுகிறேன்......திரு. தகநாயகாவின் காபந்து அரசாங்கம் இயங்கிய காலம், மார்ச் மாத தேர்தலில் திரு. ஸ்டான்லி டி சொய்சாவிற்கு உதவி புரியும் வண்ணம் ருகமத்திற்கு ஒரு விசேட பஸ் சேவை நடத்தப்பட்டிருக்கிறது. 32 நாட்களுக்கு மட்டுமே இந்தச் சேவை நீடித்தது......அந்நாட் பிரதமரான திரு. தஹநாயகா பதுவத்தையிலிருந்து ருகம வரை இச் சேவை நடத்தப்படும்படி அதிகாரம் வழங்கியிருந்தார்.......

திரு. தஹநாயகா: (பேச எழும்பியபடியே) சுய நிலை விளக்கத்தை யொட்டிப் பேசுகிறேன் (ஜெயசிங்க இடம் கொடுத்து, ஆசனத்தில் அமருகிறார்) இந்த விதமான செயலெதுவும் நான் செய்யவில்லை. அவ்வாறு நடந்திருந்தால் அது ஒரு ஒழுங்கு மீறிய செயலாகும். எனவே பூரண விசாரணை ஒன்று நடத்தும்படியும் குற்றவாளிகளைத் தண்டிக்கும்படியும் நான் இந்நாள் மந்திரியவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தக் கோணல்தனமான செய்கை எதிலும் எனக்கு எவ்வித பங்குமிருந்ததில்லை.

திரு. ஜெய: ஒரு விசாரணை நடந்தால் எனது கூற்று நிரூபிக்கப்படும். பறந்தோடி விட்ட பறவைகளைத் தண்டிப்பதில் பயனில்லை. தூக்கிலிடப்பட வேண்டியவர் உண்மைக் குற்றவாளியே... எங்களுக்கு ஒன்றும் தெரிந்திருக்கவில்லை என்று கூறுவது மிகச் சுலபம்.

திரு தஹா: நான் அதற்கு அதிகாரமளித்திருந்தேன் என்று ஏன் கூறுகிறீர்?......

ஃ

திரு. ஜே. ஆர். ஜெயவர்தனா (6-9-60-ல் புகையிலை வரி பற்றிப் பேசுகையில்) 'தொழில் மந்திரிக்கும் நிதி மந்திரிக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பு வேண்டுமென்ற எமது கோரிக்கையில் கௌரவ பொறலைப் பிரதிநிதி (அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் டபிள்யு.

### அவைப் புறு

டி. டி. சில்வா)வும் எங்களுடன் தான் நிற்கிறார். இந்த ஒத்துழைப்பு மந்திரி சபையிலும் இருக்கும் என்றே நினைக்கிறேன்.

பாராளுமன்றத் துணுக்குகள்

டாக்டர் சில்வா: சுயநிலை விளக்கத்தை யொட்டி பேசுகிறேன்......

ஜே ஆர்: (தொடர்ந்து பேசுகிறார்) இதைக் கூறுவதற்கு மந்திரி சபை நடைமுறைகள் பற்றிய விசேட அறிவெதுவும் தேவையில்லை பிரஸ்தாப இரு மந்திரிகளும் இவ் வரி விதிப்புகளைப் பற்றிக் கலந்து பேசியிருப்பார்கள் என்பதைக் கௌரவ அங்கத்தவர் (டபிள்யு. டி. டி. சில்வா) அறிந்திருக்க வேண்டும். இந்த வரிகளுக்கு கௌரவ நிதி மந்திரியவர்கள் முழுப் பொறுப்பையும் தானே ஏற்றிருந்தாலன்றி இரு மந்திரிகளும் கலந்து பேசியே இருப்பார்கள். ஆனால் எங்கள் (ஐ. தே. க.) ஆட்சிக் காலத்தில் இப்படி ஓர் அமைச்சரே வரி விதிப்பைத் தனியாக தீர்மானித்தது கிடையாது அமைச்சர் அவையில் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்மானங்களனைத்துக்கும் முழு அமைச்சர் அவையுமே கூட்டுப் பொறுப்பு ஏற்பது என்ற கொள்கையும் இருக்கிறதே! எனவே தொழில அமைச்சர் மாத்திரமல்ல, வரி விதிப்புத் தீர்மானிக்கப்படுமுன் ஒவ்வொரு அமைச்சருமே கலந்தாலோசிக்கப்படுகிறார். இதைத்தான் அமைச்சரவை ஆட்சிமுறை என்றழைக்கிறார்கள். அமைச்சரவை ஆட்சி முறையையே இந்த அரசாங்கமும் பின்பற்றுகிறது என்று ஏற்றுக்கொள்ளுகிறேன் அல்லது இதுவே நடைபெறுகிறது என்று நம்புவோமாக! எனவே அமைச்சர்களுக்கிடையே ஒத்துழைப்பில்லாததைப்பற்றிக் கௌரவ பொறலைப் பிரதிநிதி (டாக்டர் டபிள்யு டி. டி சில்வா) சஞ்சலப்படத் தேவையில்லை......

டாக்டர் டபிள்யு. டி. டி. சில்வா: "சுய நிலை விளக்கம்" பற்றிப் பேச விழைகிறேன்......

உப-சபா நாயகர்: பேசிக் கொண்டு நிற்கும் கௌரவ அங்கத்தவர் (ஜே. ஆர். ஜெயவர்தனா) உங்கள் சுய நிலை விளக்கத்திற்கு இடம் கொடுக்கிறார் இல்லையே.

ஜே. ஆர்.......குறிப்பிட்ட மந்திரிகளுக்கிடையே ஒத்துழைப்பில்லாததுபற்றி இவர் சஞ்சலப்படத் தேவையில்லை......(தொடர்ந்துபேசுகிறார்.)

ஃ

"சுய நிலை விளக்கம்" கூற விரும்புவர்களுக்கு இடம் விட்டுக் கொடுப்பதோ, இடம் கொடுக்க மறுப்பதோ பேசிக்கொண்டு நிற்கும் பிரதிநிதியின் விருப்பத்தைப் பொறுத்தது என்பதையும், விளக்கத்திற்கு இடம் அளிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றையும் மறுக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றையும் பார்த்தோம்.

இடையில் — இன்னுமொரு பாராளுமன்ற ஆட்சிச் சம்பிரதாயம்பற்றிக்

(12-ம் பக்கம் பார்க்க)

"உன்னைக்கண்டு நான் ஆட என்னைக்கண்டு நீ ஆட
உல்லாசம் பொங்கும் இன்பத் தீபாவளி!!..."

ஆம்! இத் திருநாளைக் குதூகலமாகக் கொண்டாட நீங்கள் விஜயம் செய்ய வேண்டியது
குண்டன்மால்ஸ் ஒன்றே!!



எம்மிடம்;
பாம்பே; கல்கத்தா, காஞ்சிபுரம், சேலம்; காஷ்மீர் முதலிய பிரசித்திபெற்ற இடங்களில் தயாரிக்கப்பட்ட பட்டு; பருத்தி சேலைகளும், மற்றும் எல்லாவித ஜவுளிவகைகளும் ஏராளமாய்த் தருவிக்கப்பட்டு மலிவு விலைகளில் விற்கப்படுகின்றன.



குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
110 & 114 மெயின் வீதி, கொழும்பு.

—Mylads 597/60—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கோ:

# நாடு பிழைக்க ஒற்றை ஆட்சி ஒழிந்து இணைப்பாட்சி மலர வேண்டும்

## தலைவர்கள் கூடிப் பேசினால் சமரஸம் பிறக்கலாம்

## ஆளுக்காள் வக்கரித்து நிற்பதாலும் ‘டிஸ்மிஸ்’ நாடகத்தாலும் பயனில்லை

(3)

செ. குமாரசாமி

ஜூனின் 30 கொங்கோ சுதந்திர தினம். ஐந்து நாட்களுக்குள்ளாக, ஜூலை 5-ல் கலகம் பிறந்தது. இதை யடுத்து நடந்தவற்றைப் புரிந்துகொள்வதானால் தேதிக்கிரமமாக நிகழ்ச்சிகளில் கவனஞ் செலுத்துவதே புத்திசாலித்தனமாக இருக்கும். இன்றேல் சம்பவங்கள். ஒன்றும் புரிய முடியாத “ஒரே கொங்கோ மயமா”கி விடும்.

### பெல்ஜிய இராணுவத்தின் வஞ்சம

ஜூலை 8-ம் தேதி வெள்ளைக்காரன் பெல்ஜியத்திலிருந்து கலகத்தை யடக்க இராணுவத்தை விமானத்தில் கொண்டு வந்து குவித்தான். இது எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலாயிற்று. போன ஏகாதிபத்தியம் திரும்பி விட்டது என்று, கொங்கோ இராணுவச் சிப்பாய்களுடன் மக்களும் சேர்ந்து கொண்டனர். பெல்ஜிய வெள்ளைக்காரர்கள் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். வெள்ளைக்காரப் பெண்மணிகள் மானபங்க மடைந்தார்கள். வெள்ளை அதிகாரிகள், சிவிலியன்கள் அனைவரும் கொங்கோவை விட்டு ஓட்டம் பிடித்தார்கள். சாந்தியை நிலை நாட்ட வந்த பெல்ஜிய இராணுவம் கொங்கோ மக்களுக் கெதிராக வஞ்சம் தீர்க்கத் தொடங்கிற்று.

### நாடு சிதைகிறது

ஜூலை 11. குழப்பம் மேலும் குழப்ப மடைந்தது. கடாங்கா மாகாணத்தின் பிரதமரான கேஷாம்பே கொங்கோவிலிருந்து பிரிந்துபோவதாக அறிவித்தார். இந்த ஷோம்பே தான் லூமும்பாவுடன் பெல்ஜியத்தில் நடந்த மகாநாட்டிற்குப் போனவர். இவர் கட்சி லூமும்பாவிடம் 3 மந்திரி பதவிகள் கேட்டு, ஒன்றேயொன்றைப் பெற்று நிம்மதியிழந்தவர். கடாங்காவைத் தொடர்ந்து காசாய் மாகாணமும் தனியரசு நிறுவுவதாகக் கூறிற்று. இங்கு மாகாண பிரதமராயிருந்தவர் கலோஞ்சி, லூமும்பா மந்திரி சபையில் இடம் பெறும் முயற்சியில் தோல்வி கண்டவர். பிரதமர் லூமும்பாவும் ஜனாதிபதி கஸவுபுவும் ஒன்றாக வேண்டுகோள விடுத்தார்கள். பெல்ஜியத் துருப்புகள் கிற்ரோனு, காமினு தளங்களுக்கு வாபஸாக வேண்டுமென்று கோரினார்கள். இந்தக்கட்டத்தில் கொங்கோ அரசியல் உள்நாட்டு விவகார மற்றதாகி விட்டது. மாகாணங்களில் கிளர்ச்சி நடைபெறுகிறது; பெல்ஜிய ஏகாதிபத்தியம் நாட்டில் மீண்டும் புகுந்து விட்டது; உதவிக்கு யாருமில்லை. ருஷ்ய உதவி பெறுவதில் லூமும்பா நாட்டங் கொண்டார். ருஷ்ய—அமெரிக்க உலக ஆதிக்கப் போட்டியில் ஆபிரிக்காவும் இழுபடும் அபாய நிலை ஏற்பட்டது. கரடிக்கும் கழுகுக்குமிடையே நடக்கும் போட்டியில் ஆபிரிக்கா சிக்கி விடக்கூடாதே என்று ஐக்கிய நாடுகள் சபை இப்பொழுது அரங்கத்தில் தோன்றிற்று.

### எதிர்ப்பும் வரவேற்பும்

ஜூலை 14-ல் ஐக்கிய நாடு பாதுகாப்புச் சபை பெல்ஜியத் துருப்புகளை வெளியேறும்படி கட்டளை யிட்டது. கட்டளையை நிறைவேற்றி வைக்க, 24 மணித்தியாலத்தில் ஐக்கியநாட்டுத் துருப்புகள் லியப்போல்ட்வில் (தலைநகரில்) இறங்கின ஐக்கிய நாடு நடவடிக்கையை மேற்பார்வை செய்ய ஐக்கிய நாடு மகா—காரியதரிசி ஹமாஷீல்ட் போய்ச் சேர்ந்தார். ஆகஸ்டு 3-ந் தேதி, ஐக்கிய நாட்டுத் துருப்புகள் கடாங்கா மாகாணத்திற்குள் நுழைவதை கேஷாம்பே எதிர்த்தார். ஐக்கியநாட்டுத் துருப்புகள் லூமும்பாவின் மத்திய அரசாங்கத்தை மதிக்கக் கடமைப்பட்டவை. எனவே, தான் பிரிந்து போவதைத் தடுத்து வைக்க ஐக்கிய நாட்டுத் துருப்புகள் லூமும்பாவிற்கு உதவுலாம் என்று கேஷாம்பே பயந்தார். ஐக்கிய நாட்டுப் பாதுகாப்புச் சபையிடம் விளக்கம் கோரினார் ஹமாஷீல்ட். பெல்ஜியத் துருப்புகளை வெளியேற்றுவதே ஐக்கிய நாட்டுப் படையின் நோக்கமென்றும், கொங்கோவின் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய நாடு தலையிடாது என்றும் உறுதி அளித்ததின் பேரில் கடாங்காவிற்குள் ஹமாஷீல்ட் ராஜோபசாரத்துடனும் இராணுவ மரியாதையுடனும் பின்னர் வரவேற்கப்பட்டார்.



ஜனாதிபதி கஸவுபு, இராணுவ தளபதி மொபுட்டு, பிரதமர் லூமும்பா.

### காசாய் பிரிந்தது!

ஆகஸ்ட் 8-ம் தேதி. நிலைமை மேலும் சிக்கலாயிற்று. கொங்கோவிலிருந்து காசாய் மாகாணம் தனியரசாகப் பிரிந்தது. லூமும்பாவின் மத்திய இராணுவம் மூன்ருவது துண்டாகச் சிதைந்தது. காசாய், கடாங்கா மாகாணங்கள் லூமும்பாவை எதிர்ப்பதில் ஐக்கிய முன்னணி அமைத்தன.

### அந்த நாடகம்!

ஆகஸ்ட் 27-ல் காசாய் துருப்புகளுக்கும் லூமும்பாவின் துருப்புகளுக்கு மிடையே கலகம் மூண்டது.

செப்டம்பர் 5-ந் தேதி ஜனாதிபதி கஸவுபு பிரதமர் லூமும்பாவை டிஸ்மிஸ் செய்தார். தேர்தலின் பின் அரசாங்கம் நிறுவுவதில் இருவருக்குமிடையே இருந்த பதவிப் போட்டி தெரிந்ததே. டிஸ்மிஸ் நாடகம் தொடர்ந்தது.

செப்டம்பர் 6-ல் பிரதமர் லூமும்பா ஜனாதிபதி கஸவுபுவை பதவி நீக்கம் செய்தார். செப்டம்பர் 7-ல் பாராளுமன்றங் கூடி இரு பதவி நீக்க உத்தரவுகளையும் செல்லுபடியாகாதென்று தீர்ப்பளித்தது. குழப்பங்களுக்குள் கொங்கோவில் நிகழ்ந்த நிதான சிந்தை கொண்ட செயல் இது வொன்றேயாகும்.

### தோன்றினர் மூன்றும் ஆள்!

இரண்டு நாட்களின் பின் லூமும்பாவின் இராணுவம் கடாங்கா மாகாணத்திற்குள் படையெடுத்தது ருஷ்ய விமானங்கள் துருப்புகளை ஏற்றி இறக்குவதில் உதவின. ஜனாதிபதி பாராளுமன்றத்தின் தீர்ப்பையும் மீறிப்புதிய பிரதமர் ஒருவரை நியமித்தார். யோசேப் இலியோ மந்திரி சபை அமைத்தார். ஆனல் பிரதிநிதிகள் சபையும் செனட் சபையும் லூமும்பாவின் மந்திரி சபையில் நம்பிக்கை தெரிவித்துப் பிரேரணை நிறைவேற்றின. இலியோ, லூமும்பா மந்திரிசபைகளுக்கிடையே பதவிப் போட்டி நீடித்துக் கொண்டிருக்கும் பொழுது இரு புறத்தாரையும் ஒதுக்கி வைத்துத் தான் பதவியேற்பதாகப் புறப்பட்டார் பூமத்திய கொங்கோவைச் சேர்ந்த மூன்ருமவர் ஒருவர் கேணல் மொபுட்டு. இந்த இராணுவ வீரரின் மந்திரி சபையுடன் கொங்கோவில் 2 பிரதமர்கள் 3 மந்திரி சபைகள், 4 இராணுவங்கள், இயங்க ஆரம்பித்தன.

### பிரதமர் கதி

கேணல் மொபுட்டு முன்னணிக்கு வந்த பின்னர் லூமும்பா இராணுவ நிலையத்துக்குச் சென்ற பொழுது வீரர்கள் அவரைச் சூழ்ந்து [illegible] தளபதி லூண்டுலாவின் வீட்டில் தஞ்சம் புகுந்தார் லூமும்பா. ஐ. நா. சபையின் இராணுவத்தைச் சேர்ந்த கானா நாட்டு வீரரால் காப்பாற்றப்படுமுன் பிரதமர் லூமும்பா பலமாகத் தாக்கப்பட்டு உடைகள் கிழிக்கப்பட்டார்.

மொபுட்டு தீவிர நடவடிக்கைகளைக் கையாண்டார். அயல்நாட்டு டெலிபோன், ரேடியோ தொடர்புகளைத் துண்டித்தார். ருஷ்ய, செக்கோசிலோவாக்கிய ஸ்தானிகர்களை உடனே வெளியேற்றினார் அரசியலுக்கும் அரசியலவாதிகளுக்கும் ஓய்வு கொடுத்தார். பாராளுமன்றத்தை டிஸம்பர் வரை ஒத்தி வைத்தார். ஆனல் இவரின் செல்வாக்கு எத்தனை மைல்களுக்குப் பரவியிருக்கிறது என்பதும் கேள்விக் குறிதான்!

### சமரஸம் ஏற்படுமா?

கஸவுபுவுடனும் கேஷாம்பேயுடனும் இவர் ஒத்துப் போகக்கூடிய சூழ்நிலை உண்டு லூமும்பாவும, கஸவுபுவும,கேஷாமபேயும் கலோஞ்சியும் ஒன்று கூடி ஒரு நடுநிலைமை நாட்டில் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்துவதற்கு ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

இத்தனை கலகங்களுக்குள்ளும தளபதி மொபுட்டு நடந்துகொண்ட வகை மெச்சத்தக்கதே கஸவுபுவுடன் பக்கஞ் சார்ந்து நிற்பதுபோல அவர் நடந்துகொள்ளுகிருர். லூமும்பாவைக் கைதாக்கும் கருத்துக் கொண்டிருந்தார். தனது ராணுவத்தைப் பயனபடுத்தி இதை இவர் செய்திருக்கலாம. ஆனல் இந்த நடவடிக்கை நாட்டில் அமைதியை ஏற்படுத்தப்போவதில்லை. இதை அவர் உணர்ந்திருக்கிருர் எனவே தான் லூமபாவும் கஸவுபுவும் கூடிப் பேசி நாட்டில் மீண்டும் சாந்தி உண்டாக்க வேண்டுமென்று முயன்று வருகிருர்.

இன்றுள்ள தலைவர்களில் பரவலான செல்வாக்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையும் உள்ளவர் லூமும்பா இவர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால் நாட்டில் கலகம் இன்னும் வலுப்பெறும். எனவே தான் சமரஸம் தேவை. இத்தகைய ஒரு மகாநாடு நடு நிலைமை நாடொன்றில் நிகழவேண்டும் என்ற அபிப்பிராயமிருக்கிறது. ஆனல் இதில் இன்னுமொரு குழப்பம். நாட்டின் 60% வருமானத்தைக் கொடுக்கும் வைரச் சுரங்கங்களைக்கொண்ட கடாங்கா மாகாணப் பிரதமர் கேஷாம்பே இதற்கு இணங்குவதாக இல்லை. இவருடன சேர்ந்து நிற்கிறா காசாய் மாகாணத்துக் கலோஞ்சி. கொங்கோவின் பிரதமராக இல்லாது லூமும்பா சாதாரண ஒரு அரசியல் தலைவனாக மகாநாட்டில் பங்குபற்றினால்தான், தாங்கள் அதில் கலந்துகொள்வார்களாம்.

### வேறு வழியில்லை

எதுவானாலும் சரி கஸவுபு, லூமும்பா, கேஷாம்பே, கலோஞ்சி ஆகியோர் கூடித் தீர்க்க வேண்டிய விஷயம் இது நாட்டின் நன்மை கருதி இவர்கள் நடந்து கொள்ள வேண்டுமானல் கூடிப் பேசுவதைவிட வேறு வழியில்லை. கடாங்காவின் முடிசூடா மன்னன் கேஷாம்பே. காசாய் மக்களின் தலைவன் கலோஞ்சி. பரந்த செல்வாக்குக் கொண்டவர் கஸவுபு. நாட்டின தேர்தல்மூலம் சட்டபூர்வமாகப் பதவியேற்ற பிரதமர், லூமுமபா. இவர்கள் அனைவரும் ஒத்துப் போக முடியாவிட்டால் கொங்கோவின்கதி அதோகதிதான்!

நாட்டின் பின்னணியைக் கவனிக்கும்பொழுது இத்தனை தலைவர்களும் ஒத்துப்போகாது எதுவும் செய்ய முடியாது என்பது தெளிவு.

### பின்னணி

பலூபா, லூலுபா, பாக்கிற், பாகொங்கோ, சூமு, பிக்மி—நாட்டிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட இனங்களில் சிலவற்றின் பெயர்கள் இவை. இவற்றுள் பலூபா, லூலுபா இனங்கள் காசாய் மாகாணத்தைச் சேர்ந்தவை. அராபிய படையெடுப்பாளர்களுக்குப் பயந்து ஓடிய பலூபா மக்களுக்குத் தஞ்சமளித்தவர்கள் லூலுபா மக்கள். ஈற்றில் பலூபா மக்களை அடிமைகளாய் நடத்தியவர்கள். எனவே இவ்விரு இனங்களுக்குள்ளும காசாய் மாகாணத்திலேயே குத்துவெட்டு. கொங்கோ அமளியில் இவர்களுக்கிடையே நடந்த கலகத்தில் மாத்திரம் அகதிகளானோர் 3 லட்சம் மக்கள்! அமைதி எப்படித் தோன்றும் கொங்கோவில்?

### வேற்றுமைகள் அனந்தம

ஒவ்வொரு இனத்துக்குமிடையே சாதி வித்தியாசங்கள்போல் ஏற்றத் தாழ்வுகள். பிக்மிகள் இன உயர்வு என்ற ஏணியில் அடித்தளத்திலுள்ளவர்கள். ஒருத்தருக்கொருத்தர் ஒத்துழைப்பில்லை; ஒற்றுமையில்லை. சமுதாய அடிப்படையே “ஒரே கொங்கோ மயம்”. அரசியல் கட்சிகளோ எண்ணிக்கைக்குள் இல்லை. பேசப்படும் மொழிகளோ அனந்தம். அனந்தம் நாட்டின் எல்லைகளோ மிகப் பரந்தவை.

வட எல்லையாய் அமைந்திருக்கும் கொங்கோ நதியின் நீளம் 2900 மைல்கள். பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், சுவீடன், நோர்வே இத்தனை நாடுகளையும் ஒன்று கூட்டிய நிலப்பரப்பு கொங்கோ. 9 லட்சத்துப் பத்தாயிரம்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி.. பலநூல் பரிச்சயம் பெற்றவர் வன்னியசிங்கம்

காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி அவருடைய மூத்த சகோதரியார் திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம் "என் தம்பி வன்னியசிங்கத்தை உருவாக்கிய பரம்பரையும் சூழலும்" என்ற தலைப்பில் எழுதும் தொடர் கட்டுரையின் ஐந்தாவது பகுதி இது.

(முற்றொடர்)

பள்ளிப் பாடங்களில் பிள்ளைகள் பிந்தி நின்றால், வசதியாக ஆளும் அகப்பட்டால், வீட்டில் பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்துவிடுவார்கள். பிள்ளைகளுக்குத் தொல்லை இல்லை. "வீட்டு" வாத்தியார் வசதியாக அகப்படாவிட்டாலோ பெரிய தொல்லைதான், தந்தையார் மாமன்மார் என்று படித்த பெரியவர்கள் மூவர் வீட்டில் இருந்தாலும் பள்ளிப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒருவருக்கும் வழங்காது. எப்பொழுதோ தொலைத்துத் தலைமுழுகின பள்ளிப் பாடங்களைத் திரும்பவும் கட்டியழவா?

### தாயாருக்குப் படிப்பு குறைவு

தாயாருக்குப் படிக்க உட்கார வைக்கத் தெரியும்; பாடம் சொல்லிக் கொடுக்கத் தெரியாது. மேலதிகமாக ஒரு மணித்தியாலம் அரைமணித்தியாலம் உட்காரவைப்பார். தெரிந்த பாடத்தையே திருப்பப் படிக்க முற்பட்டால் அதை அறிந்துகொள்வார்; "கணக்கு அல்லவா குறைவு? தமிழ்ப் புத்தகத்தை வைத்துக்கொண்டு என்ன செய்கிறாய்?" என்று கண்டிப்பார். கணக்குப் புத்தகத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது? தெரிந்த கணக்கு வகையில் தான் இன்னும் நாலு அப்பியாசம் செய்யலாம். நோய் காரணமாக (—வேறு எக்காரணத்துக்காகவும் பள்ளிக்குப்போகாமல் இருப்பதில்லை—) பள்ளிக்குப் போகாத நாளில் வகுப்பில் படிப்பிக்கப்பட்ட கணக்கு வகை தெரியாது. அதைத் தெரிந்துகொள்வது எப்படி?

### விடுபட்ட பாடம்

பள்ளிக்கூடத்தில் தன்வகுப்பில் சூடிகையான பையனிடமோ மேல்வகுப்பு மாணவரிடமோ கேட்கவும் வழியில்லை. வகுப்பு நேரம் மட்டும்தானே பள்ளிக்கூடத்தில் நிற்கலாம்! தெய்வச் செயலாக வீட்டுக்கு வந்தவர் யாராவது சொல்லிக் கொடுக்கத் தெரிந்தவராக இருந்து உதவ நேர்ந்தால் தான் வழிபிறக்கும். நாலைந்து நாள் பிள்ளைகள் முயன்றும் தெரியாமல் சொல்லிக் கொடுக்கவும் யாரும் நேர்படாமலும் போனால், பள்ளியில் அந்தப் பாடம் கற்பிக்கும் வாத்தியாரையே அப்பாடத்தை ஒருமுறை பெரிய மனது பண்ணி விளக்கிப் படிப்பிக்கும்படி நேரிலோ கடித மூலமோ நயந்து கேட்டு ஏற்பாடு செய்ததும் உண்டு.

### கீழ்த்தர நூல்கள் படிக்க அனுமதியில்லை

வாசிக்கும் புத்தகங்கள் விஷயத்திலும் கண்டிப்பு அதிகம். தமிழ் ஆங்கில இலக்கியங்களும் லத்தீன் புத்தகங்களும் வீட்டில் நிறைய இருக்கும். சிறுவர் இலக்கியம், உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கியம் என இக்காலத்திற் கருதப்படும் செய்யுள் உரைநடை லக்கியங்கள் அக்காலத்தில் இல்லை. ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, உலகநீதி, நீதிவெண்பா குமரேசர் சதகம், தோத்திரப் பாடல்கள் ஆதியவற்றையே படிமுறையாக வகுத்துப் பாலருக்கு உரியன என்று கற்பிப்பார்கள், உரைநடையும் அப்படியே. இலகுவான செய்யுள் நூல்களான கோவலன் கதை, ஏணியேற்றம், பவளக்கொடி மாலை வீடு, அல்லியரசாணி மாலையிடுபோன்ற நூல்கள் வீட்டில் இருக்கமாட்டா. யாரிடமாவது இரவல் வாங்க முடிந்தாலும் அவற்றைப் படிப்பதைப் பெற்றோர் ஆதரிக்கமாட்டார்கள். இலகு வசன நூல்களான மதனகாமராஜன் கதை; விக்கிரமாதித்தன் கதைபோன்றவைகளின் விஷயமும் அப்படியே. இப்படிப்பட்ட நூல்களைப் படிக்க அனுமதியே கிடையாது.

### வீட்டில் இடம்பெறு நூல்கள்

தப்பித் தவறி எங்காவது இரவல் வாங்கி வந்தாலும் வீட்டில் படிக்க முடியாது. எத்தனை வேலைக்கிடையிலும் என்ன படிக்கிறோம் என்று கவனித்துக் கொள்வார் தாயார். பாடபுத்தகம் அல்ல என்று தூரப் பார்வையிலேயே அறிந்து கொள்வார். என்ன புத்தகம் என்று விசாரித்தறிந்து படிக்கவிடாமல் மறுநாளே திருப்பிக் கொடுத்துவிடச் செய்வார். இலகுவான வசன நூல்களுள் "அங்கீகாரம்" பெற்றவை "மரியாதை ராமன் (—இவன் தமிழ் நாட்டு நீதிபதிசாங்கோ—) கதை", "தென்னாலிராமன் கதை", "ராயர் அப்பாஜி கதை" என்பன. இவைகளை வாசிக்க அனுமதி கிடைக்கும்; ஆதரவு கிடையாது. இவைகளில் எழுத்துப் பிழைகள் மலிந்த பதிப்பே கிடைக்கும். நாவலர், சாமிநாதையர்போன்ற சான்றோர் இவற்றை இலக்கியம் என்று மதிக்கவி[illegible]யால, சிறந்த தமிழ் அறிஞரால் திருத்தப்பட்ட சுத்தமான பதிப்பு கிடையாது இக்காரணத்தால் பள்ளிக்கூட வாசிகசாலைகளில் இவை இடம்பெறுவதில்லை; எங்கள் வீட்டிலும் இவை இடம்பெற்றதில்லை.

### விசேஷ பரிசு

படிப்பதானால் பஞ்சதந்திரக் கதைகள், பெரிய புராண வசனம் இராமாயண வசனம் போன்ற நூல்கள் தான் படிக்க வேண்டும். அத்தகைய நூல்கள் வயதுக்கேற்றபடி விலைக்கு வாங்கி வந்து பரிசு என்று பெயர்சூட்

திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம்
B. A. (Hons), (Lond) M. Litt

டியோ சூட்டாமலோ வாசிக்கக் கொடுப்பதும் தந்தையாருக்கு விருப்பமான செயல். வீட்டில் "பரிசு" அளித்துக் கல்வியில் ஊக்குவது பற்றிக் கூறும்போது வன்னியசிங்கத்துக்குப் பள்ளியில் அவர் படிக்கும் காலத்தில் அத்தி பூத்தாற்போல் நிகழ்ந்த ஒரே பரிசளிப்பு வைபவத்தின் போது கிடைத்த பரிசு நினைவுக்கு வருகிறது. "பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்" தான் பரிசாகக் கிடைத்த நூல். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கேம்பிரிட்ஜ் ஸீனியர் பரீட்சையில் தமிழில் அதி விசேஷ சித்தி (Distinction) பெற்றதற்காக வழங்கப்பட்ட விசேஷ பரிசு (Special Prize) இதுவாகும்.

### அருங்கலை விநோதர்

சிறுவர்க்கேற்ற நூல்களுக்குத்தான் பஞ்சமே ஒழிய, இலக்கிய நூல்களை வாசித்து உணரும் தரம் அடைந்த பின் அகல வாசிப்புக்கு வேண்டிய நூல்களால் குறைவே இல்லை. வீட்டில் ஒரு நல்ல சிறு வாசிகசாலையே இருந்தது எனலாம். தந்தையார் அருங்கலை விநோதர். அவர் வருமானத்தில் கணிசமான ஒரு பகுதி நூல்கள் வாங்குவதில் செலவாகியிருக்கும். சிறந்த தமிழ் நூல் எது வெளிவந்தாலும் அதை வாங்காமல் இருக்கமாட்டார். சரித்திர நூல்களும் பல வாங்கி வைத்து யாழ்ப்பாணத்து [illegible] ஆராய்ந்து தொடர் கட்டுரை எழுதுவதும், இரு செ. இராசநாயக முதலியார் அவர்கள் அவ்விஷயமாக எழுப்பும் ஆட்சேபங்களுக்கு விடை எழுதுவதுமாக இருப்பார். இராமாயணத்திலும் சிலப்பதிகாரத்திலும் அவருக்கு ஈடுபாடு அதிகம். இராமாயணம் படித்தால் வீட்டுக்கு நல்லது. விருத்தி உண்டு என்றும் இராமாயணம் சுந்தர காண்டத்தை முறையாக ஓதி வந்தால் "நாடிய பொருள்கைகூடும்" என்றும் தென்னிந்தியாவில் இராமாயணத்தையே விரும்பிப் படிப்பார்களாம்.

### பாரதம் படித்தால் விருத்தியில்லை


பாரதம் படித்தால் விருத்தியில்லை என்று அதிகம்படிப்பதில்லையாம். அத்தகைய ஒரு நம்பிக்கை காரணமாகவோ அல்லது, இராமாயணத்தில் தொட்ட தொட்ட இடமெல்லாம் சுவை நலந்துறுமிய செய்யுட்கள் காணப்படுவதுபோலப் பாரதத்திற் காணப்படாமையாலோ தந்தையாருக்குப் பாரதத்தில் ஈடுபாடு இல்லை. தன் அண்ணன் இரவல் வாங்கி வந்து கொடுக்கத் தான் இளமையில் சிறிது சிறிதாக வாசித்த ஒரே நூல் என்பதற்காகத் தாயாருக்குப் பாரத வசனத்தின் மேல் அபிமானம் பலமுறை பேச்சோடு பேச்சாக வீட்டில் பாரதம் ஒரு பிரதிகூட இல்லை என்று சொன்னதற்கு 'பாரதத்தில் என்ன விசேஷம் இருக்கிறது?" என்று அலட்சியமாகக் கூறிவிட்டார் தந்தையார். பிள்ளைகள் நால்வரும் வளர்ந்து குழந்தைகளைப் பார்க்கும் தொல்லை நீங்கிய பிறகு "இளமையில் பாரத வசனம் நாலு கட்டும் (Volumes) வாசித்தேன். திரும்பவும் ஒருமுறை வாசிக்கலாம் போலிருக்கிறது" என்று தனக்கு வாசிக்க ஆசை இருப்பதாகத் தெரிவித்த பிறகே நாலு கட்டும் வாங்கி வந்து கொடுத்தார்.

### தாயாரின் ஒரே ஆசை

எனக்குத் தெரிந்து தாயாருக்குஏற்பட்டது இந்த ஒரே ஆசைதான். மற்றப்படி குடும்ப கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும், பிள்ளைகளை நல்ல நிலையில் வைக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே செயல்படும் அவர் உள்ளம். ஆடை அணி, உணவு, கோவில் குளம், திருவிழா, வேடிக்கை, விநோதம், உறவினரோடு அளவளாவுதல் ஆதிய எந்தத் திசையிலும் அவர் மனம் அலைபாய்ந்ததாக எங்களுக்குத் தெரியாது. அதனால் அவர் மனதில் எழுந்த ஒரே ஆசையை முதலில் தந்தையார் புரிந்துகொள்ளவில்லை; புரிந்ததும் நிறைவேற்றி வைத்தார். தாம் படிப்பதற்காக அல்ல, வீட்டில் இருக்க வேண்டும் என்பதற்காக பெரிய புராணமும் வாங்குவித்தார் தாயார். இப்படிப் பலதிறத்துத் தமிழ், ஆங்கில நூல்கள் வீட்டிலேயே கிடைக்கும். பொது வாசிகசாலையிலிருந்தும் பற்பல புத்தகங்கள் எடுத்து வந்து கொடுப்பார் தந்தையார்.

இலக்கியங்களில் வரும் சொற்கள் சொற்றொடர்களுக்குப் பொருளோ விளக்கமோ கேட்டால் மட்டும் உடனே சொல்லிக் கொடுப்பார்கள் தந்தையாரும் மூத்த மாமனாரும். சிலசமயங்களில் தாயார் கூடச் சொற்பொருளோ சொற்றொடர் விளக்கமோ சொல்லிக்கொடுப்பதுண்டு. இதனால் இலக்கியம் படிப்பதில் எங்களுக்கு என்றுமே எவ்வித கஷ்டமும் இருந்ததில்லை.

(தொடரும்)



தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாநாட்டில் (1957 ஜூலை) அமரர் கு. வன்னியசிங்கம் பேசிக்கொண்டிருக்கிறார்.

## ப்ரம்மீகேச ரஞ்சன தைலம் (A)



கண்சூடு, கண்எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடிவிழுதல், நரையுண்டாகுதல், ஞாபகசக்தி குறைதல் முதலிய வியாதிகளை நீக்கி, தலைமயிரை அழகான கருநிறத்தில் இடைநெருங்க வளரச் செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரைமயிரை முன்போல் கறுப்பு நிறமாக மாற்றுகிறது. இந்தத்தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100 வயதானாலும் "நரையும்" வழுக்கையும் உண்டாகாது. பெண்மணிகள் சேர்க்கை முடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படாது.

விலை : 6 அவுன்ஸ் போத்தல் 3-50.

## (B) அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும் மேலே சொன்ன எல்லா குணங்களும் அதேபடி அமைந்திருக்கிறது. கூடுதலான நரை மயிரை விரைவில் கருநிறமாக்கி வளரச் செய்யும்படி சக்தி வாய்ந்த திவ்விய மூலிகைகளை பிரத்தியேகமாச் சேர்த்திருப்பதே இதன் முக்கியத்துவம்.

விலை : 6 அவுன்ஸ் 4-50.

S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET,
COLOMBO—13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1960 அக்டோபர் மாதம் 16-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலைபேசி எண் : 3411 த. பெ. 1183.


# தேசிய கல்வித்திட்டம் என்றால் சிங்கள பௌத்த கலாசாரமாம்

## மந்திரி வெளிப்படையாகச் சொல்கிறார்

## அரசாங்கத் தலையீடின்றி இருக்க வேண்டும் கல்விமுறை

## அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் கருத்து இது

## தற்கொலைக்கு ஒப்பானது

உலகில் ஜனநாயகம் நிலவும் நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் எல்லாம் அரசாங்கத்தின் தலையீடு எதுவுமின்றி சுயநிர்வாக சுயாதீனத்துடன் இயங்கி வருகின்றன.

பல்கலைக் கழகங்களுக்கு அரசாங்கம் மொத்தத் தொகையாக மான்யம் வழங்கியபோதிலும் அவற்றின் நடைமுறைகளில் அரசாங்கம் அத்துமீறிப் பிரவேசிக்கக் கூடாது என்ற சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது அத்தோடு பல்கலைக் கழகத்தினர் தமக்குப் பிடித்தமான எந்த அரசியல் இலட்சியத்தையும் உடையவர்களாக இருக்கலாம் என்றும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு நாட்டின் கல்வித்துறை எந்த அரசியல் கட்சியின் நிர்ப்பந்தமும் ஆதிக்கமும் இன்றி சுதந்திரமானதாக அமைய வேண்டும் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே இத்தகைய பரந்த போக்கினை ஜனநாயக நாடுகள் மேற்கொள்ளுகின்றன.

இதற்கு மாறாகச் சர்வாதிகாரச் சமதர்ம நாடுகளில் அரசாங்கம் கல்வி நிலையங்களைக் கைப்பற்றித் தன் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்படுத்தி வைத்திருப்பதைக் காணலாம். ஆட்சியிலிருக்கும் கட்சியின் அரசியல் கொள்கைகளைப் பாடசாலைச் சிறுர்களின் பிஞ்சு உள்ளத்தில் பதித்து, அத்தனை ஜீவன்களையும் ஒற்றைப்போக்கில் சிந்திக்கும்படி செய்து, அவர்களை ஆட்சிபீடத்தின் நிரந்தர அடிமைகளாக்குவதே இத்தகைய கல்வி முறையின் நோக்கமாகும். இதையே தேசியக் கல்வி முறை என்ற அழகான போர்வையில் கொம்யூனிஸ்டு நாடுகள் நடைமுறையில் கொண்டு வந்திருக்கின்றன.

இலங்கை அரசாங்கமும் இந்த வழியில் செல்லவே திட்டமிடுகின்றது. மதஸ்தாபனப் பாடசாலைகளையும், உதவிநன்கொடை பெறும் பாடசாலைகளையும் பிடுங்கி அனைத்தையும் அரசாங்கத்தின் இரும்பு ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்த நிலை ஏற்பட அனுமதிப்பது நாட்டில் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்துக் கொம்யூனிஸ சர்வாதிகாரம் தலைதூக்க வழி செய்வதாகும்.

ஒரு நாட்டுக்கு வேண்டிய நெறி முறையான கல்வியைக் கடைசி ஓடத்தில் ஏறி, வகுப்புவாத வெள்ளத்தில் மிதந்து வந்து, ஆட்சியில் உட்கார்ந்து கொண்ட ஒரு அரசாங்கம் செவ்வனே அளிக்க முடியாது என்றும், கல்வி வல்லுநர்களைக் கொண்ட தனிப்பட்ட ஸ்தாபனங்களே தரமான கல்வியை அளிக்க முடியும் என்றும் உலகக் கல்வி மான்களிடையே ஏகோபித்த கருத்து நிலவுகின்றது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விருந்தொன்றில் கலந்து கொண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு டி எம் நாராயணசாமிப்பிள்ளை இக்கருத்தை வலியுறுத்திப் பேசியுள்ளார்.

"பாடசாலைகளில் முறையான கல்வி அளிக்கப்பட வேண்டுமானால், அப்பாடசாலைகள் தனிப்பட்டவர்களால் நிர்வகிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும். பாடசாலைகள் ஒருபோதும் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படலாகாது" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிய துணைவேந்தர், தொடர்ந்து பேசுகையில் "அரசாங்கம் பாடசாலைகளுக்கு உதவிநன்கொடைகள் வழங்குவதால் பாடசாலைகளை நிர்வகிக்கும் உரிமை அரசாங்கத்துக்கு இருக்க வேண்டும் என்று வாதிக்கப்படுமானால், பல்கலைக் கழகத்தின் மீதும் அரசாங்கம் எதுவித தயக்கமுமின்றிக் கைவைக்கும் நாள் அதிக தூரத்திலில்லை என்று கூறலாம். அரசாங்கம் மொத்த மான்யம் வழங்கியபோதிலும் பல்கலைக் கழகங்கள் சுயாதீனத்துடன் இயங்க வேண்டியவையாகும். அதுபோலவே நாட்டின் கல்வித்துறையும் அரசாங்கத்தின் தலையீடும், அநாவசியக் கட்டுப்பாடுகளுமின்றி நடைபெற வேண்டியதாகும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகள் அனைத்தையும் அரசாங்கம் கைமேற்றால் என்ன நடக்கும் என்பதற்கு பண்டாரநாயகா ஞாபகார்த்த தினத்தையொட்டிக் கல்வி இலாகா பாடசாலைகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையொன்றே சான்று பகர்கின்றதல்லவா?

இதை உணர்ந்த பின்பும் ஒருசிலர் அரசாங்கம் பாடசாலைகளைக் கைமேற்பதை வரவேற்கிறார்கள் என்றால் அவர்களின் அறியாமைக்காகவும் சுயநல நாட்டத்துக்காகவும் நாம் வருந்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

தமிழ் ஆசிரியர்கள் சிலர் தமது மகாமைக்காரர் மீது கொண்ட ஆத்திரம் காரணமாக பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பதை ஆதரிக்கிறார்கள் ஒருவர் பாதிக்கப்பட்டார் என்பதற்காக இனத்தையே எதிரியின் கையில் ஒப்படைக்கும் இழி செயல் இதுவாகும் வீட்டிலே எலியின் உபத்திரவத்தை ஒழிப்பதற்காக கூரைக்கே நெருப்புக் கொடுத்தானாம் ஒரு புத்திசாலி. இந்தப் புத்திசாலியின் மனோபாவத்தோடு தான் சில தமிழ் ஆசிரியர்கள் அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதை வரவேற்கிறார்கள் போலும்.

கல்வித்துறையில் ஒரு தேசியத் திட்டத்தை அமுல் நடத்துவதற்காகவே அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்கிறது என்று சொல்லப்படுகிறதல்லவா? இந்தத் தேசியக் கல்வித் திட்டம் எப்படியானது என்பதை உள்ளூராட்சி அமைச்சர் திரு மாநாம சமரவீர ஒரு பொதுக்கூட்டத்தில் வெளியிட்டுள்ளார். "நீண்டகால பௌத்த சரித்திரத்தையுடையதும், பெரும்பான்மையாக பௌத்த மதத்தினரால் நிறைந்ததுமான இலங்கையை ஒரு பௌத்த நாடாக்குவதே எங்கள் தேசிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும்"

தமிழ் பேசும் மக்களாகிய நாம் முதலில் இழந்தது (இந்திய வம்சாவளித் தமிழர்) குடியுரிமை. அடுத்து நிலஉரிமை. அதன் பின்னர் மொழி உரிமை.

குடியுரிமை போனதால் பலமிழந்தோம்; நிலவுரிமை போனதால் சிங்களவர்களையும் எமது பிரதிநிதிகளாகப் பெறும் துர்ப்பாக்கியம் அடைந்தோம்; மொழியுரிமை போனதால் எங்களது ஒரே ஒரு 'கைத்தொழிலான' அரசாங்க ஊழியத்தையும் இழக்கும் கட்டத்துக்கு வந்துவிட்டோம்.

இந்த நிலைமையில் எமது குழந்தைகளுக்கு எமது இஷ்டப்படி கல்வி கற்பிக்கும் உரிமையையும் இழப்பதானால்...? தேசிய கல்வித் திட்டம் ஒன்றை அமுல் நடத்தப்போகிறோம் என்ற போர்வையில் அரசாங்கம் பாடசாலைகள் எல்லாவற்றையும் கைப்பற்றி நடத்துவதை அனுமதித்தால்...?

### துணை-வேந்தர் கூற்று

எமது அண்டை நாட்டுக் கல்விமான்களில் ஒருவர்—அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை கூறுகிறார்:-

"கல்வி முறையில் உகந்த போதனை பாடசாலைகளில் கிடைக்க வேண்டுமானால் பாடசாலைகள் ஒருபோதும் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படக் கூடாது. தனிப்பட்ட ஸ்தாபனங்களே இவற்றை நடத்த வேண்டுமென்பது மிக அத்தியாவசியமானது.

"பல்கலைக் கழகங்கள் எவர் தலையீடுமின்றிச் சுயநிர்வாகத்தில் இயங்குவது என்பது எங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படைக் கொள்கை. இவற்றை நிர்வகிக்க வசதிகள் அளிப்பதுடன் அரசாங்கம் நின்றுவிட வேண்டியதே முறை அப்படியானால்தான் அறவுத் தேட்டத்தில் மனித வன்மைகள் எவ்வித தங்குதடையுமின்றித் தொழிற்பட முடியும்.

### என்ன புதுமையிது!

"பாடசாலைகளுக்கு மான்ய உதவியளிப்பதால் இவற்றை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்றால், இந்தப் பல்கலைக் கழகங்களையுமல்லவா அரசாங்கம் தானே எடுத்து நடத்த வேண்டும்! அறிவைத் தேடும் முயற்சியில் அரசாங்க இயந்திரம் குறுக்கிட்டு ஆகுமா? எந்த உலகப் புதுமையிது?" இவ்வாறு கேட்கிறார் திரு நாராயணசாமிப்பிள்ளை.

### இஸ்லாமியர் எதிர்ப்பு

இஸ்லாமிய மக்களும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை எதிர்க்கிறார்கள் என்பது தெளிவாகிவிட்டது. அகில இலங்கை முஸ்லிம் லீக் அணிமையில் கூடியபோது பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது:-

'பல்வேறு மதத்தவர்களும் மத சூழ்நிலைக்கமைய தத்தம் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டும் உரிமையில் இச்செயல் தலையிடுவதால், அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதை அகில இலங்கை முஸ்லிம் லீக் ஆழ்ந்த கவலையுடன் கவனிக்கிறது"

இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### தேசியத் திட்டம்

இன்று ஒளிப்பு மறைப்பில்லை சுதந்திரக் கட்சி மந்திரி ஒருவரே கூறிவிட்டார் 'தேசிய கல்வித் திட்டமென்றால், பெரும்பான்மை மக்களின் சிங்கள—பௌத்த அரசாங்கம் தான்" என்று.

தமது பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் இந்தப் பின்னணியை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மறந்து விடலாகாது. பிரமாண்டமான ஒரு கிடுக்கித் தாக்குதலின் ஒரு சிறு முனையே பாடசாலை விஷயம். ஆபத்து இன்னுமிருக்கிறது.

### தீ வைக்கலாகாது

தமிழ் பேசும் ஆசிரியர்களில் ஒரு சாரார் அரசாங்கம் பாடசாலைப் பொறுப்பேற்பதைப் பகிரங்கமாக ஆதரிப்பது தெரிந்ததே. இன்றுவரை பாடசாலை முகாமைக்காரராயிருந்த சுயநலப் பூண்டுகளால் இவர்கள் பட்ட சிரமம் கொஞ்சநஞ்சமல்ல. உண்மைதான் ஆனால் இந்த ஆசிரியர் தம் உரிமைகளைக் காக்க முனையும்போது தம்மையும் உள்ளடக்கிய ஒரு பரந்த சமுதாயமாகிய தமிழ் பேசும் இனத்துக்கே தீங்கு விளைவிக்கிறார்கள் என்பதை நன்கு உணர வேண்டும். வீட்டிலிருக்கும் எலிகளை அப்புறப்படுத்தும் முயற்சியில் வீட்டிற்கே தீவைத்துவிடலாகாது.

என்ற அவர் வெளிப்படையாகக் கூறியுள்ளார். அரசாங்கத்தின் பொறுப்பு[illegible] அமைச்சரே இப்படிக் கூறிவிட்ட பின், சிறுபான்மை மக்கள் அரசாங்கம் பாடசாலை[illegible] தற்கொலைக்கொப்பானதாகும்.

# கணேசையர் நினைவு விழா

## இந்து பல்கலைக் கழகத் தேவைபற்றி சேர் கந்தையா, சு. ந. வற்புறுத்து

யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக் கழகம் ஒன்று அவசியம் நிறுவப்பட வேண்டும் என்று கணேசையர் நினைவு விழாவில் பேசிய சேர் கந்தையா வைத்தியநாதனும் திரு சு. நடேசபிள்ளையும் வற்புறுத்தினார்கள்.

ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றத்தின் ஆதரவில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் விழா நடைபெற்றது. அண்ணாமலை பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. டி. எம் நாராயணசாமிப்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு நாராயணசாமிப்பிள்ளை பேசும்போது தமிழ் வளர்ச்சிக்காக ஆக்கப்பணி புரியும்படி அனைவரையும் வேண்டிக்கொண்டதோடு, எதிர்காலம் பற்றி எவரும் பீதியடைய வேண்டியதில்லை என்றும் சொன்னார்.

அவர் தொடர்ந்து திரு கணேசையர் பற்றிப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"தமிழ் வளர்த்த இப்பெரியார்களில் ஒருவரான கணேசையருக்கு நாம் அஞ்சலி செய்தால் மட்டும் போதாது

கணேசையரின் கட்டுரைகளை தொகுத்து வெளியிடுவது அவசியமானது."

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு ஸ்ரீகாந்தா கணேசையர் நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசினார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பேசுகையில் கணேசையரின் திறமை பற்றியும் தமிழ்ப் புலமை பற்றியும் எடுத்துரைத்தார்.

திரு ச. பேரின்பநாயகம், பண்டிதர் வித்துவான் க. கி. நடராஜன், பேராசிரியர் வி. செல்வநாயகம், பண்டிதர் வ. நடராஜா ஆகியோரும் பேசினார்கள்.

கலைப்புலவர் க. நவரத்தினம் கணேசையர் நினைவு மலரை அரங்கேற்றி உரை நிகழ்த்தினார்.

விழா ஆரம்பத்தில் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

# கந்த முருகேசனார்

## அறுபதாம் ஆண்டு நிறைவு விழா

தென்புலோலியூர் தண்டமிழ்ப் பேராசிரியர் திரு கந்த முருகேசனாரின் 60-ம் ஆண்டு நிறைவையொட்டி விழாவெடுக்க அவரது மாணவர்களும் நண்பர்களும் முயற்சிகள் செய்து வருகிறார்கள்.

விழாவில் கலந்துகொள்ள விரும்புவோர் இம்மாதம் 23-ந் தேதிக்கு முன்னர் கொழும்பு புளுமெண்டால் வீதி 484/11ம் இலக்கத்தில் வசிக்கும் திரு க. வாகீஸ்வரராசா அல்லது திரு மு. இராசரத்தினத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் செல்லும்

# மந்திரி மைத்திரிபாலாவுக்கு எச்சரிக்கை

சிங்களம் படிப்பதுபற்றி

## எங்கள் அரசியல் தலைவர்களை கேட்டுத்தான் பதில் தரலாம்

## தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி தமிழ் ஊழியர்கள் அதிகாரிக்கு சொன்னது

(சுதந்திரன் நிருபர்)

"சிங்களம் படிப்பதா இல்லையா, என்பது அரசியல் பிரச்சினை (Political Question). ஆதலால் அதுபற்றி எங்கள் அரசியல் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்துத்தான் பதில் தரமுடியும்" என்று தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிலுள்ள தமிழ் ஊழியர்கள் தமது மேலதிகாரியிடம் கூறினார்கள்.

கடந்த புதன்கிழமை தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி உதவி நிர்வாக அதிகாரி (Post Office Savings Bank Administrative Assistant) தமது கந்தோரிலுள்ள தமிழ் ஊழியர்களை அழைத்து, "சிங்களம் படிப்பிக்க வகுப்புத் தொடங்கப் போகிறோம். படிக்கிறீர்களா? படித்தால் உங்களுக்கும் நல்லது; எங்களுக்கும் நல்லது' என்றார்.

"நல்லதோ, கெட்டதோ இது ஒரு அரசியல் பிரச்சினை ஐயா; ஆகலால் எங்கள் அரசியல் தலைவர்களைக் கலந்து ஆலோசித்துத்தான் பதில் சொல்லுவோம்" என்று தமிழ் ஊழியர்கள் இறுக்கிச் சொன்னார்கள். வேறு வழியில்லாமல், "சரி, அப்புறம் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு அதிகாரி விறு விறு என்று சென்றுவிட்டார்.

தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில் உள்ள சுமார் 450 ஊழியர்களில் சுமார் 200 பேர் தமிழராவர். இப்படிப் பெருந்தொகையான தமிழ் ஊழியர்கள் தபால் தந்திப் பகுதியில் வேறு எந்தப் பிரிவிலும் இல்லை. இங்குள்ள தமிழ் ஊழியர்களைச் சிங்களம் படிக்க வைத்துவிட்டால் தபால் தந்தி இலாகாவில் உள்ள அத்தனைத் தமிழர்களையுமே சிங்களம் படிக்க வைத்த மாதிரியாகிவிடும் என்ற அதிகாரிகளின் நினைப்பை தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி ஊழியர்கள் முறியடிக்கவிருக்கிறார்கள் என்று சுதந்திரனுக்கு கிடைத்த அந்தரங்கச் செய்தி ஒன்று கூறுகிறது.

## வித்தியாசாலை ஆண்டு விழா

மருதங்குளம் சைவப் பிரகாச வித்தியாசாலையின் 2-வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 20-ந் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு பிரஸ்தாப வித்தியாசாலையில் நடைபெறவிருக்கிறது.

திரு. எஸ். டி. சிவநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பேராசிரியர் அ. சின்னத்தம்பி, பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு ஆ. செ. சுப்பிரமணியம் ஆகியோர் பேசுவார்கள்.

விழாவின் ஒரு அம்சமாக நாடகம் ஒன்றும் நடைபெறவிருக்கிறது இதற்கு திரு கே. எஸ் நடராசா தலைமை தாங்குவார். நாடகம் தவிர "வாள் அபிமன்" என்ற கூத்தும் நடைபெற விருக்கிறது இதைப் பழக்கியவரான திரு செ. தினகரம்பிள்ளை விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

## நாடு பிழைக்க ஒற்றை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சதுர மைல். இலங்கையிலும் சுமார் 40 மடங்கு பெரிய தேசம் போக்குவரத்து வசதிகளில்லை தூரத் தூர இருக்கும் குடியேற்றங்கள். சனச் செறிவு குறைவு மொத்தம் 130 லட்சம் மக்கள்.

### ஒற்றுமைக்கு ஒரே வழி

இந்தப் பின்னணியில் ஒற்றையாட்சி இயங்குவதெப்படி? இத்தனை வேற்றுமைகளுக்கும் ஒழுங்கா இசைவு தேடுவது எங்ஙனம்? செல்வங்கொழிக்கும் கடாங்கா பிச்சைக்காரன் லியப்போல்டவில் மாகாணத்துக்கு உயர் கொடுக்க இசைவதெப்படி?

இத்தனை வேற்றுமைகளுக்கும் பரிகாரம் என்ன? இத்தனை தலைவர்களும் கூடிப் பேசுவதுதான் பரிகாரம். கூடிப்பேசினால் வழிபிறக்கும் "மதம், மொழி இனம், தூரம் ஆகிய வேறுபாடுகளால் பலதேசமாயியப்பிளவுபட்டிருக்கும் நாடுகளுக்கு ஏற்ற பரிகாரம் அவ்வப் பிரதேசங்களுக்கு மாகாண சுயாட்சி ஏற்படுத்துவதுதான்!"—அதாவது கொங்கோவில இணைப்பாட்சி ஏற்பட வேண்டும் அப்பொழுதுதான் இத்தனை வேற்றுமைகளையுமுடைய மக்கள் ஒன்றாக இணைந்து ஒரே அரசினகீழ் வாழ முடியும்.

### 'தேசம்' என்றால் என்ன?

"நாடு" என்று ஒரு பகுதி ஒரே நாடாக இருக்க வேண்டுமானால் அந்நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் அந்த ஒரே தேசத்திற்கும் தேசீயத்திற்கும் உள்ளம் நிறைந்த பக்தி செலுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். உள்ளம் நிரம்பிய அன்பை 'உற்பத்தி' செய்ய முடியாது தானாக ஊற்றெடுக்கும் உணர்ச்சியை ராணுவத்தினாலோ வேறெந்தப் பலாத்காரத்தினாலோ உண்டாக்குவிக்க முடியாது. தேசபக்தி வளர வேண்டுமானால் தேசத்திலுள்ள மக்கள் அனைவரும் மனம் நிரம்பித் திருப்தி அடைய வேண்டும். உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் உள்ளம் நிரம்ப ஒரு நாட்டிற்கு வணக்கம் தெரிவிப்ப தெப்படி?

ஒரே நாடு என்ற தேசிய உணர்வும் தேச பக்தியும் தோன்ற வேண்டுமானால் மக்கள் அனைவரும் தத்தம் உரிமைகளைத் தங்கு தடையின்றி அனுபவிப்பதில் தடைகளிருக்கக் கூடாது. இந்தக் கூற்று கொங்கோவிற்கு மாத்திரம் தான் பொருந்தும் என்பதில்லை அங்கே போகுமுன்னரே—கடலைத் தாண்டு முன்னரே—இலங்கையும் அது உண்மையாகிவிடுகிறதல்லவோ!

### ஒற்றையாட்சி ஒழிந்தது'

பிரிந்து போகிறோம், தனியரசு நிறுவுகிறோம் என்று கூவிய கடாங்காவின் ஷோம்பேயும், காசாவின் கலோஞ்சியும் இன்று இணங்கிவிட்டார்கள். இணைப்பாட்சியின் கீழ் பிரதேச சுயாட்சி நிறுவப்படுமானால் கொங்கோ என்ற நாடு சிரஞ்சீவியாகும் என்றுவிட்டார்கள் மத்திய கேந்திர ஆட்சியில் நம்பிக்கை கொண்ட லுமும்பாவும் இறங்கி வந்துவிட்டார—வெகுதூரம் கீழே. கொங்கோவில் மாகாண சுயாட்சிக் குறுக்கே தான் நிற்கப் போவதில்லை என்று விட்டார்.

இந்தப் பரிகாரம் நடைமுறையில் வருமா? கொங்கோவில் நிலைமை சீரடையுமா?

இவற்றிற்குப் பதிலளிக்க விற்பன்னர்கள் தேவையில்லை எந்தக் குழந்தையின் ஊகமும் சரியாகலாம். ஏன் தெரியுமா?—

இது 'கொங்கோ'

## திருமண அழைப்பு

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1991 ஐப்பசித் திங்கள் 5-ஆம் நாள் (21—10—60) வெள்ளிக்கிழமை காலை 6-30 மணியளவில

செல்வன் சி. நரேந்திரநாதன்
(கணக்காளர், கல்லோயா அபிவிருத்திச்சபை, இங்கினியகல) அவர்களுக்கும்

எமது மகள்
செல்வி சாவித்திரிக்கும்

நடைபெறவிருக்கும் திருமணவிழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு

சுற்றத்தவரையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம.

'வளர்மதி'
சத்திரமடம்,
யாழ்ப்பாணம்.

வணக்கம்.

## சங்கிலியன் புரட்சி கோஷ்டி விடுத்திருக்கிறது

### ரயில் நிலையத்தில் சிங்கக் கொடி மாத்திரம் பறந்தால்.....?

(சுதந்திரன் நிருபர்)

இம்மாதம் 20-ந் தேதி மந்திரி மைத்திரிபால சேனநாயகாவால் திறந்து வைக்கப்படவிருக்கும் யாழ்ப்பாணம் ரயில் நிலையப் புதுக் கட்டடத்தில சிங்கக் கொடி மட்டுமே பறக்குமானால் மந்திரிக்கு வரவேற்புக்குப் பதில் கறுப்புக் கொடி மரியாதைதான் கிடைக்கும் என்று சங்கிலியன் புரட்சிக் கோஷ்டி எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

சங்கிலியன் புரட்சிக் கோஷ்டிச் செயலாளர் திரு சதாசிவம் மந்திரி மைத்திரிபாலாவுக்கு எழுதியுள்ள எச்சரிக்கைக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

### எச்சரிக்கை

"தாங்களும் வேறு சில மந்திரிகளும் யாழ் ரயில் நிலையப் புதுக் கட்டடத் திறப்பு விழாவுக்கு வருவதாக அறிகிறோம். வாருங்கள். உங்கள் வரவு நல்வரவாகட்டும். தங்களை வரவேற்க யாழ் மக்கள் எதிர்நோக்கியிருக்கிறார்கள். விருந்துபசாரங்களும் காத்திருக்கின்றன.

"ஆனால் ஒன்று. யாழ் ரயில் நிலையக் கட்டடத்தைச் சிங்கக் கொடியால் மட்டும் அலங்கரிக்கும்படி தங்கள் இலாகா யாழ் ரயில் நிலைய அதிகாரிகளை நிர்ப்பந்திப்பதாக அறிகிறோம். இது உண்மைதானா? உண்மையாயின் யாழ்ப்பாணத்தில் இந்தச் சிங்கக் கொடி விளையாட்டை' நிறுத்தும்படி உங்களை முன்கூட்டியே எச்சரிக்கிறோம்

### கறுப்புக்கொடி

"எச்சரிக்கையை நீங்கள் பொருட்படுத்தி 'சிங்கக் கொடி விளையாட்டை' நிறுத்தாவிட்டால் கறுத்தக் கொடிகள்தான் உங்களை வரவேற்கும். ஆயிரக்கணக்கான மக்கள் உங்கள் வருகையை ஆட்சேபித்து பகிஷ்கரிப்பு நடத்தி அதனால் பொலிஸ் தடியடிக்கு இலக்காகலாம். இதெல்லாம் யாழ் ரயில் நிலையத்துக்கு ஒன்றும் புதுமையானது அல்ல. எனவேதான் காலை வைக்குமுன் ஆழத்தை அறியும்படி கூறுகிறோம்"—இவ்வாறு சங்கிலியன் புரட்சிக் கோஷ்டிச் செயலாளர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

## அறிவித்தல்

அன்புடையீர்!

யாழ்ப்பாணம் வடமாராச்சிப் பகுதி தென் புலோலியூர் தண்டமிழ் பேராசிரியர் திரு. கந்தமுருகேசன் அவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை அவரின் மாணவர்களும், நண்பர்களும் கொண்டாட முனைந்துள்ளார்கள். இதில் கலந்து கொள்ள விரும்புவோர் எதிரே வரும் 23-10-60ம் தேதிக்கு முன், இல. 484/11, பழுமண்டால் வீதி, கொழும்பு 13 இல்லத்தில் வசிக்கும் திரு. க. விக்னேசுவரராசா அல்லது திரு. மு இராசரெத்தினம் அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கனைபுடன் வேண்டுகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளிப் பரிசு

பா. பாலேஸ்வரி

விடிந்தால் தீபாவளி என்பதை அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டிருந்தது அக்கம் பக்கத்திலிருந்து வந்த சிறு வெடிச் சத்தம்.

என் மனைவிக்கு என்ன சேலை எடுக்கலாம், அவளுக்கு என்ன நிறம் பிடிக்கும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த சமயம், 'உங்களைத்தான்...! எப்ப தொடக்கம் கூப்பிடறேன் கேட்காத மாதிரியல்லவா இருக்கிறீர்கள்!' என்று அவளின் குரல் கேட்டது

என் மனைவியின் குரல் என் சிந்தனையை ஈர்த்தது.

"கூப்பிட்டாயா......? நிஜமாக எனக்குக் கேட்கவில்லை மன்னிச்சிக்கோ அம்மா!" என்றபடியே என் மனைவியின் குரல் வந்த திசையை நோக்கினேன்.

ஒரு கணந்தான் என் பார்வை அங்கே நிலைத்தது. அடுத்த கணம் பாம்பை மிதித்தவன் போல உடல் பதற, முகம் வெளுப்பேற அவள் கையிற் பிடித்திருந்த புடவையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்படிப் பார்ப்பதற்கு அந்தப்புடவை ஒன்றும் அத்தனை விகாரமாக வில்லை. அதை நானே என் கையால் இவளுக்கு முதல் தீபாவளிப் பரிசாக அளித்தேன். ஆனால் ஒரு முறையாவது அதை அணிந்து அழகுபார்க்க அவளுக்கு நான் அனுமதியளிக்கவில்லை. அந்தச் சேலையை அவளுக்குக் கொடுத்த மறுநாளே அடிப் பெட்டியிற் போட்டு விடும்படி கட்டளை வேறு இட்டேன். மூன்றாண்டுகளின் பின் அந்தச் சேலை மறுபடியும் என் முன் காட்சி யளிக்கக் காரணம்...? அந்தச் சேலையைத் தொடர்ந்து என் சிந்தனை சுழலத் தொடங்கியது.

அந்தச் சேலை......! ஆம் அதுதான் என் வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தின் முடிவு என் அன்பு மனைவி கமலிக்காக அதை நான் ஒன்றும் பணம் கொடுத்து வாங்க வில்லை. அப்போது கமலியை எனக்குத் தெரியாது. அவள் எங்கிருந்தாளோ...? ரஞ்சிதான் எனக்கு மனைவியாவாள் என்று நான் மட்டுமல்ல என்னைச் சார்ந்தவர்களும் எதிர்பார்த்த காலம் அது. அவளை நான் மனதாரக்காதலித்தேன். என் தந்தை என் காதலுக்குத் தடையாக இருந்தார். அவரை நான் லட்சியம் செய்ய வில்லை. என்னைப் பொறுத்த வரையில் இந்த உலகமே ரஞ்சியின் காலடியிற் கிடப்பதாக ஒரு அசட்டு எண்ணம் என்னைப் பிடித்து ஆட்டியது.

கலாசாலையிற் படிக்கும் வரை நாங்கள் அடிக்கடி சந்திப்போம். ஆனால் கலாசாலையை விட்டுப் பிரிந்ததும் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைப்பது மிகவும் அருமையாக இருந்தது. காரணம் இருவரும் பல மைல்களால் பிரிக்கப்பட்டிருந்தோம். கடிதங்களே எங்கள் உறவை வளர்த்தன. ஆனால் காலப்போக்கில் அவளுடைய கடிதங்கள் கிடைப்பதில் பெரிய இடைவெளி தோற்றியது நாளொன்றுக்கு இரண்டு மூன்று என்றுஎழுதியவள் நாட்செல்லச்செல்ல வாரம் ஒன்று மாதம் ஒன்று என்று இப்படிப் படிப்படியாகக் குறைத்துக் கடைசியில் வசதிப் படும்போது எழுதும் பழக்கத்தை அமைத்துக் கொண்டாள். ரஞ்சியின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லையாயினும் அவளை மறக்க என்னால் முடியவில்லை!

## தீபாவளிச் சிறுகதை

அவன் எழுதாதபோதும் நான் அவள் பதிலை எதிர்பார்க்காமலே எழுதிக் கொண்டிருந்தேன். வசதிப் படும்போது வார இறுதியில் சில நாட்கள் சென்று அவளைப் பார்ப்பதுமுண்டு. ஆனால் அவளுடைய வரவேற்பில் முதல் இருந்த அன்பும், ஆசையும், ஆர்வமும் சிறுகச்சிறுக குறைந்து வருவதை என்னால் உணர முடிந்தது.

## "ஒப்பற்ற சிறுகதை"

தமிழ் நாடு கும்பகோணத்திலிருந்து எஸ். ஆர். ராஜன் என்ற நேயர் சுதந்திரனில் வெளியான ஒரு கதை பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:—

"சுதந்திரன் 4—9—60 இதழில் வெளிவந்துள்ள "திருமணப் பரிசு" உணர்ச்சியைத் தூண்டும் ஒரு ஒப்பற்ற சிறுகதை என்றுல் அது மிகையாகாது.

குடும்பத்திலுள்ள பாசரகசியத்தை குழந்தையின் மூலமாக வெளிப்படவைத்து இருப்பது ஆசிரியையின் எழுத்து திறமையை நன்கு வெளிப்படுத்துகிறது. 'உங்கள் மேல் உள்ள அன்பும், இரத்த பாசமும் அவளை உங்களுக்காக விட்டுக்கொடுக்கச் செய்தன' என்று தம்பி அண்ணனிடம் கூறும்போது உண்மையிலேயே நம் கண்களில் கண்ணீர் வரத்தான் செய்கிறது.

"இந்தச் சிறுகதையை எழுதிய பா. பாலேஸ்வரிக்கு எனது பாராட்டுதல்கள். இவர் இதைப் போன்ற கதைகளை தொடர்ந்து சுதந்திரனில் எழுதி வருவார் என்றே நினைக்கிறேன்.

எஸ். ஆர். ராஜன்.

20, ரகோஜி பண்டிதர் தெரு,
மேலக்காவேரி,
கும்பகோணம், தமிழ்நாடு.

அவளுக்கு வேறு புதிய நட்புறவுகள் உண்டென்று கேள்விப்பட்டேன், ஆனால் அதை நான் நம்பவில்லை, அவளிடம் நேரிலேயே ஒரு நாள் கேட்டும் விட்டேன். 'மனோகர்! உங்களை நான் அன்றுபோல் இன்றும் நேசிக்கிறேன். நீங்கள் வீணாக என் [illegible] கள் கூறுவது உங்களுக்கு அத்தனை நம்பிக்கையாக இருந்தால் இனி நான் என்ன செய்ய முடியும்...?" அவள் சாகஸமாகப் பேசி என்னை மடக்கி விட்டாள்.

பிறகு, ஒரு நீண்ட இடைவெளியின் பின்னர் அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என்னை ஆட்டி வைத்தது. தீபாவளிக்கு மூன்று நாட்கள் இருக்கும் போதே கடையெல்லாந் திரிந்து அவளுக்கு மிகவும் பிடித்தமான மணிப்புரி சாறி ஒன்று மேக வர்ண நீலத்தில் வாங்கி எடுத்துக்கொண்டு கொழும்பில் இருந்து மாத்தளைக்குப் பிரயாணமானேன்.

வழியில் கண்ட பசிய சோலைகளும் மலைத்தொடர்களும் உடலுக்கு இதமாக இருந்த குளிர்ந்த சுவாத்தியமும் அவள் நினைவை அதிகப்படுத்தின. என்னைக் கண்டதும் அவள் அப்படியே மெய் மறந்து விடுவாள். இந்த ஆறுமாத இடைவெளியில் பேசாதவையெல்லாம் அந்த ஒரு இரவில் பேசித் தீர்த்து விடுவாள் என்றெல்லாம் பல கற்பனைகளில் இறங்கி மனம் உவகையால் பூரித்தது.

இந்த இன்ப நினைவுகளின் மத்தியில் எப்படியோ பஸ் வண்டி மாத்தளையை அடைந்தது. நான் என்னுடைய சிறிய தோல் கைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஒரு வாடகை மோட்டார் அமர்த்தி அவளுடைய வீட்டை அடைந்தேன் அப்போது மணி சரியாக ஏழு அடித்து முப்பது நிமிடமாகியிருந்தது.

வெளியில் கார்ச் சத்தம் கேட்டதும் அவளுடைய தம்பி மோகன் யார் என்று பார்ப்பதற்காக வந்தவன் என்னைக் கண்டதும் "மனோகர் அண்ணு வந்து விட்டார்! சபாஷ்! இம்முறை தீபாவளி கொண்டாட்டந்தான்! அக்கோவ்!" என்று கத்திக் கொண்டே உள்ளே ஓடினுன்.

நன்றாகத்தான் வரவேற்ருர்கள். ஆனல் ரஞ்சியின் முகத்தில் மட்டும் ஒரு வித சலனமுமில்லை. ஏதாவது பேசுவாள் என்று எதிர்பார்த்தேன். கடைசியில் ஏமாற்றந்தான். நானகவே பேச்சை ஆரம்பித்தேன் "என்ன ரஞ்சி கோபமா? சொல்லாமல் வந்து விட்டேன் என்று கோபமாக்கும்...? நீ என்னை இன்று எதிர்பார்த்திருக்கமாட்டாய் இல்லையா...?" அவளைக் கொஞ்சலாகக் கேட்டேன்.

"சில வேளை வரலாம் என்று எண்ணியிருந்தேன்." என்ருள் சுருக்கமாக, அவ்வளவுதான் அவள் பேசியது. அதற்குப்பின் விடியும்வரை அவளை நான் சந்திக்கவேயில்லை. ஆம் அவள் என் கண்ணிற் படாமல் ஒளித்தே விட்டாள். பாவம்! அவளுடைய தாய் விழுந்து விழுந்து என்னை உபசரித்தாள். அன்றைய இரவு நித்திரையில்லாமலே கழிந்தது. எப்படியோ அன்றைய பொழுதும் விடிந்தது.

ஒன்றுமே நடக்காதது போல் விடிந்ததும் விடியாததுமாக என்னிடம் பேச வந்தாள் ரஞ்சி. அன்று இரவு முழுதும் நான் பட்ட அத்தனை ஆத்திரமாக வந்தது. எப்படித்தான் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேனே தெரியாது "என்ன ரஞ்சி இரவு முழுவதும் உன்னைக்காணக் கிடைக்க வில்லையே?" என்று பேச்சை நானே ஆரம்பித்து வைத்தேன்.

"ஆமாம்! தலைவிடி பொறுக்க முடியவில்லை. அப்படியே படுத்த நான் என்னை அறியாமலே தூங்கி விட்டேன்" என்ருள் தட்டுத் தடுமாறி.

"ஓ! என்னைக் கண்டதும் தலையிடி கூட வந்து விட்டதாக்கும் ..........."

"என்ன மனோகர்! எப்போதும் உங்களுக்குச் சந்தேகந்தான். இரவுதான் பேச முடியவில்லை. இப்போதாவது பேசலாம் என்ருல் அதற்குள் நீங்கள் சண்டை போட ஆரம்பித்து விட்டீர்கள்..." குழைந்து குழைந்து பேசினுள் அவள்.

என் ஆத்திரம் மட்டும் ஏனே தீருவதாக இல்லை. அன்று கட்டாயம் அவளோடு சண்டை பிடித்தே தீருவது என்று கங்கணங் கட்டிக் கொண்டேன்.

"ஏன் ரஞ்சி! பழகப் பழக பாலும் புளிக்கும் என்பார்கள்! நானும் ஒரு வேளை புளித்து விட்டேனே என்று சந்தேகமாக இருக்கிறது எனக்கு. நீ கூட ரொம்பத் தூரம் மாறி விட்டாய் ரஞ்சி!" மனதில் உள்ளதை ஒளிவு மறைவின்றிக் கூறி விட்டேன்.

நான் உண்மையைச் சொன்னதும் கோபம் பொத்துக்கொண்டு வந்தது அவளுக்கு.


"நான்தான் ஆரம்பத்திலேயே என்னைப் பற்றி உங்களிடம் படித்துப் படித்துக் கூறியிருக்கிறேனே...! என்னை நம்பாதீர்கள் நான் அடிக்கடி மாறி விடுவேன். இது என் இயற்கைச் சுபாவம் என்றெல்லாம் கூறவில்லையா...?" என்னைத் திருப்பிக் கேட்டாள் அவள். எத்தனை கொடியவள்! சாகஸக்காரி என்றெல்லாம் என் மனம் உள்ளுக்குள்ளேயே பொரிந்து தள்ளியது. "என்ன ரஞ்சி என்னையே ஏமாற்றத் துணிந்துவிட்டாய், நீ கெட்டவள், சாகஸக்காரி! மயக்குக்காரி என்றெல்லாம் என் நண்பர்கள் என்னிடம் எடுத்துக் கூறிய போது நான் அவர்கள் பேச்சை உதாசீனம் செய்ததால் வந்த நிலை இது. பாசம் பந்தம் எல்லாமே அற்றிருந்த எனக்கு அந்த உணர்ச்சிகளை எல்லாம் ஊட்டியவள் நீதான். எதற்காக நீ என்னேடு பழகினுய்...? நான் உன்னேடு நெருங்கிப் பழகுவதற்கு ஏன் அனுமதித்தாய்...? இதற்கெல்லாம் சிந்தித்துப் பதில் சொல் ரஞ்சி!" நான் அவளுடைய தளிர்க் கரத்தை இறுகப் பற்றினேன்.

தீயை மிதித்தவள் போல் வெடுக்கென்று தன் கரங்களைப் பறித்துக் கொண்ட அவள் "மனோகர்! தயவு செய்து என் உத்தரவின்றி இனி நீங்கள் என்னைத் தீண்டவே படாது!" காயம் பட்ட சிங்கம் போலக் கர்ச்சித்தாள்.

எனக்குப் பகீரென்றது. யாருக்காக நான் என் உடல் பொருள் ஆவி அத்தனையையும் அர்ப்பணிக்க ஆயத்தமாக இருந்தேனே அவள் இன்று எனக்கு எட்டாக் கனியாகி விட்டாள். இனி எதற்காக நான் அந்த வீட்டில் இன்னுந் தங்க வேண்டும், என்ற சபலபுத்தி என்னைப் பிடித்து ஆட்டியது.

"ரஞ்சி! இப்போது சுருக்கமாகக் கூறினல், நீ என்னை விரும்பவில்லை என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. நான் இப்போது உனக்கு வேண்டாதவனுகி விட்டேன்

(12-ம் பக்கம் பார்க்க)

தீரமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்

விங்கெட்

தீர்மான இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மேஸர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதியான தண்ணீர் பம்ப்கள், அநேககாலம் சிறந்த சேவையைத் தருகின்றன

உபரிப்பாகங்கள் ... [illegible]

உபவிநியோகஸ்தர்கள்
ராஜதுதன் அன் கம்பெனி,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம்.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்

தி கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி லிமிடெட்

(ஐக்கிய பிரித்தானியாவில் ... [illegible])

தபாற்பெட்டி 88, கொழும்பு
... [illegible]
போன்: 7068.

உயர்ந்த சேவை

1½" மோடல்- மணித்தியாலம் 1500 - 6000 கலன் இறைக்கிறது.

2" மோடல்-மணித்தியாலம் 1680 - 11000 கலன் இறைக்கிறது

3" மோடல்-மணித்தியாலம் 4300 - 16800 கலன் இறைக்கிறது

டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிப்டும தேவை

ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி

ஆகக் கூடுதல் சக்ஷன் லிப்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்
எம். பூபாலசிங்கம்,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம். போன்: 327


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீர்கொழும்பில் மீன்பிடித் தொழில்:

# மீன்பிடிகாரருக்கு இன்சூரன்ஸ் திட்டமும் தொழிற் பயிற்சியும் அவசியம்

## அவர்களுக்கெனத் தனிச் சங்கம் வேண்டும்

### விற்பனை வசதி செய்து கொடுக்கப்பட்டால்தான் தொழிலாளர்கள் பயன்பெற முடியும்

(2)

நீர்கொழும்புப் பகுதி மீன்பிடிகாரருக்குக் கடற்றொழில் இலாகா பெரும் உதவி புரிந்து வருகின்றது. மீன்பிடிக்கும் வள்ளங்கள் அமைக்கப் பணம் கடன் கொடுத்து உதவுகின்றது. இயந்திரப் படகுகள் அமைக்கப்பணம் கடன் தந்து உதவுகின்றது. கஷ்ட நேரங்களிலும், ஆபத்தான வேலைகளிலும் நஷ்டஈடுகள் வழங்குகின்றது. ஆபத்துக்காலங்களில் இரட்சணியப் படகுகள், கப்பல்கள், ஆகாய விமானங்கள் என்பன தந்தும் உதவுகின்றது. இவ்வுதவிகளோடு மீன்பிடி இலாகா, மீன்பிடிகாரர் பிடிக்கும் மீன்களைச் சரியான பெறுமதிக்கு விற்க ஒருவழி செய்வார்களாயின் அது மீன்பிடிகாரருக்குச் செய்யும் மகத்தான சேவையாகும் அவர்கள் பிடிக்கும் மீன்களை தக்க விலைக்கு விற்க இலாகா ஒழுங்கு செய்யுமாயின் மீன்பிடிகாரரின் கஷ்டங்கள் பல தீர்ந்து போகக் கூடியதாக இருக்கும். மீன்களை உடனுக்குடன் நகர்ப்புறங்கட்கும், கொழும்பு போன்ற பிரதான அயல் பட்டணங்கட்கும் கொண்டு போகக்கூடிய போக்கு வரவு வசதியை உண்டாக்க வேண்டும். மீன்கள் பதம் கெடாதவாறு பாதுகாக்கக் குளிர்ப்பெட்டிகள் அமைக்க வேண்டும். அப்போது அகால நேரங்களில் கரைக்கு வரும் மீன்பிடி காரரின் மீன்களுக்கும் தக்க பெறுமதியைபபெற இடமுண்டு. இவைகள் மட்டுமல்ல; நகர்ப்புற மக்களுக்கு நல்ல சத்துள்ள—ருசியுள்ள புது மீன்களை மலிவான விலைக்கு நம்பிக்கையாகப் பெற்று ஆரோக்கியம் பெறவும் வழியுண்டு.

#### வேலை இலகு செலவு அதிகம்


நீர்கொழும்பு மீன்பிடிகாரரிடையே மீன்பிடி இலாகா வழங்கிய இயந்திரப் படகுகள் பெரும் ஆதரவைப் பெற்றன. இயந்திரப்படகுகள் மூலம் பெருவாரியான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. சாதாரண தோணியில் செல்வதைவிட எவ்வளவோ இலகுவாகவும் சௌகரியமாகவும் மட்டுமன்றி, பாதுகாப்பாகவும் கடலில் அபாயகரமான இடங்கட்கெல்லாம் சென்று மீன் பிடிக்கக் கூடியதாக இருக்கின்றது இயந்திரப் படகுக்காக மீன்பிடி இலாகா 17,500 ரூபாவரை கடன் கொடுக்கின்றது இயந்திரப் படகில் சென்று மீன் பிடிப்பது இலகு. ஆனல் செலவு அதிகம்.

#### கூடிய பலனைப் பெற வழி

இயந்திரப் படகை இயக்க ஒரு நாளுக்குத் தேவையான டீசல் எண்ணெய்க்கும், தூண்டிலில் பொருத்த அவசியமான இரை மீன்களுக்குமாக முப்பது அல்லது நாற்பது ரூபாவரை செலவேற்படுகிறது. இச் செலவை நாலைந்து மீன்பிடிகாரர் ஒன்ருகக் கூடி கூட்டுறவு முறையில் பங்கிட்டுக்கொள்வதாக இருந்தால் மிக நன்ருக இருக்கும். இயந்திரப்படகு சம்பந்தமான எல்லாச் செலவுகளையும், அதனல் வரும் இலாபத்தையும் பங்கிட்டு கொண்டு கூட்டுறவு முறையில் இத் தொழிலை நடத்துவார்களாயின் இயந்திரப் படகுகளின் மூலம்

என். டி. பீரிஸ்

கூடிய பலனைப் பெறுவார்கள். இயந்திரப் படகுகளில் பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாப்பாக வைக்க ஒரு குளிர்ப் பெட்டி இருக்குமாயின் மீன்கள் இயந்திரச் சூட்டினல் வெம்பிப் போவதைத் தடுக்கலாம். இன்னும் இயந்திரப் படகின் புகை மீன் பிடிகாரரைத் தாக்காதவாறு புகைக்குழாயை அமைத்தால் இயந்திரப்



அலை கடலில் சென்று மீன் பிடிக்க ஆயத்தமாகிருர்கள். (வலம்) பிடித்த மீன்கள் கரைக்குக் கொண்டுவந்து வெளியே எடுக்கப்பட்டதும் ஒரு வியாபாரியின் சாக்குக்குள் போய் மறைகின்றன.

படகுகளால் பெரும் நன்மை உண்டாகும் என மீன்பிடி காரர் கருதுகின்ருர்கள்.

#### இன்சூரன்ஸ் திட்டம் வேண்டும்

நீர்கொழும்புப் பகுதியில் பிடிக்கப்படும் மீன் நீர்கொழும்புக்கு மட்டுமல்ல, கொழும்பு போன்ற அயல் நகரங்கட்கும் போதியதாகும். இவ்வளவு பெருந்தொகையான மீன்களைப் பிடிக்கும் மீன் பிடிகாரரின் வாழ்க்கை நிலையை உயர்த்த அவர்களிடையே கூட்டுறவுச் சங்கத்தை உண்டாக்க வேண்டும். மீன் பிடிப்பதற்காகச் செய்யும் முயற்சிகளைவிட பிடிக்கப்படும் மீன்களை நல்ல விலைக்கு விற்க முயற்சி செய்ய வேண்டும். கடலுக்குச் செல்லும் படகுகள் பாதுகாப்பாகவும், ஆபத்துக்காலங்களில் உதவக்கூடிய நீர் மிதவைகள் பொருத்தப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படும் ஆபத்துக்களால் தொழிலாளி உயிரிழக்க நேரிட்டால் அல்லது படகுகள் உடைந்து சேதப்பட்டால் பணம் வழங்குவதற்காக இன்சூரன்ஸ், பாதுகாப்புறுதித் திட்டம் ஒன்று வகுக்க வேண்டும். பிரஸ்தாப நிதிக்காக அன்றாட வருமானத்தில் ஒரு சிறு [illegible] ஒதுக்கிப் [illegible] மீன் பிடிகாரரின் நலனுக்காகச் செலவிடப்பட வேண்டும்.

#### கத்தோலிக்க மடத்தின் சேவை

நீர்கொழும்பு மீன்பிடிகாரரின் நலனுக்காக மீன்பிடி இலாகாமட்டுமல்ல-பத்திலொன்று காணிக்கையாகப் பெறும் கத்தோலிக்க கோயில்களும் பெருந்தொண்டாற்றுகின்றன. பத்திலொன்று வீதமாக அறவிடப்படும் பணம் வருடத்துக்கு அறுபதினுயிரம் ரூபாவுக்கு அதிகமாகும். கோயிலுக்கெனச் சேர்க்கப்படும் பணத்தின் பெரும் பகுதி மீன்பிடிகாரரின் நலனிலேயே செலவிடப்படுகின்றது. வருடத்தில் பல நாட்கள் சூறவளிக்காற்று, கடற்கொந்தளிப்பு,போன்ற காரணங்களால் மக்களும் மீன் பிடிக்கப் போகமுடிவதில்லை. இக் காலங்களில் தலைக்கு ஐந்து ரூபாவீதம் பங்கிடப்படும். மீன்பிடித் தொழிலாளி இறந்தால் அவருடைய மரணச் சடங்குகட்காக எண்பது ரூபாவும் அவர் மனைவி இறந்தால் நாற்பது ரூபாவும், பிள்ளைகள் இறந்தால் அவரவரின் வயதுக்குத் தக்கதாகவும் பணம் வழங்கப்படுகின்றது. மீன்பிடிகாரரின் இளைப்பாற்றுச் சம்பளமாக மாதாந்தம் 4 ரூபாவீதம் கொடுப்பதுண்டு. இவை தவிர மீன்பிடிகார மக்களின் கஷ்ட நஷ்ட நேரங்களில் கூட கோயிற்பணம் தருமமாகக் கொடுக்கப்படுகின்றது. இம்முறை மெச்சத்தக்கது என்ருலும் இதே கொள்கைகளை அடிப்படையாக வைத்து நன்கு விஸ்தரிக்கப்பட்ட இன்சூரன்ஸ் காப்புறுதித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டால் நீர்கொழும்புமீன்பிடிகாரர் மிக்க பயனைப் பெறுவார்கள்.

#### தொழிற் பயிற்சியும் வேண்டும்

இன்சூரன்ஸ் பாதுகாப்புறுதித் திட்டம் மட்டுமல்ல, இவர்களிடையே தொழிற் பயிற்சியையும், நவீன புது முறைகளையும் புகுத்தக்கூடிய மீன்பிடிகாரர் சங்கம் ஒன்று உருவாக வேண்டும். குமாஸ்தாக்களிடையே லிகிதர் யூனியன் இருப்பது போல மீன்பிடிகாரரிடையே கண்டிப்பாக ஒரு சங்கம் இருக்க வேண்டும். நாற்பது ஐம்பது வருடங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட பழம்பெரும் மீன்பிடிகாரர்களுக்கே அரசாங்கமோ மீன்பிடி இலாகாவோ தக்க முறையில் உதவிசெய்ய இருப்பதாக இன்னும் தெரியவில்லை மீன்பிடி இலாகா செய்துவரும் அரிய நன்மைகளைக் கூட அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். 'நமக்கென்ன

(13-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினுல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
த. பெட்டி: 649,
கொழும்பு.

# பொ. கந்தையா கொள்கையை விற்காத சேவையாளர்

## தமிழரசுத் தந்தை பாராட்டு

"காலஞ் சென்ற திரு. பொ. கந்தையா அற்ப சலுகைகளுக்காகத் தமது கட்சியையோ, கொள்கையையோ விற்காத சேவையாளர். அத்தோடு சிறந்த சிந்தனையாளரும் கூட" என்று தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பாராட்டினுர்.

முன்னுள் பருத்தித்துறைப் பிரதிநிதி திரு பொ. கந்தையாவின் நினைவு நாள் கூட்டத்தில் பேசுகையிலேயே தமிழரசுத் தந்தை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டம் திரு எஸ். ஜெயசிங்கம் தலைமையில் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது.

தமிழரசுத் தந்தை தொடர்ந்து பேசுகையில் திரு கந்தையா தமது கட்சிக்கு உண்மையாகவே முழு நேர ஊழியம் செய்தார் என்றும், தமிழினத்தின் சாபக்கேடான தீண்டாமையை ஒழித்து தாழ்த்தப்பட்டோருக்கு நல்வாழ்வு அளிக்க உறுதி பூண்டு தொண்டாற்றிவந்தார் என்றும், அவரது மரணம் தமிழ் பேசும் மக்களுக்கு பெரும் நஷ்டமாகும் என்றும் குறிப்பிட்டார்.

கொம்யுனிஸ்டு கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா திரு கந்தையாவின் படத்துக்கு மலர் மாலை சூட்டிப் பேசுகையில் இந்த நாட்டில் ஒரு சோஷலிஸ அரசாங்கம் உருவாக வேண்டும் என்ற நோக்கத்தோடு உழைத்து உடல் நலத்தை இழந்து மரணத்தைத் தழுவிக் கொண்டவர் கந்தையா என்று கூறிஞர்.

திரு கந்தையா தலைசிறந்த பொருளாதார நிபுணரும் அரசியல் மேதையுமாவார் என்று புகழ்ந்தார் செனட்டர் நடேசன.

செனட்டர் சந்திரா குணசேகரா, திரு வி. பொன்னம்பலம், திரு பி நாகலிங்கம் டாக்டர் பி. பட்ரிஸ், திரு வி. தம்பிப்பிள்ளை [illegible] காலஞ்சென்ற கந்தையாவைப் பாராட்டிப் பேசினர்கள்.

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே



★ மாதத் தவணைக் கட்டணங்களில பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
சோல் ஏஜண்டுகள்:
ரெய்மு சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன் : 4243, 5060.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயபுரி வீரன்

ஒரு வாளை நம்பிச் சினிமாத்துறையில காலடி வைத்து நிற்கும் பழைய நடிகர்களுக்கு எல்லாம் புது நடிகர் சி. எல். ஆனந்த் சவால் விடுகிறார் "விஜயபுரி வீரன்" என்ற படத்தில்.

ஒரு சாதாரண விகாரம் என்று கருதக் கூடியதானாலும் வீரருக்குரிய உடையில் அழகாகத் தோன்றி மின்வெட்டு வேகத்தில் கையைச் சுழற்றி வாளை விளையாட வைக்கும் ஆனந்த் இந்தப் படத்தின் மூலமே தமக்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

படத்தில் அவர் காட்டும் சுறுசுறுப்புக்கும் செந்தமிழ்ப் [illegible] பாராட்டு; வேறு எதற்குமல்ல.

அழகாபுரி மன்னனின் மகன் ஆனந்தன் தனது தந்தையின் கட்டளைப்படி அழகாபுரி மன்னனையும் (சிறு பிள்ளை) இளவரசி காஞ்சனா தேவியையும் அந் நாட்டு ராஜ பிரதிநிதியான சர்வாதிகாரி நஞ்சப்பனிடமிருந்தும் அவன் காதலி மாயாதேவியிடமிருந்தும் காப்பாற்றுகிறான். இளவரசியைக் காதலித்து இறுதியில் கல்யாணமும் செய்து கொள்கிறான். இது கதை—ஏ சி. திருலோகசந்தர் எம். ஏ. யுடையது.

**சினிமா விமர்சனம்**

ராஜப்பாவின் சிறு சிறு வசனங்கள் கேட்க நன்றாக இருக்கின்றன. குறிப்பாக அழகாபுரி மன்னராக நடிக்கும் மாஸ்டர் கோபால் பேசும் போது கலை சொட்டுகிறது. கோபாலின் நடிப்பில் 'பெரியவர்கள் பாணி' பளிச்சிடுகிறது. அசோகன், ராமராவ் ஆகியோரின் நடிப்பு பரவாயில்லை.

மாயாதேவியாக வரும் காமினி இந்தப்படத்தில் சக்கை போடு போடுகிறார். வில்லி பாத்திரத்தில அவர் துல்லியமாகப் பிரகாசிக்கிறார். ஹேமலதாவின் நடிப்பு பரவாயில்லை.

பாடல்கள் இரண்டு மூன்று கேட்க மிகவும் இனிமையாக இருக்கின்றன. ரொக் அன் ரோல் பாணியில் ஆட்டமும் பாட்டும் பெரிதும் அமைந்திருப்பது பலருக்குப் பிடிக்கலாம்.

சிட்டாடலில் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. தயாரிப்பு ஜோசப் தாமஸ், டைரக்ஷன் ஜோசப் தளியத் ஜூனியர். பார்த்து ரசிக்கக்கூடிய படம் குறிப்பாக ஸ்டண்ட் பிரியர்கள் இதை நம்பிப் பார்க்கலாம். சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் தீபாவளித் திரை விருந்தாக அளிக்கிறார்கள்.



ஆனந்த் உக்கிரமாகப் போர் புரியும் கட்டத்தில் அவரை முதுகில் குத்திக் கொல்ல முயற்சிக்கிறார் ஹேமலதா.

# தீபாவளிப் பரிசு

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படித்தானே...?" வார்த்தைகள் ஆத்திரத்தில் திக்குமுக்காடின...

"அப்படியே வைத்துக் கொண்டிருங்களேன்...!" சிறிதும் பதட்டமின்றி மொழிந்தாள் அவள்.

"அடி பாதகி!" என் வாய் என்னையும் அறியாமல் குழறியது. அவ்வளவுதான் நான் பேசியது. அடுத்த நிமிடம் என்கோல் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்த வழியே திரும்பினேன்.

●

எனக்கு முதலில் வேப்பங்காயாக இருந்த அப்பா கரும்பாக இனித்தார். என் விழிகள், இல்லை அகக்கண்கள் தாமாகவே திறந்து கொண்டன. ஒரு வருடம் நடைப்பிணமாகத் திரிந்த நான் ஈற்றில் அப்பாவின் விருப்பப்படி கமலியை மணந்து கொண்டேன். என் தலைதீபாவளிக்கு சமயத்தில் நான் எந்தப் புடவையை ரஞ்சிக்காகக் கால் கடுக்கக் கடையெல்லாம் திரிந்து வாங்கினேனோ அதையே அன்பளிப்பாகக் கொடுத்தேன். ஆனால் கமலி அதை அணிய எடுத்தபோது என் மனதில் ஏதோ சபலந் தட்டியது. அவள் அதை அணிய அனுமதிக்கவில்லை.

அன்று மட்டுமல்ல என்றுமே அவள் அதை அணிய நான் விடவில்லை. அந்தப் புடவை என் கண்ணிற் படக்கூடாதென்று கட்டளை வேறு இட்டிருந்தேன். ஆனால் இன்று அவளுக்கு என்ன வந்து விட்டது...?

"என்ன இப்படிப் பார்க்கிறீங்க? ஓ! இந்தச் சேலையை இன்னும் மறக்கவில்லையாக்கும்" என் மனைவியின் கிண்டல் என் சிந்தனைக்கு முற்றுப்புள்ளியிட்டது.

என்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு "அப்படியொன்றுமில்லை. இந்தச் சேலை இன்று எதற்காக வெளிக்கிளம்பியிருக்கிறது? என்று யோசித்தேன்" என்று கூறி அவளைக் கேள்விக்குறியுடன் பார்த்தேன்.

"பொழுது விடிந்தால் தீபாவளி! அவர் இன்னும் சேலை வாங்கவில்லை. இதையாவது உடுப்போம் என்று எடுத்துவிட்டாளோ என்று யோசித்தீர்களா? நீங்கள் இனி இந்தச் சேலைக்கு பயப்படத் தேவையில்லை. இன்றுடன் இது இந்த வீட்டை விட்டே போகப் போகிறதாக்கும். உங்களுக்குத் திருப்திதானே.........?' கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள் கமலி.

"ஏன் தூக்கி எறிந்துவிடப் போகிறாயா?" விரக்தியுடன் அவளைக் கேட்டேன்.

"ம்! இத்தனை விலை கொடுத்து வாங்கியதை எறிய எனக்கென்ன பைத்தியமா? அடுத்தாத்திலே என் சிநேகிதி ஒருவள் புதிதாகக் குடிவந்திருக்கிறாள். கணவன் பொல்லாத குடிகாரனாம். அதனால் அவனை நிரந்தரமாக விட்டுப் பிரிந்து இங்கு வந்துவிட்டாள். உடுப்பதற்கு ஒரு நல்ல சேலை கூடக் கிடையாதாம். பாவம்! அடிப்பெட்டியில் சும்மா கிடக்கும் சேலை அவள் உடலை அலங்கரிக்கட்டுமே என்றுதான் தீபாவளிப் பரிசாக அளிக்க எடுத்து வந்தேன். இதோ இதை அவளிடம் கொடுத்துவிட்டு அரை நொடியில் வந்துவிடுகிறேன்" என் பதிலுக்குக் காத்திராமல் 'விர்' என நடந்தாள் அவள்.

'என் வாழ்வைக் கெடுத்த இந்தச் சேலை பாவம் ஒரு ஏழைப் பெண்ணின் வாழ்வுக்கும் உலை வைக்கப்போகிறதாக்கும்! அதிர்ஷ்டம் கெட்ட சேலை. நமக்குக் கூடாதது மற்றவர்களுக்கு நல்லதா...? வேண்டாம்! என் மனைவியைத் தடுத்து விட வேண்டும். அதை இன்றே எரித்துச் சாம்பராக்கிவிடுகிறேன......' வேகமாக என் மனைவி சென்ற திசையை நோக்கி விரைந்தேன்.

அதற்குள் அவள் அடுத்த வீட்டுக்குள் நுழைந்துவிட்டாள். குறுக்கு வேலியால் எட்டிப் பார்த்தேன்.

சேலை என் மனைவியின் கையிலிருந்து ஒரு ஜோடி வளைக்கரங்களுக்குப் போய்க் கொண்டிருந்தது.

"கமலி! இத்தனை விலையுயர்ந்த சேலையா எனக்கு...? மணம் முடித்து இத்தனை நாளைக்கும் என் கணவன் கூட இப்படியொரு சேலை வாங்கித் தரவில்லை. உன் பகை தங்கம்! உனக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டவள்!"

என் கண்களை நன்றாகக் கூர்மையாக்கிப் பார்த்தேன்...என் தலை சுழன்றது...அவள்! ஆம்! அவளேதான். யாருக்காக இந்தச் சேலை வாங்கப்பட்டதோ அதே ரஞ்சி! ஆனால் பருவப் பூரிப்பின் எழில் எல்லாம் குறைந்து நடைப்பிணமாகக் காட்சி தந்தாள்.

[illegible] கொடுக்காதே கமலி என்று கத்த நா துடித்தது.

ஆனால் மனச்சாட்சி, வேண்டாம் அவளுக்காக வாங்கிய தீபாவளிப் புடவை அவளே அணிந்துகொள்ளட்டும் என்று தடுத்து நிறுத்தியது.


# இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயின்ட் ரோமன், 12 பொயின்ட் போல்ட், 10 பொயின்ட் ரோமன், 10 பொயின்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை

8, 10, 12, 14, 16, 18 பொயின்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம் அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,

கொழும்பு—12.


# பறந்தோடி விட்ட பறவை....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறும் சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது.

அமைச்சரவை விவாதங்களும் முடிவுகளும் இரகசியமாகவே நடக்கின்றன. ஒரு குறிப்பிட்ட முடிவில் ஏகமனதான அபிப்பிராயம் அமைச்சரவையில் இல்லாதிருக்கலாம். ஆனால் யார் யார் அந்த முடிவிற்குப் பாதகமான அபிப்பிராயம் கொண்டவர்கள், சாதகமான அபிப்பிராயம் கொண்டவர்கள் என்பது வெளிவராது. வெளிவர முடியாது. எனவே அமைச்சரவை முடிவுகள் எல்லாம் ஏகமனதானவை என்பதே சம்பிரதாயம். குறிப்பிட்ட ஒரு தீர்மானத்தில ஒரு அமைச்சர் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தால் தனக்கும் அத்தீர்மானத்திற்குத் தொடர்பிருக்க வில்லை என்று அவர் ஒரு போதும் கூற முடியாது இதுதான் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு என்றழைக்கப்படும் கொள்கை. தீர்மானத்தைப் பற்றிய அவர் அபிப்பிராயம் இலேசானது என்றால் பெரும்பான்மையோருடன் ஒத்து நடக்க வேண்டியது தான். காத்திரமான அபிப்பிராய பேதமிருந்தால் அமைச்சரவையிலிருந்து ராஜினாமாச் செய்வதே ஒரேயொரு வழி.

பிரஜா உரிமை, வாக்குரிமை பற்றிய விஷயங்களில திரு சுந்தரலிங்கம் இராஜினாமாச் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு பிரேரணையில் ஒரு பிரதிநிதி ஒரு முறையே பேசலாம் என்பதற்கும் இதையும் இது போன்ற ஏனைய பாராளுமன்ற உரிமைகளையும் பாதுகாப்பது ஒவ்வொரு பிரதிநிதியினதும் கடமையும் உரிமையும் என்பதும் பின்வரும் சந்தர்ப்பத்திலிருந்து புலனாகும்.

(திரு எஸ். பி. ஜெயசேன எழுந்து, பேச ஆரம்பிக்கிறார். அந்நேரப் சபாநாயகருக்குப் பதிலாக உப-சபாநாயகர் தலைமைவகிக்கிறார்)

திரு லக்ஷ்மன் ராஜபக்ஸ உபசபாநாயகர் அவர்களே! ஒழுங்குப் பிரச்சினை ஒன்றுபற்றிப் பேசுகிறேன். நாங்கள் விவாதிக்கும் இப் பிரேரணையில கௌரவ அங்கத்தவர் (ஜெயசேன) இதற்கு முன் பேசவில்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

யாரோ ஒரு பிரதிநிதியின் குரல்: அது வேறொரு கௌரவ பிரதிநிதிதான் முன்பு பேசியவர்.

உபசபாநாயகர்: கௌரவ அங்கத்தவர் (ஜெயசேன) மேலே தொடர்ந்து பேசலாம்.

# ஆச்சிக்குச் சொல்லாதே

நாய் நகைச்சுவைநாடக மன்றத்தினர் தீபாவளிக் கலை விருந்தாக "ஆச்சிக்குச் சொல்லாதே" என்ற நகைச்சுவை நாடகத்தை அளிக்கிறார்கள். தீபாவளியன்று (19-10-60) மாலை 6-00 மணிக்கு இந் நாடகம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தப்படவிருக்கிறது. பிரவேசக் கட்டணம் இல்லை.

# தமிழ்ப்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறார். இவர் சில பத்திரிகை ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்துக்கு ஆங்கிலத்தில் முகவரியிட்டு அனுப்பிய சில கடித உறைகளையும், சந்தா கட்டிப் பத்திரிகை பெறுபவர்களுக்கு அனுப்பப்படும் பத்திரிகைகளுக்கு ஆங்கிலத்தில் இடப்பட்ட முகவரி உறைகளையும் அனுப்பியிருக்கிறார் தமிழ் பத்திரிகைகளின் ஆசிரியர்களை இத்தப் பெரும் குறையை விசாரித்து இதனை நீக்குதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

## தமிழியக்க வாரம்

தமிழியக்க வாரம் எங்கும் சிறப்பாக நடைபெறுமென்றும் தமிழ் தாய்க்குத் தமிழர்கள் முதலிடம் கொடுக்கப் பின்நிற்கமாட்டார்களென்றும் எண்ணுகிறோம்.

தமிழியக்கத் தொண்டர்களாகச் சேர விரும்புவோரை உடனே 5 சதத்திற்கு ஓர் அஞ்சல் அட்டையை வாங்கித் தங்கள் பெயர், முகவரி, தொழில், வயது முதலியவற்றை எழுதிக் கையொப்பமிடுத் தமிழியக்கம் மே/பா சுதந்திரன த. பெ. 1183 கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை வாழ வைக்க வழி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போராடலாம். அரசாங்கமும் அனுதாபம் காட்டும். ஆனால் ஆங்கிலத்துக்காக தமிழ் மக்கள் போராட முடியாது. அது நீதியுமல்ல; நியாயமுமல்ல. அரசாங்கமும் அவ்விதக் கோரிக்கையை வரவேற்காது. எனவே ஆங்கிலத்தை நம்பியிருக்கும் தமிழர்கள் ஆங்கிலமுமின்றி, தமிழுமின்றித் தவிக்க நேரிடும்.

### அச்சம் வேண்டாம்

தமிழ் மக்கள் தமிழ் பகுதிகளில் வாழும் உறவினர் நண்பர்களுக்கு எழுதும் கடிதங்களின் முகவரிகளைக் கூட தமிழில் எழுத பயப்படுகிறார்களில்லை. தமிழில் முகவரி எழுதி இலங்கையின் எப்பகுதிக்கு கடிதம் அனுப்பினாலும் அது குறிப்பிட்ட வட்டம் பத்திரமாகப் போய்ச் சேரும். சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்படும் முகவரிகளை வாசித்தறிந்து கொள்ளும் தகுதி ஒவ்வொரு தபால்காரருக்கும் இருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கட்டளையாகும். எனவே தமிழில் முகவரிகள் எழுதுவதற்கு எவரும் அஞ்ச வேண்டியதில்லை.

### வேலை கிடைக்காது

கடிதங்களைத் தமிழில் எழுதுதல், தந்திகளைத் தமிழில் அடித்தல், அரசாங்கப் பத்திரங்களைத் தமிழில் நிரப்புதல், முகவரிகளைத் தமிழில் எழுதுதல் போன்ற எவ்வளவோ உரிமைகளை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு அளித்து வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்திருக்கையில் தமிழ் மக்கள் அவற்றைப் பயன்படுத்தாது, எல்லா அலுவலகங்களையும் ஆங்கிலத்தில் செய்து வருவதனால் அரசாங்க அலுவலகங்களில் தமிழ் சற்று சிறிதுசிறிதாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தமிழர்கள் இன்னும் தூங்கிக் கொடிருப்பார்களேயானால், தமிழ் அடியோடு அகற்றப்பட்டு எங்கும் சிங்களமே தனி ஆட்சி புரியும். அத்துடன் தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்க அலுவலகங்களில் வேலைகள் பெறவிருக்கும் வாய்ப்பும் இல்லாமல் போய்விடும்.

### கடைசித் தருணம்

எனவேதான் தமிழ் மக்கள் விழிப்புடனிருந்து, பொறுப்புணர்ச்சியுடன் நடந்து இப்போதுள்ள மொழி உரிமைகளைப் பாதுகாப்பதுடன் மேலும் மேலும் உரிமைகளைப் பெறுவதற்கு வழிகளை வகுக்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. மொழியைக் காப்பாற்ற உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள, தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கத்தில் வேலைகள் பெறும் வாய்ப்பை நிலை நிறுத்த தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள கடைசித் தருணம் இதுவே. என்னகதி நேருமோ தெரியாது.

### தமிழ் வாழ......

இசை அரங்கில் தெலுங்கு; இலக்கிய நிகழ்ச்சிகளில் வடமொழி; அரசியலில் ஆங்கிலம்; அடுப்பங்கரையில் தமிழ் என்றுள்ள இப்போதைய நிலையை மாற்றித் தமிழ் மொழிக்கு எங்கும் முதல் இடம் கொடுக்க வேண்டியது தமிழ் மக்களின் தலையாய கடனாகும். மணச் சடங்கு, பிற சடங்குகளில் கூடத் தமிழுக்கு முதலிடம் கொடாது தமிழ் மொழிக்குச் சம உரிமை கேட்பது கேலிக்குரியதே. எனவே தமிழ் வாழ வேண்டுமானால், தமிழ் வளர வேண்டுமானால் தமிழர்கள் தமிழைப் போற்ற வேண்டும்; தமிழ் மக்களின் உள்ளங்களில் தமிழ் உணர்ச்சி பெருக வேண்டும்; தமிழ் மக்களின் இல்லங்களில் தமிழ் ஒலிக்க வேண்டும்; இலக்கியங்களைத் தமிழர்கள் படிக்க வேண்டும்; தமிழறிஞர்களைத் தமிழ் மக்கள் போற்ற வேண்டும்; தமிழ் மக்களோடு தமிழ் மக்கள் தமிழில் பேச வேண்டும்; தமிழ் மக்களுக்குத் தமிழ் மக்கள் தமிழில் எழுத வேண்டும்; அரசாங்க அலுவலகங்களுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு எழுதும் கடிதங்களைத் தமிழில் எழுத வேண்டும்; அரசாங்கப் பத்திரங்களைத் தமிழில் நிரப்ப வேண்டும்; வசதியுள்ள இடங்களில் தந்திகளைத் தமிழில் அடிக்க வேண்டும்; இல்லங்களில் நடைபெறும் மணச்சடங்கு, பிற சடங்குகளையெல்லாம் தமிழில் செய்ய வேண்டும்; குழந்தைகளுக்கு, இல்லங்களுக்கு; விடுதிகளுக்கு, வியாபார நிலையங்களுக்கு தூய, இனிய தமிழ்ப் பெயர்களைச் சூட்ட வேண்டும்; தமிழில் கலந்துள்ள அன்னிய சொற்களைக் களைந்து தூய தமிழை வளர்க்க வேண்டும்; தமிழ் மக்களின் உள்ளங்களெல்லாம் தமிழ் உள்ளங்களாக மாற வேண்டும். அன்றுதான் தமிழன்னையின் குனிந்த தலை நிமிரும்; அவிழ்ந்த கூந்தல் முடியப் பெறும்; பெருகிய கண்ணீர் வற்றும். அப்போது தனிச் சிங்களச் சட்டம் கூடப் பொடிப் பொடியாகும்! தமிழ் மொழி வாழும்! தமிழ் மக்களின் வாழ்வு சிறக்கும்!

நாளை நாளை என்னாது, இன்றே இப்போதே தமிழ் மக்கள் தங்கள் அலுவல்களையெல்லாம் தமிழில் நடத்தத் தொடங்குவதுடன், ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் வாழும் தமிழ்ப் பற்றுக் கொண்டோர் வீடுவீடாகச் சென்று பிரசாரம் செய்து, இலட்சியம் ஈடேறப் பணிபுரிய வேண்டும். வாழ்க தமிழ்ப் பற்று! வாழ்க தமிழ்!

### சேக்கிழார் சங்கம்

மேலைக்கரம்பன் சைவம் வளர்த்துத் தமிழ் காத்த சேக்கிழார் சங்க மண்டபத்தில் அணிமையில் மேற்படி சங்க மாணவர்களால் அண்ணல் காந்தியின் பிறந்த தினம் திரு சு. பரம்சோதி தலைமையில் கொண்டாடப் பட்டது.

காந்தியடிகள் நாற்பது கோடி மக்களின் விடுதலைக்காக அகிம்சை, சத்தியாக்கிரகம் ஆகிய இரண்டு ஆயுதங்களையும் கொண்டு வெற்றியடைந்தமைக்கு உறுதுணையாக உதவியது அவரின் பிரார்த்தனையும் தெய்வ நம்பிக்கையுமேயாகும். இதனை இளம் மாணவர்கள் தம் வாழ்நாளில் கடைப்பிடிக்க வேண்டும் என்று பேச்சாளர்கள் கேட்டுக் கொண்டனர்.

# மீன்பிடிகாரருக்கு...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம், நமக்கென்ன கூட்டுறவு?' என்ற மனப்பான்மையுடன் இன்றும் பலர் வாழ்கின்றார்கள். மீன்பிடிகாரர்களுக்கென வழங்கப்படும் நன்மைகளைப் பெறக்கூட வழி வகை தெரியாது இருக்கும் மீன்பிடிகாரர் அநேகர். சங்க மூலம் அவர்களின் குறைகளையும் கஷ்டங்களையும் எடுத்துக் காட்டி அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்க வேண்டும்.

### மீன்பிடிகாரர் சங்கம் அவசியம்

நீர்கொழும்புப் பகுதியில் சில மீன் பிடிகாரர் நைலோன் வலை போட்டு மீன் பிடிக்கிறார்கள். ஆனால் இம்முறை ஏனைய தோணி மீன் பிடிகாரரைப் பெரிதும் பாதிக்கின்றதாகக் கருதப்படுகின்றது. இப்படியான சிறு சிறு பிரச்சினைகளைத் தீர்த்த, மீன்பிடி தொழிலில் நீர்கொழும்பு மக்கள் கைக்கொள்ளக்கூடிய புதிய புதிய முறைகளை அவர்களுக்குப் புகட்டி அவர்கள் வாழ்க்கையை மலரப் பண்ண மீன்பிடிகாரர் சங்கம் ஒன்று நீர்கொழும்பு மீன்பிடிகாரருக்கு மிக மிக அவசியம் எனக் கருதப்படுகின்றது. (தொடரும்)

(உபயம்: இலங்கை வானொலி)

# மாணவருக்கு..


(14-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் சொல் இருக்கிறது. இச்சொல்லை சிலர் வெவ்வேறு மாவட்டங்களில் வெவ்வேறு விதமாக உச்சரிக்கின்றனர். இதை முறையாக உச்சரிக்கப் பலருக்குத் தெரிவதில்லை. பயம் என்றும், பஷம் என்றும், பளம் என்றும் இச்சொல்லை உச்சரிப்பார் பலர் இருக்கின்றனர். ழ என்னும் எழுத்து அலாதியாகத் தமிழுக்கும் மலையாளத்துக்குமே உரியதாகிறது. இவ்வெழுத்தைக் கேட்டு சரியாக உச்சரித்துப் பழகுவதற்கு பாடத்தை நாள்தோறும் உரக்க வாசிப்பது அவசியமாகிறது.

(முடிவு அடுத்த வாரம்)


வெற்றிகரமான 7-வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)



இவ்வாண்டின் ஈடு இணையற்ற முழு நீள நகைச்சுவைப் படம்.
விலா குலுங்கக் குலுங்கச் சிரிப்பூட்டிக் களிப்பூட்டும் சிங்காரச் சித்திரம்.
அஞ்சலிதேவியின் அற்புதமான நடனங்களும், காதுக்கினிய பாடல்களும் நிறைந்த படம்.
நீங்கள் ஒவ்வொருவரும் பார்த்து மகிழ வேண்டிய படம்.

டி. ஆர். ராமச்சந்திரன்—அஞ்சலிதேவி
தங்கவேலு—ஏ. கருணாநிதி
கே. சாரங்கபாணி—பிரண்ட் ராமசாமி
சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்,
பக்கிரிசாமி—டி. பி. முத்துலட்சுமி
எம். சரோஜா
முதலியோர் நடித்த

அஞ்சலி பிக்சர்ஸ்

அடுத்த வீட்டுப் பெண்

இசை—தயாரிப்பு: ஆதிநாராயணராவ் ★ டைரக்ஷன்: வேதாந்தம் ராகவையா

பின்னணி—
பி. ஸ்ரீனிவாஸ், சீர்காழி கோவிந்தராஜன்,
ராகவன், எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா,
ஜானகி, டி. வி. இரத்தினம்

வெற்றிகரமாக இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் [கொழும்பு] றெக்ஸி [வெள்ளவத்தை] வின்ஸர் [யாழ்ப்பாணம்] கிங்ஸ் [பதுளை] நெல்சன் [திருகோணமலை]

அசோகமாலா [நீர்கொழும்பு] இம்பீரியல் [மட்டக்களப்பு] வேல்ஸ் [கண்டி] ரீகல் [யாழ்ப்பாணம்]

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்—சௌகார் ஜானகி—ரங்கராவ்—கண்ணாம்பா—டி. ஆர். ராமச்சந்திரன்—இ. வி. சரோஜா
முதலியோர் நடித்த

படிக்காத மேதை

டைரக்ஷன்: ஏ. பீம்சிங்
கதை வசனம்: ஜி. கோபாலகிருஷ்ணன்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்



உள்ளத்தை உருக்கும் கதை, உணர்ச்சி மயமான நடிப்பு, காதுக்கினிய பாட்டுகள். இவ்வளவுக்கும் மேலாக சிவாஜியின் நடிப்பு. இத்தனை சிறப்புகளும் நிறைந்த இவ்வாண்டின் சிறந்த படம்.

ஒவ்வொருவரும் ... பார்த்து மகிழ வேண்டிய படம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணவருக்கு ஒரு சொல்!

**வாசிக்க வேண்டிய முறை:**

எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளுதல் கல்வியின் முக்கியமான பகுதி ஆகின்றது. நவீனக் கல்வி முறையில் எழுதும் பயிற்சி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேபோகிறது. பள்ளியில் படிக்கும் மாணுக்கன் ஒருவன் ஓராண்டுக்குள் ஓர் ஆள் சுமை நோட்டுப் புஸ்தகங்களில் எழுதி முடிக்கிருன். அப்படி அவன் எழுதியதெல்லாம் பாதுகாத்து வைக்கப்படுகிறது மாணுக்கன் ஓராண்டில் கற்ற கல்விக்கு எடுத்துக்காட்டுகளாக அவன் எழுதி வைத்தவைகள் அமைகின்றன. ஆனல் அவன் எப்படிப் படிக்கிருன் என்பதில் கருத்தைச் செலுத்துதற்கு ஆசிரியருக்கு அவகாசமில்லை. ஒரு வகுப்பிலிருக்கும் நாற்பது மாணுக்கர்களுள் ஒவ்வொருவனும் ஒவ்வொரு வாக்கியத்தைப் புஸ்தகத்தினின்று படித்து ஆசிரியருக்குக் காட்டும் வாய்ப்பு கிடைப்பது அரிது. கேட்கும் கேள்விகளுக்கு வெறும் வாய்ப்பேச்சில் விடையளிக்கும் வாய்ப்பு அடிக்கடி கிடைக்கிறது. ஆனல் பல மாணுக்கர்கள் ஒன்று சேர்ந்து விடையளிப்பதே வகுப்புகளில் பெரும்பாலும் நிகழ்ந்து வருகிறது மாணுக்கன் ஒருவன் ஓராண்டு முழுதும் வாய்திறந்து ஒன்றும் பேசாமலேயே பள்ளிப் படிப்பை அவ்வாண்டில் வெற்றிகரமாக முடித்துவிட முடியும். அவன் கற்கும் விஷயங்களைச் சரியாக எழுதிக் குவித்து விட்டால் போதுமானது; அவன் எப்படிப் பேசுகிருன்; அல்லது எப்படி வாசிக்கிருன் என்பதைக் கவனித்துப் பார்க்க ஆசிரியருக்கு அவகாசமில்லாதுபோய் விடுகிறது. இனி, வீட்டில் உள்ள மற்றவர்கள் மாணுக்கர்கள் படிப்பில் தலையிடுவதில்லை. எனவே ஊமையாகவே இருந்து கல்வி கற்பது இக்காலத்து மாணுக்கர்களுக்கு இயலும்.

**நாவுக்குப் பயிற்சி:**

ஆனல் நன்ருக வாசித்துப் பழகுதல் கல்வியின் மிக முக்கியமான பகுதியாகும். ஒரு விதத்தில் எழுதுவதைவிட வாசிப்பது மிக முக்கியமானது. சித்திரம் கைப்பழக்கம், செந்தமிழ் நாப்பழக்கம் என்பது பழமொழி சித்திரம் வரைவதும் எழுத்துக்கள் எழுதுவதும் வேண்டியவாறு நிகழ்கின்றன. நாப்பழக்கம் மட்டும் அறவே புறக்கணிக்கப்பட்டு வருகிறது. வகுப்பில் உரக்க வாசிக்க மாணுக்கனுக்குச் சந்தர்ப்பம் கிடையாது. நூற்றுக்கணக்கில் அல்லது ஆயிரக்கணக்கில் மாணுக்கர்கள் கூடியுள்ள பள்ளிக்கூடங்களில் அவர்கள் எல்லோரும் உரக்க வாசிப்பதற்கு வசதி செய்து வைக்க இயலாது. எல்லோரும் உரக்க வாசிக்க ஆரம்பித்து விட்டால் பள்ளிக்கூடம் சந்தைக் கடைபோனறு ஆய்விடும். ஆதலால் நவீனக் கல்வி முறையில் மாணுக்கன் ஒருவனுக்கு பள்ளிக்கூடத்தில் உரக்க வாசித்துப் பழக இயலாது. பல வீடுகளில் மாணுக்கர்கள் உரக்க வாசிப்பதற்குத் தடைகள் உண்டாகின்றன. ஆயினும் ஒவ்வொரு மாணுக்கனும் உரக்க வாசிப்பதை ஒரு நித்தியப் பழக்கமாகக்கொண்டு வர வேண்டும். ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்பது கோட்பாடு, இதற்குப் பல விதங்களில் பொருள் சொல்லலாம். இறைவனுடைய திருநாமத்தை ஓதாமல் இருக்க வேண்டாம் என்பது ஒரு பொருள் சத் விஷயங்களைப் பற்றிய நூல்களை ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்பது இன்னெரு பொருள் ஆகும். ஈய்விட்டு உரக்க வாசிக்காமல் ஒருநாளும் இருக்க வேண்டாமென்று நாம பொருள்படுத்துவது அவசியமாகிறது. நன்கு வாசித்துப் பழகும் பொழுதே நாவுக்கு நல்ல பயிற்சி ஏற்படுகிறது. பயிற்சியால் கிளிப்பிள்ளை ஒன்று பேசிப் பழகுகிறது. பயிற்சியின்மையால் பேசுதற்கென்றே மானுடப் பிறப்பெடுத்திருக்கும் சிறுவன் ஒருவனுக்கு சொல்வன்மை குன்றி விடுகிறது. நாள்தோறும் வாசிப்பதன்மூலம் நாவுக்கு நல்ல பயிற்சி கொடுப்பது முற்றிலும் அவசியம்.

**ஒலி வேற்றுமையை உணர்க:**

மாணுக்கன் ஒருவன் தனியாக வாசிப்பதற்கென்று தனக்கு இடம் தேடிக் கொள்ள வேண்டும். அரைமணி நேரத்துக்குக் குறையாமல் அவன் உரக்கவாசித்துப் பழக வேண்டும். உரக்க வாசித்தல் என்று சொல்லுமிடத்து பக்கத்தில் இருப்பவர்களுக்கெல்லாம் இடைஞ்சல் உண்டுபண்ணும்படி கூச்சல் போடுவது என்பதல்ல அதன் பொருள் தான் சொல்லும் சொல் தன் காதில் பட வேண்டும். முகம் சரியாக இருக்கிறதா என்பதைக் கண்ணுடியில் பார்த்துத் தெரிந்துகொள்கிறோம். சொல் சரியாக அமைகிறதா என்பதை வாசித்துக் கேட்டுத் தெரிந்துகொள்கிறோம். மாணுக்கர்களில் பல பேருக்குச் சொற்களை தெளிவுபட உச்சரிக்கத் தெரிவதில்லை. பெரும்பாலர் சொற்களை பாதி சொல்லியும் சொல்லாதும் விழுங்கி விடுகின்றனர். உரக்க வாசித்துப் பழகும்பொழுதே உச்சரிப்புக் குற்றம் நமக்கு உள்ளபடி தெரியவரும். தெளிவுபடவும் நன்ருகவும் ஒருவன் வாசிக்கின்றபொழுது, மற்றவர்கள் அதைக் கூர்ந்து கவனித்துக் கேட்க வேண்டும். பின்பு அதேபோன்று, தானும் வாசித்துப் பழக வேண்டும். தன் வாசிப்பை தானே ஆராய்கிற முறையில் பாடத்தைப் படித்து வந்தால் உச்சரிப்பில் பிழை எங்கே உண்டாகிறது என்பது நன்கு புலனுகும் உச்சரிப்பில் கிட்டத்தட்ட ஒரே விதத்திலிருக்கும் சொற்களை தெளிவுறப் பாகுபடுத்திப் படிப்பவர்கள் மிகச் சிலரே யாகும். அரம், அறம் என்னும் இரண்டு தமிழ் சொற்கள் இருக்கின்றன. படிக்கும் பொழுது இடையினரகரம் வல்லினறகரம் ஆகிய இரண்டுக்குமிடையில் உள்ள ஒலி வேற்றுமை நன்கு விளங்க வேண்டும் என்று தெளிவுற வெளிப்படுத்திப் பழக வேண்டும். பெரும்பாலோர் இடையினம், வல்லினம் இரண்டுக்குமிடையில் ஒலி வேற்றுமை உண்டுபண்ணுவதில்லை நாள்தோறும் சரியாகப் பயிற்சி பண்ணுவிட்டால் இத்தகைய ஒலி வேற்றுமை யை முறையாக உண்டு பண்ண முடியாது. பழம்

(13-ம் பக்கம் பார்க்க)

## தமிழும் வாழும்!

நினைவுள மட்டும் தமிழன்
நெஞ்சுள மட்டும், கலைகள்
புனைவுள மட்டும் எங்கள்
புனித நற்றமிழும் வாழும்!

மனையுள மட்டுர், தூண்டா
மணி விளக்கனைய ஞானச்
சுனையுள மட்டும் எங்கள்
தூய நற்றமிழும் வாழும்

மலையுள மட்டும் முத்து
மணியுள மட்டும் ஆற்றின்
அலையுள மட்டும் எங்கள்
அரிய நற்றமிழும் வாழும்!

உலகுள மட்டும் உப்புக்
கடலுள மட்டும் வானக்
கதிருள மட்டும் எங்கள்
கவின் மிகு தமிழும் வாழும்!

—மு. பொன்னம்பலம்

## "இணைமொழி இன்பம்"

—மதியமுதன்—

"அகட விகட" மாகப் பேசுவதில் "அந்தி சந்தி"யென்று பாராமல் என்னுடன் "அல்லும் பகலும்" பேசுவதாகயிருந்தாலும் இராணி "சிரிப்புக் களிப்பு"டனே பேசுவாள். விடுமுறை நாட்களில் தினத்தாள்களுடன் "தங்குதடை" யின்றி ஓடிவருவாள் எங்கள் வீட்டுக்கு. ஏன் இராணி இன்று பாடசாலைக்குப் போகவில்லையா? என்று அம்மா கேட்பாள். "வாட்டசாட்டமா"க நிமிர்ந்து நின்று "அரைகுறையாக இன்று விடுமுறை என்பாள். அன்று ஒரு நாள்—

என் அறையே "அல்லோல கல்லோலப்பட்டது" யார் யாரோ "அளவளாவு"ஞ் சத்தம் "அடிபிடி" ஓய்ந்த இடத்தில் கேட்பதுபோன்று இருந்தது உணவறையிலே உண்டு கொண்டிருந்த நான் "அமளிதுமளி என்னவோ என்று பார்க்க ஓடிவந்தேன். தங்கை சிவா ஒரு கதிரையில் ஏதோ! ஒரு நூலை ஊன்றிப் படித்துக் கொண்டிருந்தாள். எனது மேசையில் இருந்த "அன்பு மொழியா? அறிவு மொழியா?" என்ற கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தாள் சிநேகிதி இராணி. "உருவுந் திருவு" மாகவிருந்த அவர்கள் என்னுடன் பேசவில்லை. நான்!

"அங்குமிங்கும்" பார்த்தேன். அவர்கள் "அடிமுடி" அறியவர்கள் போன்று "ஆடிப்பாடி" "ஆரத்திர"ப் படித்துக்கொண்டிருந்தனர். தங்கை சிவா பேராசிரியர் மு. வ. வின் "மொழிப்பற்று" என்னும் பனுவலை "ஆர அமர" வாசித்துக்கொண்டேயிருந்தாள். "இங்குமங்குமா"க நடந்தேன் அவர்கள். "கண்ணுங் கருத்து"மாகப் படித்துக் கொண்டேயிருந்தனர்.

கேட்டீர்களா? சபா என்ருள் இராணி. "தட்டுத் தடை"யின்றி என்ன என்று கேட்டேன். வேறு என்னவாம்; உங்கள் தங்கை சிவா, அன்பு மொழியைவிட; அறிவு மொழியைத்தான் பேண வேண்டுமாம், படிக்க வேண்டுமாம். அப்போதான் "நாடுநகர்" உறவு தோன்றுமாம். "பொன்னும் மணியுங்" கொழிக்குமாம். அன்பு மொழியால் அகிலத்தை "முற்ற முடிய" ஆழ முடியாதாம் இப்படியாகக் கூறிய சிநேகிதி "மூச்சுப்பேச்சில்"லாமல் நின்ருள்.

"குறைகுற்றம்" விடுவது இயற்கை என்று "ஒளிப்பு மறைப்பில்லா"மல் நாம் அதை "ஆய்ந்தோய்ந்து" பார்ப்போம் என்று எழுந்தேன். "அற்ப சொற்பம்" படித்த தங்கை ஓடிவந்து "அணைதுணை"யாக தமிழின் அன்பு மொழியின் "அருமை பெருமை"களைக் கூறுங்கள் அண்ணு என்ருள். "அந்த சந்த"முள்ள நீங்கள் இருவருமா "அடிபிடி"ப்படுவது— "இன்னுரினியார்"போன்றல்லவா இருக்கிறது.

"ஏறக்குறைய"த் தமிழரெல்லாம் இதே "ஒட்டியுலர்ந்த" கருத்தைத்தான் கொண்டுள்ளனர், கற்கண்டுத் தமிழிலே "கணக்கு வழக்கற்ற" கலைச் செல்வங்கள் உண்டு. நான் சொல்வதைக் "கண்ணுங்கருத்து" மாகக் கேட்டுக்கொண்டிருந்தனர் இருவரும். இடையே—

தங்கை சிவா "சட்டதிட்டந்" தமிழில் இல்லையே அண்ணு! என்ருள். திட்ட வட்டமாக" அவைகளை நாம் அமைத்துக்கொள்ள வேண்டும். இல்லையே என்ற குறையை "சின்னுபின்ன" மின்றிச் செய்துகொள்ளலாம்.

இவ்வாறு உண்மையைக் கூறி அன்பு மொழியின் சிறப்பையும், பெருமையையும் விளக்கியவுடன் அவர்கள் இருவரும் "கட்டித்தழுவி"க்கொண்டனர். "கள்ளங்கபடு" அறியா அவர்கள் மூலம் கன்னித் தமிழ் கடிமணம் பரப்ப; இணை மொழி இழையோடி இனபம்பெருக்கட்டும்.

வாழ்க இன்பத் தமிழ்!

வள்ளுவர் குறள்: 35.

## மனமாசு அகற்று

அறம் எனப்படுவது யாது? நற்செயலும், நற்சொல்லும், நல்லெண்ணமும் அறமே. இம் மூன்றனுள்ளும் அடிப்படை முதன்மையாக விளங்குவது எண்ணம். எண்ணமே, சொல்லாகவும் செயலாகவும் மலர்வது; ஆகவே, எண்ணம் மாசற்றதாக— தூய்மையாக—அமைய வேண்டும். அப்போது, சொல்லும் செயலும் எல்லாமே தூய்மையாக விளங்கும்.

எண்ணம் தூய்மை பெறுவதற்கு, அது பிறக்கும் மனத்தின்கண் மாசு—குற்றம்— இருத்தலாகாது. மனத்தின்கண் மாசு இல்லாத தூய்மை பெற்றுவிட்டால், அவ்வளவே அறமாகும்; தூயமனத்தில் நல்லெண்ணமும், அதனுல் நற்செயலும் உண்டாகும்; அறம் அங்கே முளை கொண்டு கிளைத்து வளரும்.

மனத்திலே அழுக்கு வைத்துக் கொண்டு, பிறர் போற்ற வேண்டும் என்று சொல்லுகிற சொற்களும், செய்கின்ற செயல்களும் அறம் எனப்படா. பிறர் அறிய வேண்டும்; அறிந்து போற்ற வேண்டும் என்று, அழுக்கு மனத்துடன் செய்யப்படும் அவை, வெறும் ஆர்வாரமேயன்றி அறமல்ல.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற"

—பா. ஆறுமுகம்

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யின் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2.

பெயர் ........................................

பாடசாலை ........................................

விலாசம் ........................................

........................................

........................ ........................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## அல்வாய் மேற்கு சன சமூக நிலையம்

அல்வாய் மேற்கு சன சமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் கடந்த 26-10-60-ல் திக்கம் சித்தி விநாயகர் பாடசாலையில் நிலையத் தலைவர் திரு. வே. பெ. இராசஇரத்தினம் தலைமையில் நடைபெற்றது. கீழ்கண்டவர்கள் நிலைய நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு ஆ பொன்னையா, உபதலைவர்: திரு சி. விசாகரத்தினம், செயலாளர்: திரு க. தில்லை நடராசா, இணைச் செயலாளர்: திரு க. பிறைசூடி, பொருளாளர்: திரு மு. பொன்னம்பலம், வாசிகசாலை பொறுப்பாளர்கள்: திரு த. இரத்தினசிங்கம், திரு க. ஜெயபாலின, கணக்குப் பரிசோதகர்கள்: திரு சி. சின்னத்தம்பி, திரு மா பொன்னம்பலம். சங்கப் பிரதிநிதி: திரு வே. பெ. இராசஇரத்தினம்.

## தமிழ் கலவன் பாடசாலை

இரத்தினபுரியைச்சேர்ந்த திரியெல்லைத் தோட்டத் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் கடந்த 30-9-60-ல் சரஸ்வதி பூஜை திரு எஸ். டி நடராசா தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அத்தருணம் முருகபக்தர் திரு மு நல்லதம்பி "சக்தி வழிபாடு" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நடத்தினர். திரு. நல்லதம்பிக்கு பாடசாலை ஆசிரியர் திரு ஆ. லோகேஸ்வரன் பொன்னடை போர்த்திக் கௌரவித்தார்,

## ஸ்ரீ சுமன வித்தியாலயம்

இரத்தினபுரி ஸ்ரீ சுமன வித்தியாலய மாணவர் விடுதியில் அணிமையில் மகாத்மா காந்தியின் 92 வது ஜயந்தி விழா செல்வன் கி. தியாகநாதன் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மகாத்மா காந்தியின் மகிமைப் பற்றியும் அவரின் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்கள் பற்றியும் மாணவர்கள் மா. இராமசாமி, இரா. செல்வராஜ், சுப்புசாமி, ரெ. வீரையா, பெ. மாயாண்டி, மாணிக்கம் ராஜரட்ணம் முதலியோரும் மற்றும் பலரும் பேசினர்.

திருவாளர்கள் பி. ஆர். பெரியசாமி சு இராஅண்ணாதாசன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

## தமிழுணர்ச்சி ஊட்டியவர் கு. வ."

"தமிழ் மக்கள் தமிழுணர்ச்சி பெறவும் தமிழிலேயே எழுத்து பேச்சு முதலியன நடத்தவும் நமக்கிடையே ஆர்வத்தையும் உணர்ச்சியையும் அதிகமாக உண்டு பண்ணியவர் காலஞ்சென்ற வன்னியசிங்கம் அவர்கள் தான். அவரது பணியைப் போற்றுகின்ற எல்லா நண்பர்களும் அவர் விட்டுச் சென்ற வழியைத் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் ஆட்சியினரோடு நடாத்துகின்ற எல்லா கடிதப் போக்குவரத்துகளும் தமிழிலேயே நடாத்தப்பட வேண்டுமென்ற எண்ணம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டேடாக வேண்டும்."

இவ்வாறு 1-10-60 மாலை கொழும்பு நாராயண குரு மண்டபத்தில எம் ஜி ஆர் மன்ற ஆதரவில் மன்றத் தலைவர் திரு. கம்பனைதாசன் தலைமையில நடைபெற்ற வன்னியசிங்கம் நினைவு நாள் கூட்டத்தில் உரையாற்றிய மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. ராஜதுரை கூறினார். திரு. தாமரைச் செல்வன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திருவாளர்கள் செல்ல பாண்டியன், பி. எம். ஜலால், ஆகியோரின் சொற்பொழிவுகளுக்குப்பின் பேசிய இ தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. அதிமணி தீண்டாமை, சாதிவெறி போன்றவைகளைத் தகர்த்தெரியவும் வன்னியசிங்கம் பாடுபட்டாரெனக் கூறினர். ஜனுப் மசூர் மௌலானு தமிழ் மக்கள் ஒன்றுபடவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

ஒரு தலைசிறந்த நடிகரின் பெயரால் விளங்கிவரும் மன்றம், ஒரு தலைசிறந்த தலைவரின் நினைவு தினத்தைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதென்று திரு டி. எம். பீர்முகம்மது பேசுகையில் கூறினர். திரு. கிதாரின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

## இஸ்லாமிய மாணவர் சங்கம்

அகில இலங்கை இஸ்லாமிய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சென்ற 1-10-60-ல் கொழும்பு சாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது மேற்படி பொதுக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தவர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்: அல்-ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் (கல்வி மந்திரி), தலைவர்: ஜனுப் மன்சூர் மரிக்கார், உபதலைவர்கள்: ஜனுப்கள் ஏ. எஸ். எம். ஒமர், யூ எல். எப். பாருக், யூ. எம. மொஹிதீன்.

கௌரவ பொதுச் செயலாளர்: ஜனுப் ஏ. ஏ. எம். மர்லீன் கௌரவ உப செயலாளர்: ஜனுப் எம் எச். எம். சம்சுதீன், தனாதிகாரி: ஜனுப் அஹமத் முபாரக் அலி, கணக்குப் பரிசோதகர்: ஜனுப் ஹாஜி ஹஸன், நிர்வாகச் சபை அங்கத்தவர்கள்: ஜனுப்களான [illegible] யூ. தாஹா செய்னுதீன், எம ஆர். எம் ஜிப்ரி, ஏ. வி எம். ஸுப்யான், எம். என். எம். நஸீர், கே. எம் ஏ. ஹஸன், ஏ. எஸ் எம். மரிக்கார், ஏ. எம். எம். ஹப்சா, எம. ஆர எம் பாலிஹ் மொஹிதீன்.

பின்னர் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## கரம்பன் கிழக்கு சன சமூக நிலையம்

"சமய வழிபாடுகள் அருகி வரும் இந்நாட்களில் நம் பழந்தமிழர்கள் தொடர்ச்சியாகப் பூரித்து வந்த கலைத் தெய்வ வழிபாட்டை, ஆண்டுகள் தோறும் நவராத்திரி இறுதி நாளில் கரம்பன் சன சமூக நிலையத்தார் வெகு விமர்சையாக கொண்டாடி வருவதை அறிந்து பெரிதும் மகிழ்ந்து பூரிப்படைகின்றேன்"

இவ்வாறு கடந்த 30-9-60-ல் கரம்பன் சன சமூக நிலையத்தில் நிகழ்ந்த "நவராத்திரி விழா"வின் போது திரு. து. உமாநிசிவம் கூறினர். இவ் விழாவுக்கு நிலையத் தலைவர் திரு க தாமோதரம் பிள்ளை தலைமை தாங்கினர்.

பின் திரு மு. இராசபதி அவர்கள் "சைவமும் மாணவர்களும்" என்னும் விடயம் பற்றியும் திரு சோ. மகாலிங்கம் 'சைவ சமயம் என்னும் விடயம் பற்றியும் பேசினர்கள் பேச்சுக்களின் பின் திரு க. விஜயகுமாரின் இன்னிசை விருந்துடனும் திரு க. நவரெத்தினத்தின் நன்றியுரையுடனும் விழா முடிவடைந்தது.

## இ. தி. மு. க. திம்பிரிகசாயா கிளை

இலங்கைத் திராவிடர் முன்னேற்றக் கழக திம்பிரிகசாயா கிளையின் முதற் செயற்குழு கூட்டம் கடந்த 3-10-60-ல கிளையின் செயலாளர் திரு. ஏ சபாபதி தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் மாநில மாநாட்டுக்கும், கழகப் பத்திரிகை நடத்துவதற்கும் கிளையின் சார்பில் நிதி திரட்டுவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாளர்கள் கே. சத்தியசீலன், கே. எஸ் புரட்சி மணி. மா க கரிகாலன், சி. கா. தே. ராஜா, கே சிவலிங்கம். எஸ். கலைநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இ. தி மு க. பொதுச் செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன் கழக வளர்ச்சிக்காக கைக்கொள்ள வேண்டிய முறைகள் குறித்து உரை நிகழ்த்தினர்

துணைச் செயலாளர் திரு. ஏ கலைமணியின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

## கவின் கலை நாடக மன்றம்

கவின் கலை நாடக மன்றத்தின் உறுப்பினர் கூட்டம் கடந்த 25-9-60-ல் தலைவர் ஞா. ஜோன் சாமிதாசன் தலைமையில் நடைபெற்றது.

"கடந்த மாதம் அரங்கேற்றப்பட்ட 'காதலன் தந்த கணவன்' என்ற நாடகத்திற்கு தலைமை தாங்கிய கலாநிதி வித்தியானந்தம் தற்சமயம் ஈழத்தில் இருந்து வரும் நாடகக் கலையின் நிலை பற்றி மிகத் தெளிவாகவும் உள்ளது உள்ளபடியும் எடுத்துக் கூறினர். அவருக்கு எமது பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

பின் நாடகக்கலை வளர்ச்சி பற்றி செல்வி. சித்தி பௌசியா, தோழர்கள் எம். டி. மோசஸ், கே. வி. மாயகிருஷ்ணன், ஏ. எல். எம். ஜெகரியா, நயிம் ஆகியோர் பேசினர். முடிவில் மன்றத்தின தயாரிப்பில் தற்சமயம் இருந்து வரும் "நாடோடி மகன" என்ற நாடகத்தை வரும் நவம்பர் மாதம் 13-ம் தேதி அரங்கேற்றுவது என்ற முடிவுடன் கூட்டம் இனிது கலைந்தது.

## இராமகிருஷ்ண மாணவர் விடுதி

அட்டன் ஸ்ரீ இராமகிருஷ்ண மாணவர் விடுதியில் சரஸ்வதி பூஜை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விடுதி மாணவர்களுடன் ஸ்ரீ இராமகிருஷ்ண கலாசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள்.

"தொண்டன்" ஆசிரியர் திரு எஸ் நாதன் மேகலையில் கல்விக்காக விளங்கும் ஒரு தெய்வப் பெண்பாலாய் அமைந்ததின் இரகசியத்தை மாணவர்கள் விளங்குந் தன்மையில் எளிய தமிழ் நடையில் எடுத்துரைத்தார்கள்.

விடுதி அதிபரின் நன்றியுரையுடன் விழா முடிவடைந்தது.

## இந்து மாணவர் மன்றம்

கட்டைபறிச்சான் வருகுலப் பிள்ளையார் கோவில் வீதியில் கட்டைபறிச்சான் இந்து மாணவர் மன்றக் கிராமச் சங்கத் தலைவர் திரு. சு. குணநாயகம் அவர்களின் தலைமையின் கீழ் அணிமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர் திரு சு. குணநாயகம், காரியதரிசி: திரு வீ. மயில்வாகனம், தனாதிகாரி: திரு ச. செல்வநாயகம், போசகர்கள்: திருவாளர்கள் சி. நடராசா, சேர். கந்தையா வைத்தியநாதன், திரு த. ஏகாம்பரம் (பாராளுமன்ற உறுப்பினர்).

## அசோகா மாணவர் மன்றம்

எல்கடுவை அசோகா பாடசாலை மாணவர் மன்றத்தின் ஆதரவில் அணிமையில் சரஸ்வதி பூசை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

## மாணவர் மன்றம்

மாத்தளை பலாபத்வெல அரசினர் தமிழ்க் கலவன் சிரேஷ்ட பாடசாலை மாணவர் மன்றத்தின் ஆதரவில், கடந்த 29-9-60-ல் பாடசாலை மண்டபத்தில் கலைவாணி விழா கொண்டாடப்பட்டது.

தலைமை ஆசிரியர் திரு. நா. கந்தையா கூட்டுப் பிரார்த்தனை நடாத்தினர். திரு. சு. சாந்தமூர்த்தி ஆசிரியர் கலந்து கொண்டார். சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர், மாத்தளை மாணவர் மன்றத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் ஆகியோர் அனுப்பியிருந்த ஆசிச் செய்திகள் விழாவில் வாசிக்கப்பட்டன. மன்றக் காரியதரிசி பொ. பூபாலன் அனைவருக்கும் நன்றியுரை பகர்ந்தார்.

# ஓருலகக் கொள்கை ஈராயிரம்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழ் மக்கள் வாழ்க்கைச் சிறப்பு

சங்க இலக்கியங்கள் தமிழரின் உயர்ந்த பண்பையும் நன்கு புலப்படுத்துகின்றன. சேர சோழ பாண்டிய அரசர்களுடைய தலை நகரங்களைப் பற்றி அவை வருணிக்கின்றன. இந்நகரங்களிலே பலநாட்டு மக்கள் சேர்ந்து உறைந்தனர். நகராட்சி நன்முறையில் நடைபெற்றது. பெருவீதிகளும் சிறு வீதிகளும் செம்மையாக அமைக்கப்பட்டன. வீதிகள் வெளிச்சமிடப்பட்டிருந்தன. பல எழுநிலைமாடங்கள் நகர்களை அலங்கரித்தன. நகர மக்களிற் பலர் பெருஞ் செல்வர்களாயிருந்தனர். இலக்கியம், இசை, நாடகம் ஓவியம் முதலிய கவின் கலைகள் போற்றி வளர்க்கப்பட்டன மகளிர் விலையுயர்ந்த அணிகளையும் ஆடைகளையும் அணிந்தனர்; நறுமணம் மிக்க பூமாலைகளாலும் சாந்துகளாலும் தம்மை அழகுபடுத்தினர்.

ஊராட்சி மன்றங்கள் செம்மையாகத் தொழிலாற்றின; நாட்டு மக்கள் சமூக வாழ்வுக்கு வேண்டிய பல தொழில்களையும் செய்து நாட்டின் செல்வத்தைப் பெருக்கினர்.

### அரசவமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலோச்சினர் அவருக்கு அமைச்சர் கூறும் பல அவைகள் இருந்தன. ஐம்பெருங் குழு எண்பேராயம் முதலியனவும் அரசவமைப்பில் [illegible] இருந்தன.

சமயம், தத்துவம், முதலிய துறைகளிலும் தமிழர் முன்னேற்றமடைந்திருந்தனர். தமிழ் நூல்களிற் பெரும்பாலானவை அறநெறிகளைப்பற்றிக் கூறுகின்றன இவை ஒவ்வொரு மனிதனுடைய கடமைகளையும் அவன் சமுதாயத்துக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் வலியுறுத்தி ஒரு சிறந்த சமுதாய அமைப்புக்கு வழிகோலின. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் பேருண்மையை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் உணர்ந்து கடைப் பிடிக்க முயன்றனர் நாகரிக முதிர்ச்சியிற் தோன்றும் இக் கருத்து தமிழ் மக்களின் பரந்த நோக்கத்தையும், உயர்ந்த குறிக்கோளையும், ஓருலகக் கொள்கையையும், சமரச சன்மார்க்கத்தையும் நன்கு புலப்படுத்துகிறது

### அன்புதான் அடிப்படை

பல்லாயிர ஆண்டுகளாக வாழ்ந்து படிப்படியாக ஒப்பற்ற உயர்நிலையடைந்த தமிழ் மக்களின் வரலாற்றையும் நாகரிகச் சிறப்பையும் விரித்து விளக்குதற்கு எனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் போதாது எனவே உங்கள் கருத்தைக் கவரத்தக்க சிலவற்றைத் தொட்டுக் காட்டியுள்ளேன். இனி, இவற்றை விரிவாக அறிய முயலுதல் உங்கள் கடமையாகும் என் உரையை முடிப்பதற்கு முன் தமிழ் இலக்கியத்தின் தனிச் சிறப்பை உங்களுக் கெடுத்துக் காட்ட விரும்பினேன். விரிந்துலகவாய்ப்பட்டது அன்பை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்துளது தமிழிலக்கியத்தின் பெரும் பகுதி 'அகப் பொருள்' பற்றிய தமிழ் இலக்கியச் செல்வத்துக்கு இணையான இலக்கியத்தை இவ்வுலகில் வேறெம் மொழியிலும் காணல் முடியாது தமிழ்ப் பண்பாடு அன்பிலேயே தோய்ந்துளது என்பதை இவ்விலக்கிய நூல்கள் நன்கு காட்டுகின்றன.

### திருக்குறள்

தமிழிலக்கிய நூல்களிலே தமிழ்ப் பண்பாட்டின் களஞ்சியமாக விளங்குவது திருக்குறளேயாகும். தமிழரோடு தொடர்பு கொண்டோர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் பேராற்றல் படைத்தது இந் நூல். இதன் பெருமை உலகெங்கும் பரந்துளது; பல மொழிகளில் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது இந் நூலைப் பற்றி அல்பேட்டுச் சுவைசா எனும் பேரறிஞர் 'உலக இலக்கியத்திலே இந் நூலைப் போலச் சிறந்துயர்ந்த ஞானத்தைக் கொண்ட நூல் வேறில்லை" என்று கூறியுளர் இத்தகைய உலகப் பெருநூல் இன்னும் உங்கள் தாய மொழிகளில் மொழிபெயர்க்கப்படாவிடில் இதனை உடனே மொழிபெயர்க்க ஆவன செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

— (முற்றும்)

# தீபாவளி தினத்தை சிறப்பாகக் கொண்டாட அக்டோபர் 19-ம் தேதி புதன் முதல்

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கும்பனித்தெரு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

மனோகரா [யாழ்ப்பாணம்] விஜயா [மட்டக்களப்பு] லக்ஷ்மி [இரத்தினபுரி] விஜிதா [மஸ்கேலியா]

சம்ரொக் [வென்னப்புவ] ஸ்ரீகிருஷ்ணா [திருகோணமலை] மொடர்ன் [பதுளை] மொடர்ன் [பண்டாரவளை]

தீவொளி [நுவரெலியா] ஜெமினி [ராகல] வெம்பிளி [கண்டி]

ஒரு நாட்டு வீரனின் வரலாற்றை சித்தரிக்கும் படம்
விஜயபுரி வீரன்

பயங்கரமான மயிர்க்கூச்செறியும் சண்டைகளும் பல வீரதீரச் செயல்களும், உள்ளத்தை உருக்கும் பல சம்பவங்களும் நிறைந்த படம்.

குடும்பத்துடன் சென்று ஒவ்வொருவரும் பார்த்து மகிழவேண்டிய படம்.



சி. எல். ஆனந்த்—அசோகன்
ராமதாஸ்—எஸ். ராமராவ்
ஹேமலதா - காமினி - சந்திரகாந்தா
சகுந்தலா—மாஸ்டர் கோபால்
முதலியோர் நடித்த



சிட்டாடல்

## விஜயபுரி வீரன்

டைரக்ஷன்:
ஜோசப் தளியத் Jr.

சங்கீதம்:
டி. ஆர். பாப்பா

தயாரிப்பு:
ஜோஸப் தாமஸ்

பின்னணி:
ஏ. எம். ராஜா—ஜிக்கி—பி. சுசிலா—ஏ. பி. கோமளா—எஸ். வி. கிருஷ்ணன்—எஸ். ஜானகி—டி. வி. ரத்தினம்—டி. எஸ். ராஜேஸ்வரி.

# கடைசி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எஸ் எஸ். ராஜேந்திரன்,
கே. ஆர். ராமசாமி,
மாலினி மற்றும் பலர் நடித்த

## தலை கொடுத்தான் தம்பி


இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 185ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்தை சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 அக். 16-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org